# தமிழகக் கோட்டைகள்

## சேலம் மாவட்டம்

17



க. இலக்குமிநாராயணன்

# தமிழகக் கோட்டைகள்

## சேலம் மாவட்டம்

க. இலக்குமிநாராயணன், எம். ஏ.,
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம், சேலம்

பவதி பதிப்பகம், சேலம்-636 007.

முதற்பதிப்பு - ஜுன் 1988

© உரிமை ஆசிரியருக்கே.

நூல் கிடைக்குமிடம் :

**சோதிமணி**
10, இராசமாணிக்கம் தெரு,
சேலம்-636 008.

| | | |
|---|---|---|
| Title of the Book | : | THAMIZHAKAK KOTTAIKAL SALEM MAVATTAM NA, 211,8 (MV) M 8 725 - 18095411 |
| Author | : | K. LAKSHMINARAYANAN, M.A., |
| Language | : | TAMIL |
| Paper Used | : | MAP LITHO |
| Type Point Used | : | 10 POINT |
| Size of the Book | : | DEMY 1/8 |
| No of Pages | : | 110 + 10 + 16 |
| Printers | : | PONMUDI ACHAGAM, SALEM-3. |
| Publishers | : | BHAVTHI PATHIPPAKAM 10, RAJAMANICKAM STREET, SALEM-636 007. |
| Price | : | Rs. 20/- |

# FORWARD

Forts are magnificiant even in desolation. When they were in their full glory, they must have been awesome. They represent the splendour of powers, their very structures evoke this. Invariably they have history written all over them.

There are many forts in Tamil Nadu which bear these attributes. The Fort St. George, the Vellore Fort and the Gingee Fort are some of the well known ones among them. What is striking is that the Salem District has a large share of glorious forts; the Attoor Fort, the Omalur Fort. the Sankagiri Fort, the Namakkal Fort, the Salem Fort. Thiru K. Lakshminarayanan, the Curator of the Government Museum, Salem was fascinated by them, studied them and has brought out this book documenting systemetically their history. their lay out and the art and architecture associated with them. Nothing reflects so well the changing fortunes of the various rulers who held. sway in this area on this account of the forts found here.

It is an interesting study backed up by copious notes and references. glossaries of words and lists of the illustrious rulers and the dynasties who constructed the forts and held them for a long time. This is a fine addition to books on a rare aspect of history.

*N. HARINARAYANA,*
Director of Government Museums,
*Government of Tamilnadu.*

SALEM.
26th MARCH 1988.

திரு. **அ. மு. சுவாமிநாதன்**, இ. ஆ. ப.
அரசு செயலர் மற்றும் ஆணையர்
நிதித்துறை தமிழ்நாடு அரசு.

15—5—1988

# அணிந்துரை

எனது இனிய நண்பர் திரு. இலக்குமிநாராயணன் அவர்கள் இயற்றியுள்ள ''தமிழகக் கோட்டைகள் — சேலம் மாவட்டம்'' என்ற நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்புக் கிட்டியதற்குப் பெரிதும் மகிழ்கிறேன்.

வரலாற்றுச் செய்திகளை அறிவதற்கான ஆதாரங்களில் கோட்டைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அந்நாட்டுக் கோட்டைகள் வாயிலாக ஓரளவு விளங்கும்; அதேபோன்று ஒரு காலகட்டத்தின் சிறப்பியல்புகள் அக்காலத்தில் உருவாக்கப்பட்ட கோட்டைகள் மூலம் தெரியும். மற்றும் ஒரு சமுதாயத்தின் தொழில் வளர்ச்சி கைவினைத் திறன், போர் ஆற்றல் முதலியவையும் அச்சமுதாயத்தால் தோற்றுவிக்கப்பட்ட கோட்டைகளின் வடிவமைப்பு,

கட்டுமானமுறை ஆகியவற்றால் அறியப்படும். எல்லாவற்றிற்கும் மேலாக அன்றிருந்த மக்கள் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவைகளையும் அம்மக்கள் வாழ்ந்த கோட்டைகளின் மூலம் அறிந்துகொள்ள இயலும்.

இந்நோக்கில் பார்த்தால் தமிழகக் கோட்டைகள் பெரும் சிறப்புக்குரிய வரலாற்றுப் பேழைகளாகும். அவற்றைத் திறந்து அங்குள்ள தகவல் களஞ்சியங்களை நமக்கு விளக்க திரு. இலக்குமி நாராயணன் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. ஒவ்வொரு மாவட்டக் கோட்டைகளைப் பற்றியும் ஒரு நூல் என்றவகையில் முதல்முதலாக சேலம் மாவட்டக் கோட்டைகள் பற்றி அவர் எழுதியுள்ள நூல் இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது.

இந் நூலைப் படிக்கும்போது ஆசிரியரின் வரலாற்று அறிவு, ஆராய்ச்சித் திறன், தமிழ்மொழி உணர்ச்சி, தமிழ் இனப்பற்று ஆகியவை நமக்குப் புலனாகின்றன. அதேநேரத்தில் எவ்வளவு கடுமையாக அவர் உழைத்திருந்தால் இவ்வளவு செய்திகளைச் சேகரித்து அவர் நமக்கு அளித்திருக்கமுடியும் என்பதும் தெளிவாகின்றது.

ஆசிரியர் சேலம் மாவட்டக் கோட்டைகள் ஒவ்வொன்றினைப் பற்றியும் விரிவான தகவல்களை நமக்குத் தருகின்றார். அவை கட்டப்பட்ட காலம், அவற்றின் அமைப்பு முறை, அவை சந்தித்த போர்கள், அவற்றின் வீழ்ச்சி பற்றிய செய்திகள் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் அங்கு கோலோச்சிய மன்னர்களின் மாட்சி, அங்கிருந்த மக்களின் அன்றாடவாழ்க்கை முறை, பற்றிய சில குறிப்புகளும் ஆங்காங்கே சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. மேலும் சில சுவையான செவிவழிச் செய்திகளும் இந்நூலுக்கு மெருகூட்டுகின்றன. உதாரணமாக ஆத்தூர்க் கோட்டை எழுந்த சூழ்நிலை, சங்ககிரிக் கோட்டையில் சங்கிலி வீச்சு முதலியவற்றைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடலாம். கெட்டி முதலிகள், சென்னம நாயக்கர், இலட்சுமி நரசிம்மய்யர் ஆகியோர் பற்றிய குறிப்புகள் ஆசிரியரின் ஆராய்ச்சித்திறனை நமக்கு அறிவிக்கின்றன. மேலும் பல விவரங்களைத் தெரிந்து கொள்ள வாசகர்கள் செல்ல வேண்டிய வழிகளை நூலின் இறுதியில் உள்ள அடிக்குறிப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

இந்நூலுக்கு மேலும் பொலிவூட்டுவது இதிலுள்ள புகைப் படங்களாகும். கோட்டைகளைப்பற்றிய ஆசிரியரின் வர்ணனை களைப் படித்த பிறகு அவற்றை நேரில் பார்க்கும் உணர்ச்சி தோன்ற இப்புகைப்படங்கள் உதவி செய்யும். இந்நூலின் இன்னொரு முக்கிய அம்சம் இதன் பிற்சேர்க்கைகள் என்று நினைக்கி றேன். சொல் விளக்கங்களும், சிற்றரசர்கள் காலம் பற்றிய தகவல்களும், கல்வெட்டுகள் பற்றிய குறிப்புகளும், இராபர்ட் சிவல் எழுதிய குறிப்புகளும் சேர்ந்து இந்நூலை முழுமையாக்கு கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

நண்பர் இலக்குமி நாராயணனுடைய எழுத்துத் திறன், ஆராய்ச்சித்திறன் ஆகியவற்றை நான் மனதாரப் பாராட்டு கிறேன். இந்நூலுக்குத் தமிழ் மக்கள் அளிக்கும் பேராதரவின் மூலம் அவர் மற்ற மாவட்டக் கோட்டைகளைப் பற்றியும் விரைவில் எழுத உற்சாகமூட்டப்படுவார் என்று உறுதியாக நம்புகிறேன்.

(ஒப்பம்) அ. மு. சுவாமிநாதன்

# வாழ்த்துரை

காதலும் வீரமும் இரு கண்களாகக் கருதப்பட்ட சங்க காலம் முதல் தமிழக வேந்தர்கள் கோட்டைகளைக் கட்டி அரசாண்டு வந்துள்ளனர். மதுரையில் இருந்த கோட்டையின் அமைப்பையும், கோட்டையில் அமைந்திருந்த பொறிகளின் சிறப்பையும் சிலப்பதிகாரம் அறிவிக்கின்றது. பாரி வள்ளல் மூவேந்தரும் வெல்ல முடியாதவாறு பறம்புமலையில் கோட்டை கட்டி வாழ்ந்தான் எனப் புறநானூறு கூறுகின்றது. இடைக் காலத்திலும் பிற்காலத்திலும் பல வமிச அரசர்களும் சிறியதும், பெரியதுமான கோட்டைகளைக் கட்டி அரசாண்டு வந்தமையை வரலாறு கூறும். அவற்றுள் மிகச் சிலவே இன்று காணப்படு கின்றன. இந்நிலையில் சேலம் மாவட்டத்தில் காணப்படும் கோட்டைகளைப் பற்றிய செய்திகளைக் கூறும் வகையில் இந் நூல் அமைந்துள்ளது.

இந்நூல் ஏழு அத்தியாயங்களையும் மூன்று இணைப்புகளை யும் கொண்டுள்ளது. முதல் அத்தியாயத்தில் பழந்தமிழ் இலக்கியங்களில் கோட்டையைப் பற்றி காணப்படும் செய்தி களும், சோழர் பாண்டியர் காலக் கோட்டைகள் பற்றிய கல் வெட்டு மற்றும் செப்பேடுகளின் மூலம் அறியப்படும் செய்தி களும் கொங்கு பகுதியில் பல கோட்டைகள் தோன்றுவதற்கான சூழல்கள் 16, 17–ஆம் நூற்றாண்டுகளில் நிலவியிருந்தமையும் விளக்கப்பட்டுள்ளன.

2, 3, 4, 5, 6 அத்தியாயங்களில் முறையே ஆத்தூர், ஓமலூர், சங்ககிரி, சேலம், நாமக்கல் ஆகிய இடங்களின் கோட் டைகள் தோன்றிய வரலாறு, கட்டிடக் கலை அமைப்பு அவற் றின் தற்போதய நிலை ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து கோட்டைகளுள் ஓமலூர் கோட்டையும், சேலம் கோட் டையும், அவற்றின் சுவடுகளைப் பெருமளவு இழந்துவிட்டவை ஏனைய மூன்றும் இன்றும் வரலாற்றுச் சின்னங்களாக விளங்கு

கின்றன. மைசூர்—மதுரை போர்களும் ஐதரும், திப்புவும் ஆங்கிலேயருடன் நடத்திய போராட்டங்களும் இக்கோட்டைகளின் தோற்றத்திற்கும்,இயக்கத்திற்கும் அழிவிற்கும் பின்னணிகளாக இருந்தமையும் விளக்கப்பட்டுள்ளன.

ஏழாவது அத்தியாயத்தில் சுவடுகள் காண இயலாத வகையில் முற்றிலும் அழிந்துவிட்ட, ஆனால் வரலாற்றுக்குறிப்புகளில் காணப்படும் ஏனைய சேலம் மாவட்டக் கோட்டைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. இணைப்புகளில் கோட்டையைக் குறித்த பழந்தமிழ்ச் சொற்கள், 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் வழங்கிய சில சொற்களுக்கான சொல்விளக்கம்,மைசூர், மதுரை மன்னர்கள் மரபுப் பட்டியல், சேலம் பாளையக்காரர்கள் மற்றும் கெட்டி முதலிகள் பட்டியல், புதிய கல்வெட்டுக்கள் மூன்றின் படிகள், இராபர்ட் சீவல் தனது நூலில் சேலம் மாவட்டத்தில் இருந்த கோட்டைகள் பற்றி குறிப்பிட்டுள்ள செய்திகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

இந்நூல் ஆசிரியர் சேலம் மாவட்டக் கோட்டைகளைப் பற்றிய அருஞ் செய்திகளை மிகுந்த ஊக்கத்துடன் தொகுத்து, எளிய நடையில் அளித்துள்ளமை பாராட்டிற்குரியதாகும். ஆசிரியருக்கு என் மனமுவந்த பாராட்டுக்கள். இத்தகைய விளக்க நூல்கள் மேலும் வெளிவர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

*Dr.* **C. E. இராமசந்திரன்,**
M. A., M. Litt , Ph. D.,
தலைவர் இந்திய வரலாற்றுத்துறை
சென்னை பல்கலைக் கழகம்
சென்னை-600005.

# பதிப்புரை

பொருள் முதல் வாதத்தையும், பொதுவுடமைத் தத்துவத்தையும் நிறுவிக்காட்ட காரல்மார்க்சை உந்திய சக்தி மனித நேயமே. நலிந்தவரின் துயரங்கள் மலிந்த அவலங்களுக்கு கசிந்துருகிய காரல் மார்க்சு, அவர்களின், விடியலுக்கென பிரசவித்தவைதான் பொருள்முதல்வாதமும் பொதுவுடமைத்தத்துவமும். இதைமறந்து, மனிதநேயத்தைத்துறந்து பொருள்முதல்வாதமே பெரிதென போற்றித்திருவகவல் படிப்பது,வியாபாரச்சூதட்டத்திற்கு வழிகோலி சுரண்டலுக்கு வடம் பிடிக்க வைத்துவிடும். பொருள் முதல்வாதம், அறிவியல் வளர்ச்சி, யதார்த்த நிலை என்கின்ற சொற்களை, அவற்றின் அடிப்படை நோக்குகளிலிருந்து அப்புறப்படுத்தி, படுகொச்சையாக நாம் தவறானவழிகளில் பயன் படுத்துகிறோம். இதன் விலைவாக நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஒரு வியாபாரத்தனமே மேலோங்கி மனித உறவின் சுகமான கதகதப்பை, அன்பை, இதய நேயத்தை அநுபவிக்க இயலாது திணறுகிறோம். நமது இந்த சமுதாயச் சீரழிவு சமூக நலத்திட்டங்களிலும், நாட்டு நிர்மாணப் பணிகளிலும்கூட ஊடுருவி, அங்கு கூட மக்களை வியாபரச்சந்தையாக எடுத்துக் கொள்ளும் போக்கு வேகமாக வளரும் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அறிவியல் வளர்ச்சியும், பொருளாதரா வளர்ச்சியும் வாழ்க்கையை அநுபவிக்க உதவும் கருவிகளே என்ற உண்மையை உணராமல், அவற்றை வளர்ப்பதாகக் கூறி, மானிடத்தின் மாண்பிற்கு ஒவ்வாது செயல்படும் போக்கு உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அழகுணர்வையும் அருளுணர்வையும், அறிவியல் வளர்ச்சிக்கு சமமாக வளர்த்தால் தான் இது சாத்தியமாகும். உண்மையில் அழகுணர்வும் அருளுணர்வும் வளர தாதியாக இருக்கத்தான் அறிவியல் வளர்ச்சி மனித குலத்திற்கு

தேவைப்படுகிறது. ஆனால் பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மிகச்சில மானிட இயல் துறைகளை மட்டுமே நீண்ட காலமாக ஆழமின்றி ஆனால் அகலமாக போதித்து வருவதால் அவற்றின் மீது ஏற்பட்ட திகட்டல், அவற்றை ஒரேயடியாக ஒதுக்கித்தள்ளும் தவறான கொள்கைக்கு ஆதரவு கிடைக்க வைத்துவிட்டது நாளுக்கு நாள் பெருகும் அறிவியல் துறைகளை நாட்டின் பாடதிட்டத்தில் உடனுக்குடன் அறிமுகபடுத்தாமல் விட்டதவற்றிற்கு இருக்கின்ற மானிடவியல் துறைகளை அழிய விடுவது சரியாகாது. மனிதப்பண்புகளை வளப்படுத்தும் வரலாறு, இலக்கியம், தத்துவம் போன்ற துறைகள் சமுதாயத்தின் மனப்பசுமைக்கு நீர்வார்க்கும் கொண்டல்கள். இதனை மிக உறுதியாக நம்பும் நாம், வரலாற்று ஆய்வு நூல்களை, குறிப்பாக தமிழகத்தின் பண்பாட்டு வரலாற்றை விளக்கும் நூல்களை வெளியீடுவதென எண்ணியுள்ளோம், எங்களது இந்த இலக்கின் முதற்படியாக திரு. க. இலக்குமிநாராயணன், எம். ஏ., அவர்கள் எழுதிய தமிழகக் கோட்டைகள் சேலம் மாவட்டம் என்ற நூலை வெளியிடும் வாய்ப்பு கிடைத்தமைக்கு பெரிதும் மகிழ்கிறோம். தமிழக மக்கள் எங்கள் முயற்சிக்கு தரும் நல்லாதரவு, இப்பணியில் மேலும் தீவிரமாக ஈடுபட எங்களை ஊக்குவிக்கும்.

பவதி

பவதி பதிப்பகம், சேலம்.

# என் உரை...

1984–ஆம் ஆண்டு மே மாதம் ஒரு நாள் மாலை சில நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சு பத்திரிகைகளில் தரமான செய்திகளைத் தருவதில் உள்ள சாத்தியக்கூறுகளை அலசுவதாகமாறியது. இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்ட மாலைமலர் நிருபர் திரு. தர்மராஜ் இந்த உரையாடலைப்பற்றித் தமது ஆசிரியருக்குக்கூற, நான் மாலைமலர் ஆசிரியர் திரு. வேல்முருகனைச் சந்திக்க நேர்ந்தது. இதன் விளைவாக 1984 ஜூன் முதல் டிசம்பர் முடிய சேலம், தர்மபுரி மாவட்டங்களில் இருக்கும் கோட்டைகளைச் சென்றுபார்த்து அவைகளைப் பற்றி வரலாற்று ரீதியாக மாலைமலருக்கு எழுதினேன். இந்த கோட்டைப்பயணங்களுக்கு சேலம் மாலை மலர் நிறுவனத்தினர் குறிப்பாக திரு. சங்கர ஆதித்தன், திரு வேல்முருகன் திரு. இராமசாமி ஆகியோர் அளித்த உற்சாகமான ஒத்துழைப்பு பல செய்திகளைத் திரட்டப் பேருதவியாக இருந்தது; பத்திரிகையில் எழுதி வந்தபோது வாசகர்கள் காட்டிய ஆர்வமும் நண்பர்கள் ஊட்டிய உற்சாகமும் மேலும் விரிவாகவும் விளக்கமாகவும் தமிழ்நாட்டில் உள்ள கோட்டைகளைப் பற்றி எழுத வேண்டுமென்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது. அதன் ஒரு பகுதி ஈடேறும் வகையில் சேலம் மாவட்டத்துக் கோட்டைகளைப் பற்றிய இந்நூல் வெளி வருகிறது. வாசகர்களின் ஆதரவு கிடைக்குமானால், தொடர்ந்து தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கும், இதுபோன்று எழுதும் எண்ணம் உள்ளது.

பத்திரிகைக்கு எழுதியதைத் திருத்தியும் விரிவு படுத்தியும், வட்டார வரலாற்றில் ஈடுபாடு கொண்டவர்களுக்குப் பயன்படுகின்ற அளவில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தின் முதல் ஆட்சித்தலைவராய் அமைந்த அலெக்ஸாண்டர்ரீட் நுண்மான் நுழைபுலம் மிக்கவராக செயல்பட்டி

ருக்கிறார். அவரது செயல்திறனுக்குக் கிடைத்திருக்கவேண்டிய பெயரும், பெருமையும், மேலதிகாரிகளின் புறக்கணிப்பால் தடுக்கப்பட்டது என்றாலும் அவரது பணிக்குறிப்புகளும் வரைவுகளும் இன்றைய வரலாற்று ஆசிரியர்களுக்குப் பேருதவியாக இருக்கின்றன. குறிப்பிடத்தக்க மற்ற இரு ஆட்சித்தலைவர்களில் லெபான் எழுதிய சேலம் மானுவலும், ரிக்சர்ட்டின் சேலம் கெஜட்டீரும் இம் மாவட்ட வரலாற்று வரைவிற்குத் தேவைப்படும அடிப்படை நூல்களாக இன்றும் விளங்குபவை. இவற்றிலிருந்து பெருவாரியான செய்திகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்நூலுக்குப் பயன்பட்ட பிறநூல்களின் விவரங்கள் அடிக்குறிப்பில் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. இந்நூலுக்கு நான் விரும்பிய அளவிற்கு ஆவணக்காப்பகத்தின் ஆவணங்களை ஆய்வு செய்யவில்லை என்ற குறையை, இம்மாவட்டத்தின் கடந்த ஐநூறு ஆண்டுகளின் வரலாற்றை விவரிக்கும் வரலாற்று நூல்களில் தரமானவை அனைத்தையும் ஒப்பீடு செய்து ஓரளவிற்குத் தணித்துள்ளேன்.

3—6—88 க. இலக்குமி நாராயணன்

சேலம்.

# நினைத்துப் பார்க்கிறேன்

* நூல் உருவாகும்போது உற்சாகமும், உருவான நூலுக்கு அழகிய ஆங்கில முகவுரையும் அளித்த என் இயக்குநர் திரு. என். அரிநாராயனா அவர்கள்.

* நூலுக்கு அணிந்துரை தந்த, அறிஞர் தரம் அறிந்து முறை செய்யும் பண்புசால் ஆட்சியாளர், சேலம் அருங்காட்சியகம் அமைத்த கலை ஆர்வலர் திரு அ. மு. சுவாமிநாதன், இ. ஆ. ப. அவர்கள்

* வாழ்த்துரை வழங்கிய சென்னை பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத் தலைவர், எனது ஆசிரியர் திரு. C. E. இராமசந்திரன், எம். ஏ., எம். லிட்., பி. எச் டி. அவர்கள்

* நூல் அமைப்புக்கு அரிய கருத்துக்கள் வழங்கிய எனது அன்புச் சகோதரர் அரிமாப் புலவர் திரு, மி. மு. சின்னுண்டார் அவர்கள்

* நூலை நல்லமுறையில் அச்சிட்டு உருவாக்கிய பொன்முடி அச்சகத்தார்.

* எனது கருத்து வெளிப் பாடுகளுக்குக் கருவியாய் இருந்து என்னை உற்சாகமூட்டும் பவதி

* இடையூறு ஏதுமின்றி எழுத்துப்பணியில் ஈடுபட உதவும் மனைவி, மக்கள்

ஆகியோரை
நினைத்துப் பார்க்கிறேன்
நெஞ்சம் நெகிழ்கிறேன்.

# பொருளடைவு

FORWARD
அணிந்துரை
வாழ்த்துரை
பதிப்புரை
என் உரை
பொருளடைவு
1. தமிழகக் கோட்டைகள் 1
2. ஆத்தூர்க் கோட்டை 8
3. ஓமலூர்க் கோட்டை 18
4. சங்ககிரிக் கோட்டை 29
5. சேலம் கோட்டை 45
6, நாமக்கல் கோட்டை 55
7. காலக்கடலில் கரைந்த கோட்டைகள் 62
8. அடிக்குறிப்புகள் 74
9. கோட்டை குறித்த பழந்தமிழ்ச் சொற்கள் 84
10. சொல் விளக்கம் 86
11. இணைப்பு I 95
12. இணைப்பு II 98
13. இணைப்பு III 100
14. சொல்லடைவு 106

# தமிழகக் கோட்டைகள்

## சேலம் மாவட்டம்

## இந்நூல்....

அவையத்து முந்தியிருக்க
ஆளாக்கிவிட்ட
அன்னை தந்தை உள்ளிட்ட
ஆசிரியப் பெருமக்களின்
திருவடிகளுக்கிடும்
ஒரு சிறுமலர்.



ஆலமர்செல்வன், காயநிர்மலேசுவரர் கோயில். ஆத்தூர்
சோழர்காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு



சேலம் அழகிரிப்பெருமாள் கோயிலில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுமிக்க விதானம். இதில் காணப்படும் குறுவாள் அமைப்பு குறிப்பிடத்தக்கது. கி. பி. 17-ஆம் நூற்றாண்டு

# தமிழகக் கோட்டைகள்

## தமிழகக் கோட்டைகள்

ஆகாய விமானங்களும், ஏவுகணைகளும், தோன்றுவதற்கு முன்னே, ஒரு நாட்டைப் பாதுகாக்கும் பணியில் கோட்டைகள் முதலிடம் பெற்றுத் திகழ்ந்தன. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை, இந்தியாவில் கோட்டைகள் நாட்டின் பாதுகாப்பிற்கு உதவும் முக்கிய அரண்களாக விளங்கின. கட்டிடக் கலையின் திறன், போர்க் கலையின் நுட்பம், எதிர்காலத் தேவைகளை அறிந்த நுழைபுலம் அனைத்தும் இணைந்து செயல்பட்ட அக்கால மனித ஆற்றலை, பழங்காலத்துக் கோட்டைகள் வெளிப்படுத்துகின்றன. நமது முன்னோர்களின் சிந்தனை ஓட்டங்களை, செயல் திறனை அறிந்து கொள்ள உதவும் தடயங்களாக கோட்டைகள் உதவுவதால் அவை வரலாற்றுப் பெட்டகங்கள் என்ற தகுதியைப் பெறுகின்றன.

தமிழ்நாட்டில், தமிழ் வளர்த்த மூவேந்தர்களும், அவர்களுக்குப் பின் வந்த மன்னர்களும் கட்டிய கோட்டைகளைப் பற்றி இலக்கியங்கள், கல்வெட்டுகள், எஞ்சிக் கிடைக்கும் வரலாற்றுச் சின்னங்கள் ஆகியவற்றின் மூலம் ஓரளவு அறிகிறோம்.

## சங்க காலத்தில்

சங்க காலத்தில் கோட்டை, இஞ்சி, புரிசை, ஞாயில், வரைப்பு, அகப்பா, குறும்பு எனப் பல பெயர்களால் குறிக்கப் பட்டன. ஒவ்வொரு பெயரும், கோட்டையின் ஒரு உறுப்பைக் குறித்து எழுந்ததே. கோட்டையின் உள்மதில் சுவரை அகப்பா என்ற சொல் குறித்தது. கோட்டையின் மதில் சுவர்கள் வானைத்தொடும் அளவிற்குச் சுட்ட செங்கற்களைக் கொண்டு மிக உயரமாகக் கட்டப்பட்டன. இவ்வாறு கட்டிய மதுரை மாநகரின் கோட்டை மதிலை, அதன் நுழைவாயிலில் நின்று பார்க்கும் போது, ஒரு பெரிய மலையை நடுவில் உடைத்துத் திறந்து விட்டதைப்போல தோன்றுவதாக நெடுநல் வாடை விவரிக்கிறது. மலையைப் போன்று உயரமாகவும் உறுதியாகவும் அமைக்கப்படும் கோட்டை மதிலை எழில் என்றும், புரிசை என்றும் அக்காலத்தில் அழைத்தார்கள். உயரமான கோட்டையின் நுழைவாயில் நெடுநிலை என வழங்கப்பட்டது. நெடுநிலையில் இரும்புச் சட்டங்கள் கோர்த்து, முற்றிய கனைய மரத்தில் செய்த இணைக்கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன. இக்கதவுகளை வலுத்த நீண்ட மரத்தால் அமைக்கப்பட்ட தாழ்ப்பாள் இறுக்கிப் பொருத்தியது. நிலையின் மேல் குறுக்கு விட்டத்தில் இரண்டு பெண் யானைகள் குவளை மலர்களைத் திருமகள் மீது சொரி வது போல அழகிய சிற்பம் செதுக்கப்பட்டது[1].

கோட்டை மதிலை அரைத்துப் பக்குவப்படுத்திய ஒரு வகை மண்ணால் கட்டினர். இவ்வகை மண்ணால் கட்டியக் கோட்டையை அரைமண் இஞ்சி[2] என அழைத்தனர். கோட்டை மதிற்சுவரை ஒட்டி ஆழமான நீர்நிலை அமைக்கப் பட்டது. இறங்குவதற்கும், ஏறுவதற்கும் அரிதான வகையில் அமைக்கப்பட்ட இந்த அகழியைக் குண்டு கிடங்கு[3], மணி நீர்க் கிடங்கு[4], என பலவாறு அழைத்தனர். இவற்றில் முதலை கள் விடப்பட்டன. வஞ்சி நகரின் கழிவுநீர் அகழியில் வந்து நிரம்பும் வகையில் அமைக்கப்பட்டு, அதில் கராம், இடங்கர் என்ற முதலை இனங்கள் விடப்பட்டிருந்தன என்று மணி மேகலை தெரிவிக்கிறது.

அகழியை ஒட்டினாற்போலே புறநகர் அமைந்திருந்தது. கோட்டைக்குள்ளிருக்கும் அகநகரிலும் வேறுபட்ட இந்த புறநகரை 'பேடு' என சங்க காலத்தில் அழைத்தனர். கச்சியின் புறநகரே 'கச்சிப்பேடு' என அழைக்கப்பட்டதாக டாக்டர் மா. இராசமாணிக்கனார் கூறியுள்ளது நினைவு கூரத்தக்கதாகும். இதனை ஒட்டி பிற்காலத்தில் கோட்டை மதிலுக்குள்ளே அமைந்த அகநகரை கோட்டை என்றும், மதிலுக்கு வெளியே அமைந்த புறநகரை பேட்டை என்றும் குறிக்கும் வழக்கு ஏற்பட்டது.

கோட்டை மதிலை ஒட்டி உள்ளே திறந்த வெளி இருந்தது. இதைக் காவற்காடு என அழைத்தனர். கோட்டைக்குப் புறத்தே அகழியை ஒட்டியும் காவற்காடு இருந்தது எதிரிகளின் வரவைத் தடுப்பதற்காக. சூரிய ஒளியும் ஊடுருவ இயலாத பெருங்காடுகளாக இதனை வளர்த்தனர். கோட்டைக்குள்ளிருந்த காவற்காடு 'இளை'[5] என்றும், வெளியே அகழிக்கு அடுத்திருந்த காவற்காடு 'மிளை' என்றும் அழைக்கப்பட்டன. இளையை அடுத்து அகநகரின் வீதிகள் அமைந்திருந்தன.

கோட்டை ஒன்றிற்குமேல்பட்ட மதில் சுற்றுகளைப் பெற்றிருந்தன. மன்னர் மாளிகையைச் சுற்றியும், மாநகரைச் சுற்றியும் அமைக்கப்பட்ட மதில்களை வரைப்பு என அழைத்தனர். நகரைச் சுற்றி அமைந்த வரைப்பு 'நெடுநகர் வரைப்பு'[6] எனப்பட்டது. கோட்டையைக் காக்கும் வீரர்கள் நிற்பதற்காக கோட்டை மதிலை ஒட்டி மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த மேடைகளை 'பதணம்' என்றும் 'ஞாயில்' என்றும் அழைத்தனர். மறைந்து நின்று பகைவர் மீது அம்புமழை பொழிய வசதியாக வில்லவர்களுக்குப் பதணங்களை ஒட்டி சிறு மாடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை 'ஏப்புழை'[7] எனப்பட்டன.

கோட்டையின் முகப்பிலும், மையத்திலும் கொடிமதில் அமைக்கப்பட்டது. இதில் வேந்தனின் கொடி பறந்தது. இக்கொடிக்கு அருகிலும் கோட்டைக்கதவின் மீதும், பருத்தி நூல் கண்டு, பொம்மை, பந்து, சிலம்பு போன்ற பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன[8].

## பாண்டியர் கோட்டை

சங்க காலத்திற்குப் பிறகு தலையெடுத்த பல்லவர்களும், பாண்டியர்களும் பல கோட்டைகள் கட்டி கோலோச்சினர். பராந்தகன் நெடுஞ்சடையன் என்ற பாண்டியன் தனது பதினேழாவது ஆட்சி யாண்டில் வேலங்குடி என்னும் நகரை தானமளித்த செய்தியை குறிக்கும் சீவரமங்கலம் செப்பேட்டில் பாண்டியன் வென்ற கோட்டையைப் பற்றியும், கட்டியக் கோட்டையைப் பற்றியும் செய்திகள் தரப்பட்டுள்ளன. வேணாட்டுச் சேரனின் விழிஞம் நம் கோட்டை கடலைவிட ஆழமான அகழியையும் விண்ணைமுட்டும் மதிலையும் பெற்று விளங்கியது. அத்தகைய வலிமைமிக்க கோட்டையைப் பிடித்த பராந்தகன் தனது களக்குடி நாட்டில், கரவந்த நகரில் ஒரு கோட்டையைக் கட்டினான். மஞ்சு தவழும் மதிலைக் கொண்ட அக்கோட்டை, நகரின் பாதுகாப்பையும், பொலிவையும் உயர்த்தும் வகையில், உறுதியாகவும் கலைநுட்பத்துடனும் அமைக்கப்பட்டது. அதன் அகழி பக்கங்களில் கற்கள் பதித்த கல்லகழியாக கட்டப்பட்டிருந்த செய்தியை கி. பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீவரமங்கலம் செப்பேட்டால் அறிகிறோம்.

## சோழர் கோயில் கோட்டை

தற்போது தஞ்சை பெரிய கோயிலைச் சுற்றி காணப்படும் கோட்டை மதில் சுவர்களும், கொத்தளங்களும் தஞ்சை சோழர் காலத்துக் கோட்டை அமைப்பின் ஒரு சிறு கூறை மட்டும் நமக்கு காட்டுகிறது. அரச குடும்பத்தின் கோயிலாக அது அமைக்கப்பட்டதால், கோட்டை அமைப்போடு கட்டப்பட்டதோ என்பது சிந்திப்பதற்கு உரியது. தற்போது இருப்பது போல் இல்லாமல், சோழர் காலததில் கோயிலுக்கு நான்கு திசைகளிலும் நுழைவாயில்கள் இருந்தன. கோயில அர்த்த மண்டபத்தில் அமைத்திருக்கும், வடக்கு, தெற்கு நுழைவாயில்களில் ஒன்றின், மேல் நிலைக்கல்லில் ''ஸ்வஸ்திஸ்ரீ விக்ரம சோழன் திருவாசல்'' என பெயர் பொறித்திருப்பதின் அடிப்

படையில், அவ்வாயில் அரச குடும்பத்தினர் பயன்படுத்திய நுழைவாயிலாக இருக்கலாம் என S. R. பாலசுப்பிரமணியன் என்ற சோழர் கோயில் கலை அறிஞர் குறிப்பிடுகிறார்.[9] விக்கிரமன் என்பது முதலாம் இராசேந்திரனின் விருது பெயராகும் என்பதும் இங்கே நினைவு கூர்வதற்கு உரியது. தற்போது கோயிலை ஒட்டி இருக்கும் அகழியின் அமைப்பை நோக்கும்போது, கோயில், மன்னர் அரண்மனை இரண்டும், ஒரே மேட்டுத்தளத்தில் அமைக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதை உணரலாம். கோயில் அகழியை ஒட்டி காட்சியளிக்கும் மதிற்சுவர்களில் காணப்படும் அலங்கம், பதணம், ஏப்புழை போன்ற கோட்டையின் பகுதிகள், தஞ்சை சோழரின் கோட்டையைப் பற்றி அறிய ஓரளவிற்கு உதவுகின்றன.

## பிற்காலக் கோட்டைகள்

சங்க காலத்துக் கோட்டைகளும், பிற்கால தமிழ் மன்னர்கள் கட்டிய கோட்டைகளும் வரலாற்றுப் போக்கால், கால வெள்ளத்தால், நமது கவனக்குறைவால் அழிந்து போய் விட்டன. மிகப் பிற்காலத்தில், இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டு சிற்றரசர்களும், பாளையக்காரர்களும் கட்டிய கோட்டைகளில் சில மட்டும் நமது ஆய்விற்குச், சிதைந்த கோலங்களில் மிஞ்சி நிற்கின்றன. இவ்வாறு மிஞ்சி இருக்கும் கோட்டைகள் தமிழகத்தில் மிக அதிகமாக சேலம், தர்மபுரி மாவட்டங்களில் உள்ளன.

## கொங்கு நாட்டுக் கோட்டைகள்

கி. பி 17-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் மதுரை நாயக்கர்களுக்கும், மைசூர் உடையார்களுக்கும் இடையே தோன்றிய போர்களில், மதுரையின் எல்லைப் பகுதியாக, கொங்குநாடும் பங்கு கொள்ளவேண்டி இருந்தது. மைசூர் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க இப்பகுதியில் அரண்கள்

அமைத்தல், இங்குள்ள பாளையக்காரர்களுக்கும், மதுரை நாயக்க அரசிற்கும் அவசியமாகியது. எனவே மதுரை நாயக்க அரசின் ஆதரவில் கொங்குநாட்டில் இருந்த பாளையக்காரர்கள் தாங்கள் தங்கள் பகுதிகளில் ஏற்கனவே இருந்த பழைய கோட்டைகளைச் செப்பனிட்டு பயன்படுத்திக் கொண்டதுடன் பல புதியக் கோட்டைகளையும் கட்டினர். இடைக் காலத்தில் கட்டிய கோட்டைகளுடன் இவைகளை ஒப்பிட்டால், அமைப்பிலும், அளவிலும், இவைகளை மிகச் சிறியக் கோட்டைகள் என்றே சொல்லவேண்டும். சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குறும்புகளைப்[10] போன்ற சிறியக் கோட்டைகள் இவை.

மதுரை நாயக்கர் மரபு தளர்ச்சியுற்ற நிலையில், பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள், மொகலாயப் படைத்தலைவர்கள், மராத்தியர் போன்றோரின் படையெடுப்புகள் அடுத்தடுத்து வரலாயின. இப்படையெடுப்புகளில் பெரும் பாலானவை நாட்டைக் கொள்ளையிட்டு, செல்வத்தை எடுத்துச் செல்வதாகவே அமைந்தன. எனவே உள்ளூர் தலைவர்களாக விளங்கிய பாளைக்காரர், நிலச்சுவான்தார் ஆகியோர் தலைமையில், மக்கள் தங்கள் உயிரையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ள ஊருக்கு ஊர் தங்கள் சக்திக்கேற்ப சிறிதும் பெரிதுமான மண் கோட்டைகளையும் கல் கோட்டைகளையும் கட்டிக் கொண்டனர்.

## சேலம் மாவட்டக் கோட்டைகள்

1792-இல் மைசூர் சுல்தான் திப்புவிற்கும், ஆங்கிலேயருக்கும் நடைபெற்ற மூன்றாம் மைசூர் போரைத் தொடர்ந்து தர்மபுரி சேலம் உள்ளிட்ட கொங்குப் பகுதி ஆங்கிலேயர் வசமாயிற்று. 1799-இல் சீரங்கபட்டிணத்தில் திப்புவை வென்று மைசூரை கைப்பற்றும் வரையில், சேலம் தர்மபுரி பகுதிகளில் உள்ளக் கோட்டைகளில் தங்கள் வீரர்களையும், போருக்குத் தேவையான பொருள்களையும் வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஆங்கிலேயருக்கு இருந்தது. திப்புவின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தத் தேவை வெகுவாக குறைந்து

விட்டது. அதனால் இப்பகுதியில் இருந்த கோட்டைகளைப் பராமரித்து. பாதுகாக்க 19–ஆம் நூற்றாண்டில் அவர்கள் எவ்வித ஆர்வமும் காட்டவில்லை.

திருச்சி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் தென்கொங்குப் பகுதிகளில் பாளையக்காரர்கள் நடத்திய எதிர்ப்பியக்கத்தில் பெரிதும் அரண்டுபோன ஆங்கிலக்கும்பனி அரசு, எதிர்காலத்தில்இப்பகுதிகளில் உள்ளக் கோட்டைகளைப் புரட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காக, முனைந்து செயல்பட்டு, அவைகளைத் தரை மட்டமாக்கி அழித்தது. ஆனால் சேலம் தர்மபுரி பகுதிகள் ஜனநெருக்கம் அதிக மற்ற மலைக்காடுகள் நிறைந்த பகுதியாய் விளங்கியதாலும், கர்நாடகத்திலிருந்தோ, மராட்டியத்திலிருந்தோபடையெடுத்துவருவோர் இக்கோட்டைகளைக் கைப்பற்றிக் கொள்வார்கள் என்ற அச்சம் அகன்று விட்டமையாலும் இப்பகுதிகளில் இருந்த கோட்டைகளை அழிப்பதில் ஆங்கிலேயர் அதிகதீவிரம் காட்டவில்லை.

மேற்படிக் காரணங்களால் திட்டமிட்ட மனிதத்தாக்குதலுக்குத் தப்பிய சேலம் மாவட்டக்கோட்டைகள், நகரங்களின் வளர்ச்சியாலும், கோட்டையில் உள்ள கட்டிடப்பொருள்களை ஊர் மக்கள் தங்கள் உபயோகத்திற்குக் கொள்ளையிட்டதாலும், பராமரிப்பு இல்லாமையாலும், காலப் போக்கில் பெரிதும் கரைந்து போன நிலையில் காட்சியளிக்கின்றன. இன்னும் சிறிது காலத்தில் இக்கட்டிடங்களின் மிச்சப் பகுதியும் அழிந்துபோய் அவற்றின் வரலாற்றுச் சுவடுகள் மறைக்கப்பட்டு மறக்கபடும் அவல நிலை ஏற்படலாம். இந்த அவல நிலையைப் போக்க மக்கள் தங்கள் மண்ணின் மாண்பை, வரலாற்றுச் சிறப்பைக்கூறும் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கமுனைவார்களேயானால் அதுவே இதுபோன்ற நூல்களுக்கு கிடைக்கும் வெற்றிக்கனியாகும்.

# ஆத்தூர் கோட்டை

வட்டத்தின் தலைநகராய் விளங்கும் ஆத்தூர், சேலம்-கடலூர்ப் பாதையில் சேலத்திற்கு கிழக்கே 53 கி மீ. தொலைவில் உள்ளது, ஊரை ஒட்டி வசிஷ்டா நதி என்னும் சிறு ஆறு ஓடுகிறது. ஆற்றுக்கு அருகே அமைந்திருக்கும் ஆற்று ஊர் என்று அழைக்கப்பட்டது. காலப்போக்கில் ஆத்தூர் ஆக மாறியது. ஆனால் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வூர் அனந்தகிரி என்ற பெயரில் வழங்கியது.[1] கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் ஆத்தூர்-அனந்தகிரி என்ற இரட்டைப் பெயரில் இவ்வூர் அழைக்கப்பட்டதாக ரிச்சர்ட் தனது சேலம் கெஜிட்டீரில் குறிப்பிடுகிறார்.

ஆத்தூர் பேருந்து நிலையத்திற்கு நேர் வடக்கே, வசிஷ்டா நதிக்கரையின் வடகரையை ஒட்டி ஆத்தூர் கோட்டை இருக்கிறது. தற்போது பேருந்து நிலையம் இருக்கும் பகுதியை ஒட்டி கோட்டையின் பேட்டை முற்காலத்தில் சிறந்து இருந்தது. ஆங்கிலப் படைகளின் பராமரிப்பில் கோட்டை இருந்த காலத்தில், அதாவது 1799க்குப் பிறகு, இப்பகுதியில் வாழ்ந்த இவ்வூர் மக்கள் சற்றுக்கிழக்குப் பக்கமாக நகர்ந்து தமது குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர், தற்போது கோட்டைக்கு தென்கிழக்கே இருக்கும் இந்தப் பகுதி இதனால் புதுப்பேட்டை என்ற பெயரை பெற்றது.

ஆத்தூர் வட்டத்தின் சிறந்த வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் ஆத்தூர் கோட்டை, சேலம் மாவட்டத்தில், இன்று ஓரளவிற்கு உருப்படியாக நாம்காண இயலும் ஒரேநிலக் கோட்டை ஆகும். வரலாற்றில் ஆர்வமுடையவர்களும், மாணவர்களும் அவசியம் சென்று பார்க்கவேண்டிய இடம் ஆத்தூர்

கோட்டை. மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் ஒரு நிலக் கோட்டை ஆற்றங்கரையை ஒட்டி எப்படி அமைந் திருந்தது என்பதை இக்கோட்டையைக் காண்பவர்கள் தெளி வாக அறிந்து கொள்ளலாம்.

திடாவூர் வழியாக வீரகனூர், பெரம்பலூர் தொட்டு திருச்சி செல்லும் பாதை, சிங்காரப்பேட்டை வழியாக திருவண்ணாமலை செல்லும் பாதை, கடலூர் வழியே பாண்டி செல்லும் பாதை, ஆயில்பட்டி கணவாய் வழியாக இராசிபுரம் தொட்டு, கொங்கு நாட்டின் பிற்பகுதிகளுக்குச் செல்லும் பாதை, என பல வழிப்பாதைகளைக் கண்காணிப்பதற்கேற்ற மையப் பகுதியில் ஆத்தூர் கோட்டை அமைந்திருக்கிறது. இக் கோட்டைக்கு வடககே 5 கி.மீ. தொலைவில் கல்ராயன் மலை யின் அடிவாரம் இருக்கிறது.

கோட்டை கோலாகலமாக விளங்கிய காலத்தில் 62 ஏக் கர் பரப்பை உள்ளடக்கியதாக இருந்தது.[2] திப்புவின் வீழ்ச் சிக்குப் பிறகு 1799-இல் போர்க்கருவிகளையும், போருக்குத் தேவையான பொருள்களையும் வைத்திருக்கும் பாதுகாப்புத் தளமாக இக்கோட்டையை ஆங்கிலேயர் மாற்றினர். 1824-வாக்கில் இங்கிருந்த கிழக்கிந்திய கம்பெனி படைகளை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்து, இக்கோட்டை காவல் இல்லாத கோட்டையாகியது கேட்பாரற்ற கோட்டைக்குள் இருந்த பொருள்கள் கொள்ளை போகலாயிற்று. 1883 வாக்கில் கோட்டைக்குள்ளேயே சுமார் 18 ஏக்கர் அளவிற்கு நிலம் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டு விவசாய நிலமாக மாற்றப்பட்டது[3]. இதுபோன்ற செயல்களால் இன்று கோட்டைக்குள் ஊரும், விவசாயத் தோட்டங்களும் வரலாற்றுச் சின்னங்களும் கலந்து விலங்குவதைக் காணலாம்.

## கோட்டை அமைப்பு

கோட்டை சதுர வடிவில் வளைந்த மதில் பிதுக்கங் களுடன், நான்கு நுழைவாயில்களை உடையதாக அமைக்கப்

பட்டிருந்தது. செதுக்கிய கருங்கற் பாறைகளை அடுக்கி கோட்டைச் சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. மதிலின் மேல் ஐந்து அல்லது ஆறு அடி அகலத்திற்கு குறைவில்லாத பாதை அமைக்கப்பட்டிருந்ததிற்கான தடயங்கள் தென்படு கின்றன; தெற்குக் கோட்டைச் சுவர் மேல் இருக்கும் மதில் பாதைக்குச் செல்ல அமைக்கப்பட்ட படிக்கட்டு அமைப்புகள் இரண்டு இதை உறுதி செய்கின்றன.

கோட்டைக்குள்ளே செல்வதற்குரிய பிரதான வாயில் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்தது; இப்பகுதியில் கோட்டை மதிலும், வளைவுப் பிதுக்கங்களும். அவற்றின் சுவடே தெரியாத வகையில் அழிந்து போய்விட்டன. நுழைவாயில் மட்டும், அதனை இணைத்து இருந்த பக்கச் சுவர்கள் பெரிதும் அழிந்துவிட்ட நிலையில் காட்சியளிக்கிறது. மேற்குப் பகுதி யிலும் ஒரு நுழைவாயில் இருந்ததாக லெபான் சேலம் மானு வலில் குறிப்பிடுகிறார். இவைத்தவிர தெற்கு வடக்கு பகுதி களில் பகுதிக்கு ஒன்றாக இரு வழிகள் இன்றும் காணப்படு கின்றன. தெற்குப் பகுதியில் கோட்டைச் சுவற்றின் மத்தியில் நதியின் நீர்த்துறைக்கு செல்லும் வழி ஒன்று அமைக்கப்பட்டி ருக்கிறது வடக்குப்பகுதியில் இருக்கும்வாயிலைஒட்டி இருக்கும் அகழியைக் கடந்து செல்ல அமைக்கப்பட்டிருந்த பாலம் அடை யாளமின்றி அழிந்து போய்விட்டது.

நதி செல்லும் தெற்குப் பகுதியை விட்டு பிற மூன்று பகுதிகளிலும் கோட்டை மதிலை ஒட்டி அகழிகள் அமைக்கப் பட்டிருந்தது: அகழியின் இருபக்கங்களிலும் கருங்கற்கள் பதித்து கெட்டிக்கப்பட்டிருக்கிறது. நதியின் நீரும் கல்ராயன் மலை யின் நீரும் அகழியை நிரப்பின.

தெற்கு மதிலின் நடுப்பகுதியில் மிக உயரமான தளத்தில் கொடிமதில் இருந்ததாக லெபான் குறிப்பிடுகிறார், நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இந்த கொடிமதில் தற்போது இல்லாது அழித்து போய்விட்டது. ஆனால் மேற்குமதிலில் ஒரு கொடிமதில் சிதைந்த நிலையில் கற்குவியல் மேடாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

## லெபான் குறிப்பிட்ட கட்டிடங்கள்

1883—இல் வெளியிடப்பட்ட சேலம் மானுவலில், ஆத்தூர் கோட்டைக்குள் அப்போது இருந்த கட்டிடங்களை லெபான் குறிப்பிட்டுள்ளார், அவரது குறிப்புப்படி கோட்டைக்குள்,

1. குண்டு வீச்சிற்கு அசையாத கிடங்குகள் நான்கு.
2. அழிவுபட்டு விளங்கிய மாளிகைகள் இரண்டு.
3. கெட்டி முதலியின் கச்சேரி
4. கெட்டி முதலி வசித்த மாளிகை.
5. உல்லாச மாடம்.
6. கர்னல் முரேகல்லறை.

ஆகியகட்டிடங்கள் இருந்தன. லெபான் குறிப்பிட்ட நான்கு கிடங்குகளில் தற்போது மூன்று மட்டுமே உள்ளன. தெற்கு மதிலை ஒட்டி, கோட்டை முனியப்பன் கோயிலுக்கு மேற்கே அமைந்திருக்கும் கிடங்கின் மேல் கூரைப் பகுதி விழுந்து, கூரையற்ற கிடங்காய் நிற்கிறது. இந்த கிடங்கை ஒட்டினார் போல் வடமேற்கே கெட்டிமுதலியார் ஆட்சி நடத்திய கச்சேரி இருக்கிறது. அதற்கு எதிரே மேற்கில் கெட்டிமுதலியின் மாளிகை இருக்கிறது; மாளிகைக்குப் பக்கத்தில் வடக்கே ஒரு பெரிய கிடங்கு இருக்கிறது. இந்தியத் தொல்லியல் கழகத்தினர் இதனை மிகச்சிறந்த முறையில் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். மற்றும் ஒரு சிறுகிடங்கு சற்றுத் தொலைவில் முரே கல்லறைக்குக் கிழக்கே இருக்கிறது.

## மாளிகைகள்

லெபான் குறிப்பிடும் இருமாளிகைகளில் ஒன்று முழுமையாக அழிந்து போய்விட்டது. கிழக்கு நுழைவாசலுக்கு அருகே, இடிபாடுகள் நிறைந்த நிலையில் ஒரு கட்டிடம் இருக்கிறது. லெபான் கூறிய இருமாளிகைகளில் இதுவே பெரிய மாளிகையாய் இருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. இந்த

மாளிகையின் கீழ்ப்பகுதி இந்திய பாணியிலும், மாடிப்பகுதி ஐரோப்பிய பாணியிலும் அமைக்கப்பட்டிருந்ததாகவும் லெபான் தெரிவித்திருக்கிறார்.[4] இந்த மாளிகை இங்கு வரும் கிழக்கிந்திய கம்பெனி படைத் தளபதிகளும், உயர் அதிகாரிகளும் தங்கிச் செல்லும் விருந்தினர் மாளிகையாக பயன்படுத்தப்பட்டது. அழிந்து போன சிறிய மாளிகை கோட்டைத் தலைவனின் இல்லமாக இருந்திருக்கவேண்டும்.

## கெட்டிமுதலி கச்சேரி

தற்போது கோட்டைக்குள் இருக்கும் கட்டிடங்களில் மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் விளங்குவது இக்கட்டிடம் தான். இந்தியத் தொல்லியல் கழகம் இக்கட்டிடத்தை நல்ல முறையில் செப்பனிட்டு மிக அழகாக வைத்திருக்கின்றனர். குழிந்த கூரையமைப்புடன் வளைவுகள் இறங்கி பொருந்தும் செங்கல் சதுரத்தூண்களைக் கொண்டு விளங்கும் இம்மண்டபத்தில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் கெட்டிமுதலி குடும்பத்தைச் சேர்ந்த குறுநில மன்னன் ஆட்சிக்காரியங்களை நடத்தி இருக்கிறான். ஆங்கிலப் படைவசம் கோட்டை இருந்தபோது இப்பகுதி கத்தோலிக்க கிருத்துவ ஆலயமாகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இம்மண்டபத்தில் காணப்படும் தூண்களின் அமைப்பும், விதானப்பகுதியில் காணும் வளைவான அமைப்பும், பாமினிச்சாயலை எடுத்துக் கொண்ட விசய நகர் பாணியின் தெறிப்புகளாக விளங்குகின்றன.

## கெட்டிமுதலி மாளிகை

கெட்டிமுதலி மன்னர் குடும்பம் வசித்ததாகக் கருதப் படும் இந்த மாளிகை மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. மாளிகையின் நிலைப் படியைத்தாண்டியதும், திறந்தவெளி தொட்டி அமைப்பில் இருக்கும் முற்றத்தை சுற்றிச் செல்லும் வகையில் மூடப்பட்ட நடைபாதை இருபுறமும் செல்கிறது.

இவற்றின் கூரைப்பகுதியை வளைவுகள் தாங்குவது போல அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பை மட்டும் பார்க்கையில், சிலர் கூறுவதைப் போல அந்தபுரத்து சுந்தரிகளின் நீராழி மண்டபமாக இருக்கக் கூடுமோ என எண்ணத் தோன்றும். ஆனால் இது மாளிகையின் நிலைப்படிக்குப் பக்கத்திலேயே அமைந்திருப்பது அவ்வாறு முடிவு செய்வதை தடுத்து, இது திறந்தவெளி முற்றமே எனத் துணிய வைக்கிறது. இந்த திறந்தவெளி முற்றத்தை அடுத்து பல தூண்களும், அலங்கார வளைவுகளும் கொண்ட பெரிய கூடம் மாளிகையின் நடுப் பகுதியாக விளங்குகிறது. இந்த கூடத்திற்கு மேற்கே "ப" வடிவில் மாளிகையின் பின்பகுதி இருக்கிறது. இப்பகுதி சமையல் கூடமாகவும், கால்நடைகளின் தொழுவமாகவும் பயன்படுத்தப்படிருக்கலாம்.

## தென்றல் மாடம்

தெற்குக் கோட்டைச் சுவர் மதில்மேல், ஆற்றின் நீர் துறைக்குச் செல்லும் வழிக்கு சற்று மேற்கே ஒரு சிறிய மாடம் கட்டப்பட்டிருக்கிறது. கெட்டிமுதலி மன்னர்கள் இம்மாடத்தில் அமர்ந்து நதியின் போக்கையும் நகரின் பொலிவையும் கண்டு இரசித்தவாறே தென்றல் துய்த்தனர் என்று கூறுவர்.

## கட்டிடப் பாணி

இதுவரை கூறிய கட்டிடங்கள் அனைத்தும் பெருமளவிற்குச் செங்கற்களைப் பயன்படுத்தி கட்டப்பட்டவை. காறை சாந்துக் கலவையை ஒட்டுப் பொருளாகவும், பூச்சுப் பொருளாகவும் பயன்படுத்தி இருக்கிறார்கள். கிழக்கு நுழைவு வாயிலுக்கு அருகேயுள்ள விருந்தினர் மாளிகையின் அடித்தளத்தை மட்டும் கற்களைக்கொண்டும், கற்பலகைகளைக் கொண்டும் கட்டியிருக்கின்றனர். அதிஷ்டானம் என்று கூறத்தக்க சுவற்றின் கால் பகுதிக்குப் பூவேலை செதுக்கப்பட்ட கற்பலகைகள் பயன்படுத்தப்

பட்டிருக்கின்றன. இந்த மாளிகையிலும் தென்றல் மாடத்திலும் காணப்படும் வளைவுகள் கொண்ட அமைப்பு மதுரை நாயக்கர் பாணியைப் பின்பற்றி இவை கட்டப்பட்டிருப்பதைத் தெரிவிக்கின்றன.

## கோட்டைக் கோயில்கள்

கோட்டைக்குள் மூன்று கோயில்கள் உள்ளன. இவற்றுள் வண்ணப் பூச்சின் புதுமெருகோடு முனியப்பன் கோயில் விளங்குகிறது. கோட்டையின் தென்கிழக்கு மூலையில் ஒரு திட்டின்மீது கோயில் கொண்டிருக்கும் இந்த முனியப்பனை, கோட்டைமுனியப்பன் என அழைக்கின்றனர். கோட்டையின் காவல் தெய்வமாக இந்த முனியப்பன் நீண்டகாலமாக வணங்கப்பட்டு வருகிறான்.

1974-ஆம் ஆண்டு இந்த முனியப்ப சுவாமி ஆலயத்திற்குக் குடமுழுக்கு விழா எடுத்த கமிட்டியினர், கோயிலில் ஒரு கல்வெட்டை பதித்திருக்கின்றனர். அதில் அன்றைக்கு (1974க்கு) 650 ஆண்டுகளுக்கு முன்னர் மைசூர் மகாராசாவின் பிரதிநிதியாய் இருந்து இப்பகுதியை ஆட்சி செய்த கெட்டி முதலியார் கோட்டையையும் அதிலுள்ள ஆலயங்களையும் கட்டியதாகவும் குறித்துள்ளனர். இச்செய்தி வரலாற்றுப் பிழையுடையதாகும். மதுரை நாயக்கருக்கும்' மைசூர் உடையார்களுக்கும் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் நடந்த போர்களில் மதுரை பக்கம் இருந்து போரிட்டதினாலே அழிந்தவர்கள் கெட்டிமுதலிகள் [5]. எனவே அவர்கள் மைசூர் அரசிற்கு உட்பட்டவர்களாக இருந்ததில்லை என்பதை உணரலாம். பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான், அதாவது சிக்கதேவராயன் காலத்தில்தான் இப்பகுதி முழுமையாக மைசூரின்கீழ் வந்தது. அப்போது கெட்டி முதலிகளின் அதிகாரம் முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டது.

## சோழர் காலக் கோயில்

முனியப்பன் கோவிலைத் தாண்டி மேற்கே ஒரு சிவன் கோயில் இருக்கிறது. காயநிர்மலேசுவரர் திருக்கோயில் என அழைக்கப்படும் இக்கோயிலே இப்பகுதியின் மிகப் பழமை

யானது ஆகும். இக்கோயிலிலிருந்து ஐந்து கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன [6]. இக்கோயில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்தே வழங்கி வருகிறது என்பதை, கிடைத்த கல்வெட்டுகளில் பழமையான முதலாம் பராந்தக சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டால் அறிகிறோம். சோழர் காலத்தில் விளங்கிய கோயில் என்பதற்கு அத்தாட்சியாக, சில சோழர் கால சிற்பங்கள் இக்கோயிலில் இருக்கின்றன. தட்சிணாமூர்த்தி, துர்க்கை, பைரவர் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

காயநிர்மலேசுவரர் கோயிலை அடுத்து ஒரு திருமால் கோயில் இருக்கிறது, பிரசன்ன வெங்கடேசுவரர் என்னும் பெயரில் வழங்கும் இக்கோயில் கோட்டை எழுந்ததற்குப்பின் கட்டப் பட்டிருக்கும் எனத் தோன்றுகிறது.

## கோட்டையின் வரலாறு

கோட்டையை யார் கட்டியது? எப்போது கட்டினார்கள் என்கின்ற வினாக்களுக்குத் துல்லியமான விடைகளைக் கூற முடியாது என்றாலும், திருப்திதருகின்றவகையில் உத்தேசமாகக் கூற இயலும். கி. பி 16-ஆம் நூற்றாண்டு வாக்கில் கெட்டி முதலி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாளையக்காரரால் கட்டப் பட்டது என்பதை இக்கோட்டையைப் பற்றி எழுதிய அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

கோட்டை எழுந்த வகையை விளக்கும் சுவையான செவி வழிச் செய்தி ஒன்றை லெபான் குறிப்பிடுகிறார். அதன்படி இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் கோட்டை இருக்கும் பகுதி பெருங்காடாய் இருந்தது. கெட்டி முதலி ஒருவன் வேட்டையின் மீது இப்பகுதிக்கு வந்தான். முயல் ஒன்று புதரிலிருந்து பாய்வதைக் கண்டவன், அந்த புதர் அருகே சென்றான். அங்கே ஏதோ ஒளிப் பிரதிபலிப்பைக் கண்டவன் அதை உற்று நோக்கிய போது உலோகக்குடம் ஒன்றின் விளிம்பு என அறிந்தான். அதை தோண்டியபோது அடுத்தடுத்து ஏழு இரும்புப் பானைகள் கிடைத்தன. அத்தனைப் பானைகளிலும் தங்கக் காசுகள் இருந்தன.

இந்த செல்வத்தைக்கொண்டு கோட்டை கட்டப்பட்டது. இக் கதையை குறிப்பிட்ட லெபான் அவ்வாறு கிடைத்த ஏழு இரும் புக் குடங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட குடம் ஒன்று பிரசன்ன வெங்கடேசுவரர் கோயிலில் இருப்பதாகக் குறிப்பிட்டு, அந்தக் குடத்தைப் பற்றியும் தமது நூலில் விவரிக்கிறார். அதன்படி அந்தக் குடம் 38$\frac{3}{4}$ பவுண்ட் எடையில் 5$\frac{3}{4}$ கனஅடி கொள்ளளவு கொண்டது என அறிகிறோம். அது நிறைய அந்த காலத்து பகோடா என்றும் தங்கக் காசுகளை நிரப்ப பதினான்கு இலட் சத்து மூப்பதாயிரத்து எழுநூற்று என்பத்தி நான்கு பகோடாக் கள் தேவைப்பட்டிருக்கும் என்றும் அறிகிறோம். 1883-இல் அவற்றின் மதிப்பு ரூ. 50,07,444/- என லெபான் கணக்கிட்டுக் கூறியுள்ளார்.

1880 - வாக்கில் லெபான், பிரசன்ன வெங்கடேசுவரர் திருக்கோயிலில் பார்த்த குடம் 1947-இல் அக்கோயிலிலிருந்து சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு அனுப்பப்பட்டு, தற் போது அவ்வருங்காட்சியகத்தில் இருக்கிறது [7].

## கட்டிய காலம்

செவி வழிச் செய்திக்கதையில் கோட்டை கட்டப்பட்ட தாகக் கூறும் காலம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. கதை செட்டி முதலி புதையலைக் கண்டு எடுத்து கோட்டையைக் கட்டிய நிகழ்ச்சி 1883-க்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாக' அதாவது 1783 வாக்கில் நிகழ்ந்ததாகக் கூறுகிறது. ஆனால் 1689 வாக் கில் மைசூர் மன்னன் சிக்கதேவராசன் ஆத்தூரை கைப்பற்றி விடுகிறான் [8] 1714 வாக்கில் தொட்டகிருஷ்ணராசா மைசூர் இராஜ்யத்தின் ஒரு பகுதியாக ஆத்தூர் இருக்கிறது. திப்புவின் காலத்திலும் இக்கோட்டை அவனுக்குக் கட்டப்பட்டகோட்டை அதிகாரி ஒருவனால் நிர்வாகிக்கப்பட்டு வந்திருக்கிறது. 1768-இல் இக்கோட்டையை மைசூரிடமிருந்து கர்னல்உட், கைப்பற்று கிறான். ஆனால் அதே ஆண்டில் மீண்டும் அது மைசூர் வசமா கிறது. எனவே கோட்டை 1689-க்கு முன்னரே கட்டப் பட்டிருக்க வேண்டுமென்பது உறுதியாகிறது. செவிவழிக்

கதையிலிருந்து நாம் ஏற்றுக்கொள்ளத் தக்கது கோட்டைக் கட்டி நகர் அமைத்த முதல் கெட்டிமுதலிக்குத் தேவையான பொருள் புதையல் மூலம் கிடைத்திருக்கலாம் என்பது மட்டுமே.

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டையைக் கட்டிய ஆனந்தக்கோனும் இவ்வாறே புதையல் பெற்றுக் கோட்டை கட்டியதாக நிலவும் கதையையும் இங்கு நினைவு கூறத்தக்கதாகும். இந்தக் கதைகள் பொருளாதாரச் செல்வாக்கு அதிகரிக்கையில், அது அரசியல் அதிகாரத்திற்கு அழைத்துச்செல்லும் போக்கிற்கு எடுத்துக்காட்டுகளே என நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஐதரின் தமிழகப் படையெடுப்புகளுக்கு ஆத்தூர் கோட்டை பெரிதும் உதவியாக இருந்தது. 1769—இல் சென்னை மீது ஐதர் அலி மின்னல் வேகத் தாக்குதல் நடத்த இந்தக் கோட்டை பேருதவியாக இருந்தது. 1792—இல் திப்புவிற்கும் ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவாக இக்கோட்டை ஆங்கிலேயர் வசமாகியது. 1792—லிருந்து சுமார் 28 ஆண்டுகள் கோட்டை கிழக்கிந்திய ஆங்கிலக் கம்பனி படையின் ஒருமையமாக இருத்தது. 1820-வாக்கில் படைகள் கோட்டையிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து ஆத்தூர் கோட்டை பழங்கோட்டையாய், வரலாற்றுச் சின்னமாய் மாறியது. தற்போது இக்கோட்டை இந்திய தொல்லியல் கழகத்தின் பராமரிப்பில் இருக்கிறது. சமீப காலத்தில் இந்த வரலாற்றுச் சின்னத்தைப் பாதுகாக்க இந்திய தொல்லியல் கழகத்தினர் முற்பட்டுள்ளது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

# ஓமலூர் கோட்டை

இன்றைக்கு மூன்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சேலம் ஈரோடு பகுதிகளை மிகச் சிறப்பாக ஆண்ட கெட்டி முதலிகள் கட்டிய கோட்டைகள் பல, அவற்றில் அழிந்தது போக இன்று எஞ்சியிருக்கும் கோட்டைகளில் ஆத்தூர் கோட்டை சிறப்பானது. அதைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். அளவிலும், அமைப்பிலும் அதற்கு அடுத்ததாக விளங்குவது ஓமலூர் கோட்டையாகும். தற்போது பெரிதும் அழிந்து பட்ட நிலையில் இன்னும் சில ஆண்டுகளில் தடயமே இல்லாது மறைந்து போகக் கூடிய அவல நிலையில் ஓமலூரா கோட்டை இருக்கிறது.

## கோட்டை

ஓமலூர் இரயில்வே குறுக்குக் கேட்டைத் தாண்டி, கோட்டை மாரியம்மன் கோயிலுக்குமேலே தெற்கு நோக்கிச் சென்றால் மணல்மேடுகள் நிறைந்த பெருந்திடலைக் காணலாம். இந்த இடமே ஒரு காலத்தில் கெட்டி முதலிகளின் கொலு மண்டபமாக, ஓமலூர் கோட்டையாக விளங்கியது

ஓமலூர் கோட்டை சரபங்கை ஆற்றின் இரு பிரிவுகளுக்கு இடையில் அமைக்கப்பட்ட தீவுக் கோட்டையாகும். சுமார் 25 ஏக்கர் பரப்பை உள்ளடக்கிய இக்கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. இது சேற்று மண்ணால் அமைக்கப்பட்ட மண் கோட்டை வகையைச் சேர்ந்தது. சேற்று மண்ணில் மேடு அமைத்து, அதில் கருங்கற் பாறைகளை பதித்து கோட்டையின் மதில் சுவர்களைக் கட்டியிருக்கிறார்கள். கோட்டையின் இரண்டு மதிற் சுவர்களின்

அடிப்படுதிகள், இரண்டு சுற்றுவளைவு அரண்களாக கோட்டை மதில்கள் இருந்ததைப்புலப்படுத்துகின்றன. வெளிச்சுற்றுமதிலை ஒட்டி கிழக்கிலும் மேற்கிலும் செல்லும் சரபங்கை ஆறு கோட்டைக்கு நீர் அரணாக விளங்கி இருக்கிறது. கிழக்கே ஆற்றை ஒட்டிச் செல்லும் தார்ச் சாலையிலிருந்து பார்த்தால் கருங்கற்களை பதித்து சுற்று மதிலை உறுதிபடுத்தியிருப்பதை, தற்போது எஞ்சியிருக்கும், வெளிச்சுற்று மதில் பகுதிகளில் காணலாம்.

வெளிச்சுற்று மதில் செல்லும் போக்கில் சில இடங்களில் மணல்மேடுகள் வட்டமாக சிறு குன்றுகளைப் போல இருக்கின்றன. இதேபோன்று உட்புற சுற்றுமதில் செல்லும் தடத்திலும் இருக்கின்றன. இவை கோட்டை மதில்களின் ஊடே அமைக்கப்பட்ட கொத்தளங்கள் இருந்த இடங்கள். இவைகளை ஒட்டி சில பகுதிகளில் செங்கல்வைத்து கட்டிய பகுதிகள் காணப்படுகின்றன. 1972-வாக்கில் இக்கோட்டையைப் பார்த்து ஒரு ஆய்வுக் கட்டுரை வரைந்த திரு. மா. சுந்தரமூர்த்தி வெளிக்கோட்டை மதில் பகுதியில் எட்டு கொத்தளங்களும். உட்கோட்டை மதில் பகுதியில் ஆறு கொத்தளங்களும் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள்சில தற்போது அழிந்துவிட்டன.

கோட்டையின் நுழை வாயில் வடக்குப் பகுதியில் அமைந்திருந்தது. நுழைவாயிலின் மேற்குப் பக்கத்தில் ஆழமான நீர் நிலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. கோட்டையின் வெளி மதிலுக்கும் உள்மதிலுக்கும் இடையே காணப்படும் பள்ளம் கோட்டை மதில் சுவர்களை அமைக்கத்தேவையான சேற்று மண்ணை எடுத்ததால் உண்டானது எனச் சிலர் கருதுகின்றனர். சிலர் இது அகழியாக இருந்திருக்க வேண்டுமென்றும் நம்புகின்றனர். இப்பள்ளமானபகுதி நீண்டஅகலமான பாதையைப் போல அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது. சில இடங்களில் இந்த பாதையின் அகலம் சுமார் 60 அடிக்குப் பரந்து காணப்படுகிறது. கோட்டையில் இருந்த படைவீரர்கள் பயிற்சி தளமாக பயன்படுத்திக்கொள்ளவும், எதிரிகளை உள்ளே வரவிட்டு அழிக்கவும் இப்பகுதி அமைக்கப்பட்டிருக்கலாம் எனத்தோன்றுகிறது.

## கோட்டை வரலாறு

செட்டி முதலிகள் காலத்து இரு கோயில்களைத் தவிர அக்காலத்து கட்டிடங்கள் வேறு எதையும் காண இயலாத

நிலையில் தற்போது கோட்டைகளின் தன்மையையும், தோற்றக் காலத்தையும் துல்லியமாக நிர்ணயித்தல் சிரமமே, கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் கெட்டி முதலிகள் மதுரை நாயக்க அரசர்களுக்குக் கட்டுப்பட்ட பாளையக்காரர்களாக சேலம், ஓமலூர் பகுதிகளை ஆண்டபோது, மதுரை அரசின் எல்லைப்புற காவற்கோட்டையாக இது கட்டப்பட்டது. கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு, தோப்பூர், மஞ்சவாடிக் கணவாய்கள் வழியாக வரும் படைகளைச்சந்திக்கின்ற முன்னணிப் போர்மையங்களில் ஒன்றாக இக்கோட்டை விளங்கியிருக்கிறது.

கி. பி. 16, 17 நூற்றாண்டுகளில் மதுரை அரசின் எல்லைப் புறக் கோட்டையாக விளங்கிய ஓமலூர் கோட்டை, கெட்டி முதலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு, மைசூர் உடையார் அரசிற்கு உரிய கோட்டைகளில் ஒன்றாயிற்று. பிரைன் ஜே. மார்டன் என்ற அமெரிக்க சமூக வரலாற்றறிஞர், இரு நூறு ஆண்டுகளுக்கு முன் 18-ஆம் நூற்றாண்டில் சேலம் மாவட்டத்தில் நகரியக் கூறுகளைப் பெற்று விளங்கிய இருபது ஊர்களை, எந்தெந்தக் காரணங்களுக்காக அவை சிறப்புற்றிருந்தன என்ற செய்திகளுடன் ஒரு பட்டியலைத் தனது ஆய்வுக்கட்டுரை ஒன்றில் தந்திருக்கிறார்.[2] அதில் நிர்வாக மையமாகவும், இராணுவ மையமாகவும், பல சந்தைகள் நடைபெறும் வியாபார மையமாகவும் ஒரு சேர ஓமலூர் சிறப்புற்றிருப்பதை அவர் எடுத்துக் காட்டுகிறார். இந்தச் செய்தியின் அடிப்படையில் சிந்திக்கையில், மைசூர் ஆட்சியில், நகரின் பாதுகாப்பிற்கும், படைகள் தங்கிச் செல்வதற்கும் இக்கோட்டை பயன்பட்டிருப்பது புலனாகும். ஐதர் ஆட்சியில் 1768–இல் இக்கோட்டையை கர்னல் உட் கைப்பற்றினான்,[3] அவனும், அவனுடன் வந்த கும்பனி மற்றும் ஆற்காடு நவாபின் படையும் கோட்டையில் தங்கின. சார்ஜெண்ட் ஓரேயின் தலைமையில் ஆற்காடு நவாபு அனுப்பிய சிப்பாய்களில் மூன்று கம்பனிகள் தங்கின. ஆனால் அதே ஆண்டில் டிசம்பரில் இக்கோட்டையை ஐதர் மீண்டும் கைப்பற்றிக்கொண்டான்.[4]

## கோட்டைக் கோயில்கள்

கோட்டை மதிலுக்கு வெளியே இருக்கும் மாரியம்மன் கோவிலைத் தவிர்த்து, கோட்டைக்கு உள்ளே கெட்டிமுதலிகள்

காலத்தது என்று கூறத்தக்க கோயில்கள் இரண்டு உள்ளன. வட கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் சிவன்கோயில் மிகவும் சேத மடைந்து காட்சியளிக்கிறது. மேற்குப்பகுதியில் இருக்கும்விஜய ராகவ பெருமாள் கோயில் சிவன் கோயிலை விட சற்று நல்ல நிலையில் இருக்கிறது. இக்கோயிலின் முன் மண்டப விதானங் களில் காணப்படும் சுவர் ஓவியங்கங்கள் கெட்டி முதலிகள் காலத்தவை போன்று உள்ளன.

## சிற்பச் சிறப்புகள்

கோட்டைக் கோவில்களில் உள்ள தூண்களில் காணப் படும் சிற்பங்கள் நல்லகலையம் சத்துடன் இருக்கின்றன. சேலம் மாவட்டத்தின் சிறந்தகலைப் படைபுகளில்ஒன்றாகஇவைகாட்சி யளிக்கின்றன. குறிப்பாக அநுமன் உருவம் இங்கே சித்திரிக்கப் பட்டிருப்பது வெகு அருமை. பக்திபாவம் வெளிப்பட, குவிந்த கரங்களுடன் முழந்தாளிட்ட வகையில் இங்கு சித்தரிக்கப்பட்டி ருக்கும் அநுமன், சோழர் காலகம்பனின் காவியச் சோலையி லிருந்து வந்தது போலேத் தோன்றுகிறது. விசய நகர எழுச்சிக் குப்பிறகு அநுமன் உருவங்களை, ஒருகை அபயமுத்திரைக்காட்ட மறுகை கதாயுதம் பிடித்த நிலையிலோ அல்லது இடுப்பில் ஊன்றிய வகையிலோ வெற்றிக் கூவல் இடுவதுபோல் வீர உணர்வு கொப்பளிக்கச் சித்தரிப்பது. தென்னகத்தின் பொது மரபாக விளங்கியது. இந்த பொது மரபை மீறி கம்பர் காலத் தில் நிலவிய சோழ மரபின் பவ்வியம் மிக்க அநுமனை இங்கே காண்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

## கெட்டி முதலிகள்

ஓமலூர் கோட்டையைப் பற்றி பேசுகின்றபோது, அதனைக்கட்டிய கெட்டி முதலி மரபினரைப் பற்றி குறிப்பிடுதல் அவசியமாகும். கி. பி. 13—ஆம் நூற்றாண்டிலிருந்து கெட்டி முதலிக் குடும்பங்கள் ஆத்தூர், ஓமலூர் வட்டங்களில் சிறப்புடன் வாழ்ந்துவந்திருக்கிறது. கல்வெட்டுகள் வழங்கும்

செய்திகளின் வாயிலாக இம்மரபில் சிறந்து விளங்கிய பெருந் தரங்களில் சிலரைப் பற்றி நாம் அறிய முடிகிறது. தார மங்கலம் இளமேசுவரர் திருக்கோயிலிலும், அதன் முன்னுள்ள மண்டபத்திலுமாக சுமார் பதினோரு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் பல கெட்டி முதலிகளைப் பற்றிய செய்திகளைக் கூறுபவை.

## இளமன்

இளமேசுவரர் கருவறையின் மேற்கு சுவற்றில் ஒய்சாள மன்னன் வீரராம நாதனின் இருபதாம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது.[5] இதன் வாயிலாக கி. பி. 1227 வாக்கில் இங்கு சிறப்புற்று வாழ்ந்த இளமன் முதலியைப் பற்றி நாம் அறிகிறோம். கல்வெட்டிருக்கும் கோயில் இவன் பெயராலேயே கட்டப்பட்டிருக்கலாம் எனத் தொல்லியல் அலுவலர் திரு. ஆர். பூங்குன்றன் குறிப்பிட்டுள்ளது.[6] கோயில் கட்டிட அமைப்பின் அடிப்படையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

## இளையான் நல்ல உடையப்ப முதலி

மேற்படி கோயில் முன் மண்டபத்து வடக்குச் சுவற்றில் உள்ள மூன்றாம் சுந்தர பாண்டியாரின் ஆறாம் ஆட்சியாண்டு கல் வெட்டு ஒன்று உள்ளது 7 பதிமூன்றாம் நூற்றாண்டின் எண்பதுகளில் இங்கே சிறப்புற்றிருந்த இளையான் நல்ல உடையப்ப முதலியைப் பற்றி இக்கல் வெட்டுக் கூறுகிறது. சமயப்பற்றும் மாபுப்பற்றும் மிக்க நல்ல உடையப்பன், தனது தந்தை இளைய பெருமாள் இலட்சுமணன் பெயரில் இலட்சுமண – சதுர்வேதி மங்கலம் என்ற பிராமணக் குடியிருப்பை ஏற்படுத்தினான். இவ்வாறு குடியமர்த்திய பிராமணர்களுக்காக, ஏனைய ஊர் முதலிகளுடன் இணைத்து நிலம் வாங்கிக் கொடுத்தும், குளம் எடுப்பித்தும் உதவினான்.

## எண்ணுடைய நாயனார்

ஆறகளூர் திருக்காமேசுவரர் திருக்கோயில் முன் மண்டபத்தின் வடக்குக்கால் நிலையில் கி.பி. 1375–ஆம் ஆண்டில்

வெட்டிய கல் வெட்டு ஒன்று இருக்கிறது இதன் மூலம் விசய நகர மன்னர் வீர கம்பண்ண உடையார் காலத்தில் ஊரார் மதித்துப் போற்றத்தக்க நிலையில் சிறந்திருந்த எண்ணுடைய நாயனார் என்ற முதலியைப் பற்றி அறிகிறோம். அகோரசிவ முதலியின் மகனாகிய எண்ணுடைய நாயனார் இறை உணர்வி லும், பொதுப்பணியிலும் மேம்பட்டு விளங்கியமையால் கோயில் உருத்திரர்களும், மகேசுவரர்களும், கணக்கர்களும் ஒன்றுகூடி கோயில் காரியங்களைக் கண்காணித்து நடத்தும் பணிக்கு அவரைத் தெரிவுசெய்து அமர்த்தினர்.

## மதுரைக் காவலர்கள்

கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மதுரை நாயக்க அரசு அதன் அமைச்சர் அரியநாத முதலியாரின் ஆலோசனைப்படி எழுபத்திரெண்டு பாளையப் பட்டுகளைத் தனது பாதுகாப்பிற்கும், நாட்டின் அமைதிக்கும் உகந்தவகையில் உருவாக்கியது. அப்படி அமைத்த பாளையப்பட்டுகளில் கெட்டி முதலிகளின் பாளையப்பட்டும் ஒன்று. சேலத்தின் வடக்குப் பகுதிகளான ஆத்தூர், செலம், ஓமலூர் வட்டங்களும், பவானியும் இப்பாளையத்தில் இருந்தன. வில்சன் கெட்டி முதலியை உத்தரபாளையப் பட்டின் தலைவன் எனக்குறிப் பிடுகிறார்.[9] மதுரை நாயக்க அரசின் வடகோடி பாளையமாக அமைந்தமையால் இப்பெயர் இதற்கு அமைந்தது. புக்கனான் ஒரு கெட்டி முதலியைக் குறிப்பிட்டு, அவனுக்கு முன் தலை முறையினராக பத்துபேர் இருந்ததாக குறிப்பிடுகிறார்.[10]

## எருமை கட்டி

கி. பி 16-ஆம் நூற்றாண்டின் முதல் பத்துகளில் சிறப் புற்றிருந்த எருமை கட்டி என்பவனை கிருத்துவ பாதிரிகளின் கடிதங்களின் வாயிலாக அறிகிறோம். 1611 ஆகஸ்ட் மாதம் 30-ஆம் நாள் மதுரை கிருத்துவ மடாலயத்தைச் சேர்ந்த விகோ எழுதிய கடிதத்தில், மதுரை நாயக்க மன்னர் அவையில் வலிமை மிக்க பாளையக்காரராக எருமை கட்டி விளங்கியதாக

குறிக்கப்பட்டுள்ளது.[11] 3000 காலாட்படை, 200 குதிரைகள் 50 யானைகள் கொண்டபடை பலம் எருமை கட்டிக்கு இருந்தது.[12]

எருமை கட்டி மதுரையில் வசித்தது போலவும், மதுரை நகரின் பகுதிகள், அவரது கண்காணிப்பிற்கு உட்பட்டிருந்தது போலவும் கிருத்துவ பாதிரிகளின் கடிதங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.[13] இந்த செய்திக்கு சிறிதுவிளக்கம் தேவைப் படுகின்றது. மதுரைக் கோட்டையின் பல்வேறு பகுதிகளும், கொத்தளங்களும், பாளையக்காரர்களுக் கிடையே, பாதுகாவல் பணிக்கு பகிர்ந் தளிக்கப் பட்டிருந்தது .பாளையக்காரர்களின் வாரிசுகள் போன்ற நெருங்கிய உறவினர்கள் மதுரை நாயக்கரின் அரசவைக்குப் பாளையங்களின் பிரதிநிதிகளாக அனுப்பிவைக் கப்பட்டனர். இந்த ஏற்பாடு பாளையக்காரர்களின் விசுவா சத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகச் செய்யப்பட்டதாகும். இந்த வகையில் சேலம் பகுதி கெட்டி முதலி பாளையத்தின் பிரதிநிதியாக எருமை கட்டி மதுரையில் இருந்திருக்க வேண்டு மெனத் துணியலாம்.

எருமை கட்டி என்கின்றச் சொல் சற்று ஆய்ந்து பார்ப்ப தற்கு உரியதாகத் தோன்றுகிறது. எர்ரகட்டி, எருபகட்டி என்ற சொற்கள் எருமை கட்டி என கிருத்துவ பாதிரிகளால் குறிக்கப் பட்டுள்ளதோ என்பதும் சிந்திப்பதற்கு உரியதாகும். எர்ரபாலு எர்ரம ரெட்டி என்ற பெயர்கள், தெலுங்கு பேசுவோரிடையே இன்றும் வழங்கி வருவது இந்த சிந்தனைக்கு வலிவூட்டுவதாக உள்ளன.

1610ஆம்வாக்கில் ஏற்பட்டபோரில், மதுரைக்காகப் படை நடத்தி, பல கோட்டைகளைப் பிடித்து வெற்றியுடன் வந்த எருமை கட்டிக்கு, மதுரை மன்னர் பல சிறப்புகளையும், புது சலுகைகளும் அளித்து பெருமை படுத்தினார்,[14] மதுரையில் இருந்த இந்து மதவாதிகளால் இராபர்ட்டி நொபிலிக்கு நெருக் கடிகள் தோன்றிய சமயங்களில், எருமை கட்டி, அவருக்கு ஆதரவாக செயல்பட்டிருக்கிறார்.[15] இராபர்ட்டி நொபிலி. பின்னாளில் இருபதுகளில் சேலம் செல்ல இதுவும் ஒரு காரண மாக இருந்திருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை,

## வணங்காமுடி கெட்டி முதலி

கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் நாற்பதுகளில், விசயநகர மன்னர்கள் அச்சுதராயர், சதாசிவராயர் ஆட்சிக் காலங்களின் கல்வெட்டுகள் சிலவற்றின் வாயிலாக வணங்காமுடி கெட்டி முதலியைப் பற்றி அறிகிறோம். கொங்கு நாட்டில் எழில் கொழிக்கும் திருக்கோயில்களில் ஒன்றாகத் திகழும் தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் இவரால் கட்டப்பட்டப் பாங்கை செவி வழிச் செய்திகள் கூறும். இலமேசுவரர் கோயில் முன்னே இருக்கும் மண்டபத்தின் தெற்கு வாயிலில் உள்ள அச்சுதராயர் கல்வெட்டு, 1541 வாக்கில் இவன் சிதம்பரத்தில் மடம் ஒன்று நிறுவி, அதன் நிர்வாகத்திற்கு, நிதி வசதிகள் செய்து தந்ததைக் கூறுகிறது. அதே மண்டபத்தின் கிழக்குச் சுவற்றில் இருக்கும் சதாசிவராயர்காலத்துக் கல்வெட்டு 1545 வாக்கில் இராமகூடல் என்னும் கோயிலுக்கு, கிராமதானம் வழங்கியதைக் கூறும். இக் கல்வெட்டில் கூறப்படும் இராமகூடல் கோயில் எது என்பது ஆய்ந்து அறிவதற்கு உரியது

## இம்மடி கெட்டி முதலி

கி. பி. 1545-க்குப் பிறகு, சுமார் 100 ஆண்டுகளுக்குப் பின்னர் 1659-இல் வெட்டுவித்தக் கல்வெட்டுஒன்று ஒரு இம்மடி கெட்டி முதலியைக்குறிப்பிடுகிறது.இக்கல்வெட்டு, இவர் மதுரை குமாரமுத்து திருமலை நாயக்கருக்கு மேன்மை உண்டாக அளித்த தானத்தைத் தெரிவிக்கிறது.[16] குமாரமுத்து திருமலை நாயக்கர், மைசூருக்கு எதிராக மதுரைப் படையை நடத்திச் சென்றவர். எனவே இக்கல்வெட்டால். கெட்டி முதலிகள் மதுரைக்கு விசுவாசமானவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்,

பவானி சங்கமேசுவரர் திருக்கோயிலின் பல பகுதிகள் கெட்டி முதலிகளால் கட்டப்பட்டவை. வேதநாயகி அம்மன் என்று தற்போது இக்கோயிலில் அழைக்கப்படும் பண்ணார் மொழி அம்மன் சன்னதியின் முன்னுள்ள அழகிய நடன மண்டபம் இம்மடி கெட்டி முதலியால் கட்டப்பட்டது என்பதை

அம்மண்டபத்தின் விதானத்தில் இருக்கும் ஒரு கல்வெட்டால் அறிகிறோம். கல்வெட்டெழுத்துக்களின்பாங்கும், மண்டபத்தின் சிற்பவகையும் 17-ஆம் நூற்றாண்டிற்குரியதாகத் தோன்றுவ தால் குமாரமுத்து திருமலை நாயக்கருக்கு மேன்மை உண்டாக்க தானமளித்த இம்மடி கெட்டி முதலியும், பண்ணார் மொழி அம்மன் சன்னதி தடன மண்டபத்தில் குறித்துள்ள இம்மடி கெட்டி முதலியும் ஒருவரே என எடுத்துக் கொள்ளலாம்.

## எலவம்பட்டி கல்வெட்டு

தாரமங்கலத்திற்கு அடுத்து ஜலகண்டாபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் நான்கு கி. மீட்டர் தூரத்தில் எலவம்பட்டி கிராமம் இருக்கிறது. இங்கே இம்மடி கெட்டி முதலியின் கல் வெட்டு ஒன்று இருக்கிறது விசயநகர அச்சுதராயர் காலத்துக் கல்வெட்டு இது. கெட்டி முதலி எலவம்பட்டி கிராமத்தைக் கைலாசநாதபுரம் என்ற பெயரில், தாரமங்கலம் கைலாசநாதர் கோயிலுக்குத் தானமளித்ததைக் குறிப்பிடும் இக்கல்வெட்டு, கெட்டி முதலிகளின் சின்னங்களையும் கூறுகிறது. வாடாமாலை புலிக்கொடி, விற்கொடி, மகரக்கொடி, சிங்கக்கொடி ஆகியவை கெட்டி முதலிகளின் சின்னங்களாக இதில் கூறப்பட்டுள்ளன.

## கைலாச நாதர் கோயிலில்

கல்வெட்டுக்களில் கூறியுள்ள கெட்டி முதலிகளின் சின்னங்கள் வெகு அழகாக சிற்பமாக, தாரமங்கலம் கைலாச நாதர் கோயிலில் சித்தரிக்கப் பட்டிருக்கிறது. கோயில் கோபுர வாசலில் கெட்டி முதலிகளின் சின்னங்களாகிய வண்ணத்தடுக்கு, வாடாமாலை, கயல், புலி, மீன் ஆகிய உருவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

## இளமேசுவரர் கோயில் கவிதை

கெட்டி முதலிகளைப் பற்றிய அதிக கல்வெட்டுக்களைக் கொண்டிருக்கும் இளமேசுவரர் கோவிலில் ஒரு அழகிய கவிதை

யும் இருக்கிறது எளிய, இனிய நடையில் அமைந்திருக்கும் இக்கவிதை கெட்டி முதலியின் வார்த்தைத்தவறாத பண்பை மிகச் சிறப்பாக இயம்புகிறது.

செங்கதிர் பன்னிரண்டீசர்
பதினொன்று திக்குப் பத்து
கங்கையு மொன்பது வெற்பெட்டு
ஏழுகடல் கார்த்திகை ஆறு
ஐங்கணை காம்மறை முச்சுடர்
சாதி இவை இரண்டு
மங்கை வரோதையன் கட்டி
முதலிதன் வார்த்தை ஒன்றே.

என்றும் இப்பாடல் கெட்டி முதலியின் பண்பை விளக்குவதோடு அவன் செந்தமிழ்ப் புலவரை போற்றிய புரவலன் என்பதையும் தெரிவிக்கிறது.

## மைசூர் படையெடுப்புகள்

17-ஆம் நுற்றாண்டின் நாற்பதுகளில் கொங்கு நாட்டில் மைசூரின் கை ஓங்கியது 1641-இல் மைசூர் மன்னன் முதலாம் கண்டீர நரசன் கெட்டி முதலியைத் தாக்கி சாம்பள்ளி, சத்யமங்கலம் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான்.[17] இந்தப் போரில் ஏற்பட்ட இழப்புகளைச் சரிக்கட்டிக் கொள்வதற்குள் 1677-இல் தொட்ட தேவராசனின் படையெடுப்பிற்குக் கெட்டி முதலிகள் தாக்குபிடிக்க வேண்டியதாயிற்று. இந்தப் போரில் அவர்களது வலிமை பெருமளவிற்குச் சிதைக்கப்பட்டது.

## கெட்டி முதலிகள் மறைவு

சிக்கதேவராயன் புகழ் பெற்ற ஈரோட்டுப் போரில் தஞ்சை, மதுரை படைகளைத் தோற்கடித்து வெற்றி வாகை

சூடிய கையோடு ஓமலூரைத் தாக்கி, கெட்டி முதலிகளிட மிருந்து அதைக் கைப்பற்றினான். இத்தாக்குதலில் கெட்டி முதலியின் மரபு முடிவுற்றதாகத் தோன்றுகிறது. 1688—இல் மறுமுறையும் சிக்க தேவராசன் ஓமலூர் மீது படையெடுத்து வந்தபோது கெட்டிமுதலி மரபினர் எவரும் அவனிடம் போரிட வில்லை. அருவா என்ற மக்களிடமிருந்தே ஓமலூரை சிக்கதேவ ராசன் கைப்பற்றுவதாக வில்க்ஸ் தமது நூலில் குறிப்பிடுகிறார்.[18] வில்க்ஸ் தரும் செய்தி 1686 வாக்கில் ஓமலூரில் கெட்டி முதலி ஆட்சி முடிவுற்றதை தெரிவிப்பதாகக் கொள்ளலாம்.

# சங்ககிரி கோட்டை

சேலம் மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் தலைநகராய் சங்ககிரி இன்று விளங்குகிறது. ஆனால் ஆங்கில ஆட்சியின் துவக்க காலத்தில் இது மாவட்டத்தின் தலைநகராய் இருந்தது. அதற்கும் முன்னர் ஐதர்-திப்புசுல்தான்கள் காலத்தில் மாநிலத்தின் பெருநகராய் பெருமை பெற்றிருந்தது. கி. பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்தே சங்ககிரி ஒரு முக்கிய நகராய் விளங்கி வந்திருக்கிறது. பாண்டியர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு, கொங்குப் பகுதியில் வேட்டுவ மன்னர்கள் ஆட்சி நிலவிய இடங்களில் ஒன்றாக சங்ககிரியை வில்சன் குறிப்பிடுகிறார். விசயநகர ஆட்சியின் செல்வாக்குத் தமிழ்நாட்டில் வலிமைபெறத் துவங்கிய 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சங்ககிரி குன்னத்தூர் என்று அழைக்கப்பட்டது. கி. பி. 1516-ஆம் ஆண்டு திருச்செங்கோடு கல்வெட்டு ஒன்று, குன்னத்தூர் துர்க்கம் என்றே இப்பகுதியைக் குறிப்பிடுகிறது.[1]

இன்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே சிறப்படைந்துவிட்ட சங்ககிரியின் பாதுகாப்பிற்கு ஊரின் மேற்கே உயர்ந்து நிற்கும் மலை பெரிதும் உதவியாய் இருந்தது. இம்மலையில் தற்போது காணப்படும் கோட்டையின் தோற்றக் கால் அநேகமாக 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்திருக்க வேண்டுமென தோன்றுகிறது.

கோட்டை ஊருக்கு மேற்கே, தெற்கு வடக்காகச்செல்லும் மலையில் அமைந்திருக்கிறது. கோட்டை அமைந்திருக்கும் மலைப்பகுதி வருவாய்த்துறை குறிப்பேடுகளில் சின்னக் கவுண்டனூர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. கோட்டை மதில்கள் மலை உச்சிக்குச் செல்ல வசதியாய் இருக்கும் கிழக்குப்பகுதியில்

மட்டும் அமைக்கப்பட்டுள்ளன. மற்றப்பகுதிகளில் மதில்கள் அமைப்பதற்கு அவசியம் இன்றி மலை மிகவும் செங்குத்தாக அமைந்திருக்கிறது.

## சங்கிலி துர்கம்?

சங்ககிரி கோட்டை சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் இருவிதமாக அழைக்கப் பட்டிருக்கிறது. கோட்டை அமைத்திருக்கும் மலையின் அமைப்பு சங்கு வடிவம் போல் தோன்றுவதால் சங்குகிரி என மலையை அழைத்ததாகவும், சங்குகிரியில் அமைந்தக் கோட்டையை சங்ககிரி துர்க்கம் என்று அழைக்கப் பட்டது; என்பதும் நாடுஏற்றுக்கொண்ட வழக்காகும். ஆனால் 1800—இல் சேலத்தின் முதல் மாவட்ட ஆட்சித் தலைவராய் பொறுப்பேற்ற ரீட் என்பார் தமது குறிப்புகளில் சங்ககிரிக் கோட்டையை ''சங்கிலி துர்க்'' என்றே குறிப்பிட்டுள்ளார். இது ''சங்கிலி துர்க்கம்'' என்பதின் ஆங்கில குறுக்கம்.

சங்கிலிக் கோட்டை என்ற பெயர் தோன்றியமைக்கு முஸ்லீம் முதியவர்கள் சிலர் ஒரு காரணத்தைக் கூறி இருக்கின்றனர். அதன் படி முகமதிய பெரியார் ஒருவர் இம்மலையில் இருந்த தீய சக்தி ஒன்றை சங்கிலி வீசி விரட்டியதால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். இச்செவி வழிச் செய்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க இயலாது, என்றாலும், இக் கோட்டைக்கும் சங்கிலிக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருந்திருப் பதை இது உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

## கோட்டை அமைப்பு

மலையின் உச்சியிலும், மலை அடி வாரத்தைச் சுற்றியும் பாதுகாப்பு அரண்கள் எழுப்பிமலைக்கோட்டைகள் அமைக்கப் படுவது பொது மரபாகும். சங்ககிரிக் கோட்டைக்கு இவ்விதமாக மலையின் நான்கு பக்கங்ளையும் வளைத்துப் பாதுகாப்பு மதில்கள் அமைக்கவேண்டிய நிலை ஏற்படவில்லை. எனவே

மலையின் இயற்கை அமைப்பைப் பயன் படுத்திக் கொண்டு, பகைவர் எளிதாக ஏறிவர வசதியாய் இருக்கும் கிழக்குப் பகுதியில் மட்டும் அடுத்தடுத்து பாதுகாப்பு அரண்களை அமைத் திருக்கின்றனர். தேவையான பகுதிகளில் வலிவான கொத் தளங்களும், பீரங்கித் தளங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. தெற்கு வடக்காக கொத்தளங்களுடன் அமைக்கப்பட்டிருக்கும் இந்த பாதுகாப்பு வரைப்புகள் மலை மகளின் கழுத்தில் புரளும் மணிவடங்களைப் போன்று காட்சியளிக்கின்றன.

அடிவாரத்தில் இருந்து சுமார் 1500 அடிகளுக்கு உயர்ந் திருக்கும் சங்ககிரிக் கோட்டை பத்து பாது காப்பு வரைப் புகளைக் கொண்டிருக்கிறது. இவை பல்வேறு நபர்களால், பல்வேறு காலங்களில் கட்டப் பட்டவை. ஒருவர் கட்டியதை மற்றவர் பழுது பார்த்து வலிமை படுத்தியதும் உண்டு.

## ஊழி முகவாசல்

கோட்டையின் முதல் வாயில் அடிவாரத்தில், மலையின் கிழக்குப் பகுதியில் வடக்கு தெற்காக வளர்ந்து செல்லும் மதிலோடு அமைந்திருக்கிறது. இந்த வாசலை ஊழி முகவாசல் என அழைக்கின்றனர். இதன் நுழைவாசலுக்குக் கொண்டு செல்லும் ஆறு அடி அகலப் பாதை கிழக்கில் இருந்து மேற்கு சென்று வடக்கே திரும்பி கோட்டை வாசலில் முடிகிறது. இதன் நுழைவாசலில் பொருத்தியிருந்த இரும்பெரும் கதவுகள் தற்போது இல்லை. கதவின் கால்கள் பொருந்துவதற்காக தரையிலும் நிலையில் மேல் குறுக்குக் கற்பலகையிலும் வெட்டப் பட்ட குழிகளை மட்டும் தற்போது காணலாம், நுழைவாசலை ஒட்டிய கொத்தளமும், வாசலை ஒட்டி பக்கத்திலும், எதிரிலும் அமைந்திருக்கும் கோட்டைச் சுவர்களும் ஓரளவிற்கு நல்ல நிலையிலேயே இருக்கின்றன. ஆனால் இவற்றைத் தொடர்ந்து வடக்கிலும், தெற்கிலும் செல்லும் வரைப்பும், அதன் இடைப் பகுதிகளில் அமைக்கப் பட்டிருந்த கொத்தளங்களும் சிதைந்து அழிந்து போய் காணப்படுகின்றன.

## கன்னி வேட்டு இராசன்

ஊழி முகவாசலைக் கன்னி வேட்டுவ இராசன் என்ற வேடர்குல வேந்தன் கட்டியதாக நிலவிய கருத்தை ரிச்சர்ட்

தமது சேலம் கெஜட்டீரில் குறிப்பிடுகிறார். கோட்டையின் மூன்றாவது வரைப்பிற்குள் இருக்கும் வரதராசப் பெருமாள் கோயில் முன் மண்டபத்தில் காணப்படும் வேடுவர், வேடுவச்சி சிற்பங்களும், கருவறைச் வெளிச் சுவற்றில் சித்தரிக்கப்பட்டிருக்கும் கிரதார் சுஙியக் காட்சிகளும், வேட்டுவத்தலைவர் களின் ஆதிக்கம் இங்கேறிலவி இருந்தமைக்குச் சாட்சியங்களாக விளங்குகின்றன.

## திட்டி வாசல்

கோட்டையின் இரண்டாவது வாசல் முதல்வாசலுக்கு மிக அருகிலேயே அமைந்திருக்கிறது. இதைத் திட்டி வாசல்என அழைக்கிறார்கள் இந்த வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்ததும் கிழக்குப்பக்கம் ஒருகுளமும், குளத்திற்கு மேற்கே மூன்றாவது வாசலுக்குச் செல்லும் பாதைக்கு வடக்குப்புறத்தில் ஒரு சிறிய கோயிலும் இருப்பதைக் காணலாம். ஊர்மக்கள் குளிப்பதற்கும், துணிகள் துவைப்பதற்கும் பயன்படும் இக்குளம், அக்காலத்தில் கோட்டைக்குள் இருந்தோரின் தேவைக்குப் பயன் படுத்தப் பட்டது,

கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் வீரபத்திரர் கோயிலின் மேற்குப் பக்கத்தில் அதிஷ்டானப் பகுதியில் மைசூர் உடையார் காலத்து கன்னட கல்வெட்டு இருக்கிறது. இந்தியத் தொல்லியல் கழகத்தால் இக்கோயிலை மிகநல்ல முறையில் சமீபத்தில் செப்பம் செய்திருக்கின்றனர்.

## கெடிகார வாசல்

மூன்றாவது வாசல் கெடிகார வாசல் என்று அழைக்கப்படுகிறது, தற்போது இவ்வாசலில் கெடிகாரம் ஏதும் இல்லை ஆங்கிலப் படைகள் இங்கேதங்கி இருந்த காலத்தில் இந்த இடத்தில் கெடிகாரம் வைக்கப்பட்டிருந்தது, ஆதனால் இந்தப் பெயர் வாய்த்தது.

கெடிகார வாசலில், நுழைவாசலை ஒட்டி வடக்கே, காவல் வீரர்கள் மட்டும் சென்று வருவதற்கு ஒரு புழைவாசல் அமைக்கப்பட்டுள்ளது. திட்டி வாசலில் இத்தகைய புழை வாசல் தென்பகுதியில் இருக்கிறது. இந்த புழை வாசலில் ஒரே சமயத்தில் இருவருக்கு மேல் நுழைந்து செல்ல முடியாது.

## பெருமாள் கோயில்

கெடிகார வாசலைத் தாண்டி உள்ளே சென்றால் ஒரு சிறிய அம்மன் கோயிலும், அதனை அடுத்து வரதராச பெருமாள் கோயிலும் இருப்பதைக் காணலாம். பெருமாள் கோயில் முகமண்டபத்துத்தூண்களில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள் கர்நாடகப் பாணியுடன் கலந்த விசயநகரப் பாங்கை வெளிப் படுத்துகின்றன. மண்டபத்துத் தூண்களில் உள்ள சிற்பங்களில் வேடன், வேட்டுவச்சி, அநுமன் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. கருவறையின் வெளிச்சுவற்றில் கிரதார் சுனியக்காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளனை. இவற்றுடன் மோகினியைக் கண்டு முனிவர் மயங்கும் காட்சியும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. முனிவரின் மோன நிலையைக் கெடுத்த இந்த மோகினி நமக்கு கலைநலம் படைப்பதற் கென்றே முறுவலித்து உடல் முறுக்கி நிற்கிறாள்.

## இரண மண்டல வாசல்

நான்காவது வாசல் இரண மண்டப வாசல் என அழைக் கப்படுகிறது. வாசலை அடைவதற்குச் சற்று கீழே மேடாக உயர்ந்து நிற்கும் மலைப் பாதைக்கு மேல் செங்கற்களால் சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கிறது. சுவற்றில் பகைவர்களைச் சுட்டுத்தள்ள வசதியாக புழைகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த புழைகளில் சிலவற்றில் மூன்று வேவ்வேறு கோணங்களில் சுடமுடியும். இந்த வசதிமலை அடிவாரத்தின் பெரும் பகுதியை நன்கு பாதுகாக்க ஏற்படுத்தப் பட்டது.

நுழைவாசலுக்கு உள்ளே, காவலர்கள் தங்குவதற்கென்று சிறிய மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் வடக்குப்புற மேடையின் மீது நின்ற நிலையில் இருக்கும் அனுமன் சிலை ஒன்று காவல் தெய்வமாக வைக்கப் பட்டிருக்கிறது.

## புதுக்கோட்டை வாசல்

ஐந்தாவது வாசல் புதுக்கோட்டை வாசல் என அழைக்கப்படுகிறது. இந்த வாசலை ஒட்டி தெற்கிலும் வடக்கிலும கொத்தளங்களுடன் வரைப்பு எழுப்பப்பட்டுள்ளது. நுழைவாசல் வடக்கு நோக்கிய நிலையில் இரு கொத்தளங்களுக்கு இடையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நுழைவாயிலுக்கு வடக்கே மூன்று கொத்தளங்களும, தெற்கே ஒரு கொத்தளமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோட்டை வரைப்பை ஒட்டி, வீரர்கள் நின்று காவல் செய்வதற்கு வசதியாக மேடைத்திட்டு எழுப்பப்பட்டிருக்கிறது. வரைப்பின் சுவர்கள் மலைக் கற்களால் எழுப்பப்பட்டு' மேற்பகுதி செங்கற்களால் பாவப்பட்டிருக்கிறது. ஒரு பங்கு மணலும், ஒரு பங்கு சுண்ணாம்பும் சேர்த்து நன்கு அரைத்த மணற்கலவையை, கற்களை ஒட்ட பயன்படுத்தி இருக்கின்றனர். கொத்தளங்களில் பீரங்கிகளை நிறுத்தி சுடுவதற்கு வசதியாக இடைவெளிவிட்டு அலங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வலிமையான கோட்டைப் பகுதியை திப்பு சுல்தான் கட்டியதாகக் கூறப்படுகிறது.[2] இதற்கு வலியூட்டுவது போல, தென்மேற்கு மூலையில், கோட்டை வரைப்பு முடியும் இடத்திற்கு அருகே உள்ள குகையை ஒட்டி மசூதி ஒன்று இருக்கிறது.

புதுக்கோட்டை வரைப்பிற்குள் சில குறிப்பிடத்தக்க கட்டிடங்கள் இருக்கின்றன. வாசலைத் தாண்டி உள்ளே வந்ததும் இடது பக்கத்தில் ஒரு சிறிய பாறையின்மீது இரு பாதங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதற்கு மேல்மாடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. முசுலீம்கள், இவற்றை முகமதிய பெரியார் ஒருவரின் பாதங்கள் எனப் போற்றுகின்றனர்.

## குதிரை மண்டபமா?

மசூதிக்குச் செல்லும் வலதுபக்க பாதையில் செல்லாமல், மேற்குப் பாதையில் சென்றால் வழியில் கூரைப் பகுதிகள் சிதைந்த நிலையில் ஒரு பெரிய கல்கட்டிடம் இருப்பதைக் காணலாம். இதனை உள்ளூர்வாசிகள் குதிரை மண்டபம் என அழைக்கின்றனர். இக்கட்டிடம் கற்பாளங்களைக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. நடுவில் கல்தூண்களை நிறுத்தி, அவற்றின்மீதும், பக்கச் சுவர்களின் மீதும் கருங்கற் பலகைகளை பாவி கூரை மூடப்பட்டுள்ளது. கட்டிடத்தின் தெற்கு வடக்குப் பகுதிகளில் பக்கத்திற்கு இரண்டு வீதம் நான்கு நுழைவாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவாசல்களின் சிறிய அளவை நோக்குகையில், இவற்றின் வழியாக போர்க் குதிரைகள் சென்று வருவது சிரமமானது என்பது புலனாகும். கூரை கற்பலகைகளைத் தாங்குவதற்கு நட்டிருக்கும் "கல்தூண்களை, குதிரைக்கட்டும் கம்பங்களாக நினைத்து இக்கட்டிடத்தைக் குதிரை மண்டபம் என அழைத்திருக்கின்றனர். இந்தக் கட்டிடத்தைத்தவிர இதன் அளவிற்கு வேறு பெரியக்கட்டிடங்கள் ஏதும் இப்பகுதியில் இல்லாது இருப்பதும், கட்டிட அமைப்பும், இது படை வீரர்கள் தங்கும் இடமாகவோ, போர்க்கருவிகள் வைத்திருந்த கிடங்காகவோ இருந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

## தப்லி ஆலம் பாஷா மசூதி

மரகதப்பச்சைக் கற்களுக்கு இடையே பதித்த வெண்முத்தாய் சுடர்விட்டுக் கவர்வதாக நூறு ஆண்டுகளுக்குமுன் லைபான் வருணித்த தப்லி ஆலம் பாஷா மசூதி ஏற்கனவே குறிப்பிட்டது போல, தென் மேற்கு மூலையில் இருக்கிறது. தப்லி ஆலம் பாஷா சிக்மகளூரை அடுத்து 30. கி.மீ தூரத்தில் இருக்கும் புத்தன்கிரி பகுதியைச் சேர்ந்தவர். தியானத்தில் இருந்து கொண்டே திடீரென அந்தர்யாமியாகும் இந்த முகமதியத் துறவியை, இதுகாரணமாக மர்தானேகயப் என அழைத்தார்கள் என்பது நம்பிக்கையுள்ள முகமதியரின் கருத்தாகும். அவர்கள் கூற்றுப்படி சிவசமுத்திரத்தில் தியானத்தில் இருந்த பாஷா தனது அடுத்த தியான இடத்தைத் தேர்ந்தெடுக்க சிவசமுத்திரத்திலிருந்து சங்கிலி வீச, அது சங்ககிரி மலையில்

விழுந்தது. எனவே சங்ககிரி மலைவந்து சிலகாலம் தியானத்தின் இருந்தார். பிறகு இங்கிருந்து, திருச்சியில் ஒலிகிராஸ் கல்லூரிக்கு அருகிலிக்கும் மசூதிக்கு சென்றார் என்றும் கூறுவர். தப்லி ஆலம் பாஷா சங்கிலி வீசியதாக கூறப்படும் செய்தி, "சங்கிலி துர்க்" என ரிட் குறிப்பிடுவதோடும் ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது.

## மைசூர் அரசு கட்டிய அரண்கள்

புதுக்கோட்டை வாசலுக்கு மேல் 6,7,8 ஆகிய மூன்று வாசல்கள் இலட்சுமிகாந்த ராஜா என்பவரால் கட்டப்பட்டது என்னும் இலட்சுமிகாந்த ராஜா மைசூர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் ரிச்சர்ட் குறிப்பிடுகிறார். இந்த மூன்று கோட்டை வாசல்களும் முறையே திட்டிவாசல், பூவல் திட்டி வாசல், இடிவிழுந்தான் குண்டு வாசல் என குறிக்கப் பட்டுள்ளன.

## இலட்சுமி காந்தய்யா

ரிச்சர்ட் குறிப்பிடும் இலட்சுமீ காந்த ராஜா யாராக இருக்கக்கூடும் என்று பார்க்கையில் ஐதர் ஆட்சியில் சிறப் புற்றிருந்த இலட்சுமி காந்தய்யாவே, இந்த இலட்சுமீ காந்த ராஜாவாக இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இலட்சுமி காந்த ராஜாவாக அவர் காலத்தில் இங்கே அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இலட்சுமீ காந்தய்யா, மைசூர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரும், மைசூர் அரசின் உயர்அதிகாரியாக பணியாற்றிய வருமான கிருஷ்ண அர்சு என்பவரின் மகன்.[3] 1772-இல் ஐதரின் ஆட்சியில் பக்ஷியாக நியமிக்கப்பட்ட இலட்சுமி காந்தய்யா, விரைவில் சங்ககிரி, ஈரோடு பகுதிகளுக்கு அமில் தாராக பணி நியமனம் செய்யப் பட்டார்.[4] இவர் சங்ககிரி, ஈரோடு, பகுதிகளின் அமில் தாராக இருந்த பதினெட்டாம் நூற்றாண்டின் எழுபதுகளில், மேலே குறிப்பிட்ட மூன்று வாசல்களைக் கட்டியிருக்கலாம்.

## மூலப்பிள்ளையார் மண்டபம்

புதுக்கோட்டை வரைப்பைக் கடந்து மேலே சென்றால் ஒரு சிறிய மண்டபத்தை அடையலாம், இம்மண்டபத்தின் இடது பக்கச் சுவற்றில் பிள்ளையார் சிற்பம் பதிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூர் வாசிகள் இதைப் பிள்ளையார் மண்டபம் என அழைக்கின்றனர், மண்டபத்திற்கு வெளியே இடது பக்கத்தில் ஒரு சுனை இருக்கிறது. சுனை நீர் பருகுவதற்கு ஏற்றது. இந்த இடத்தில் நீர் வேட்கையைத் தணித்துக் கொள்ளலாம். இதை விட்டால் மலை உச்சிக்குச் சென்ற பிறகுதான் குடிப்பதற்கு நீர் கிடைக்கும்.

## வெடி மருந்துக் கிடங்கு

ஏழாவது வாசலைத் தாண்டிச் சென்றால், நெடுக்குவாட்டில் வெட்டிக் கவித்த பீப்பாய் போன்ற வடிவில் ஒரு உறுதியான செங்கல் கட்டிடம் இருப்பதைக் காணலாம். வெடி மருந்து கிடங்காக இக்கட்டிடம் பயன் படுத்தப் பட்டிருக்க வேண்டும். தற்போதுகூட இந்தக் கட்டிடம் நல்லநிலையிலேயே இருக்கிறது.

இந்த கட்டிடத்திற்கு எதிர் வாடையில் நாற்பது அடி உயரத்திற்கு ஒரு பெரும் பாறை இரண்டாகப் பிளந்தநிலையில் நிற்கிறது. இடிதாக்கி, பிளக்கப்பட்ட பாறையின் அருகில் அமைந்திருந்த எட்டாவது வாசல் இடி விழுந்தான் வாசல் என அழைக்கப்பட்டது. இக்கட்டிடம் வலிவு இழந்து விட்டது என்ற காரணங்காட்டி ஆங்கிலேயர் 1880-இல் அழித்து விட்டார்கள்.[5]

## கும்பெனி வாசல்

ஒன்பதாவது வாசல் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. வாசலின் மேல் வளைவில் இருக்கும் மையக்கல்லில் 1799

என்று பொறிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்த வாசல் 1799-இல் ஆங்கிலேயரால் கட்டப்பட்டிருக்க வேண்டு மெனத் துணியலாம். 1797-இல் சங்ககிரிக் கோட்டை ஆங்கி லேயர் வசமாயிற்று. ஆங்கிலப்படைகள் கேப்டன் ஆரம் போன் றோர் தலைமையில் இங்கே தங்கியிருந்தன. திப்புவைத் தாக்கு வதற்கும் பாளையக் காரர்களை அடக்கவும் ஒடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியாக, கோட்டை பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் இந்த வாசலைக் கட்டியிருக்க வேண்டு மெனத்தோன்றுகிறது. வாசலுக்கு இரும்புப்பட்டைகள் அடித்த இரு கதவுகள் இருந்தன. வாசலின் பக்கச் சுவர்களில் இருக்கி யிருக்கும் இரும்புக் கொக்கிகளின் எச்சங்களைத் தற்போதும் காணலாம். இந்தக் கொக்கிகளைக் கல்லுக்குள் இறக்கி அடித்து, கொக்கிகள் வெளியே வராதபடி அதனைச் சுற்றிலும் இரும்பை உருக்கி வார்த்து கெட்டித்திருக்கின்றனர்.

செதுக்கிய மலைக் கற்கள், செங்கல், காறைக் கலவை ஆகியவற்றைப் பயன்படுத்தி உறுதியுடன் கட்டப்பட்டிருக்கும் இந்த வரைப்பு, ஆங்கிலக் கோட்டை வரைப்புகளுக்கு உரிய எளிமையான கம்பீரத்துடன் காட்சியளிக்கிறது.

## மைசூர் வாசல்

மலையின் உச்சியில் இறுதியாக அமைந்திருக்கும் பத்தா வது வரைப்பு மைசூர் வாசல் என்று அழைக்கப்படுகிறது. இது மைசூர் மன்னர்களில் ஒருவர் கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள் ளது. நுழைவாயிலில் இரு பக்கங்களிலும் இந்துசமய உருவங்கள் அரைகுறையாக செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்களின் அடிப் படையில் மைசூர் அரசியலில் ஐதரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன் 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வரைப்பு கட்டப் பட்டிருக்க வேண்டுமெனக் கூறலாம்.

## நீர் வளம்

மைசூர் வாசலுக்கு மேல் மலையின் உச்சியில் இயற்கை யாய் அமைந்ததும், செயற்கையாய் அமைக்கப்பட்டதுமான நீர் நிலைகள் பல உள்ளன. பாறை இடுக்குகளில் செங்கல் வைத்து

சுவர்எழுப்பிச் செயற்கைக் குளங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின் றன. இயற்கையாய் அமைந்த சுனைகளும் இருக்கின்றன. இத்த கைய சுனைகளில் இரண்டு முக்கியமானவை.

மலையின் வடமேற்குப்பகுதியில் அமைந்திருக்கும் சுனையை மான் சுனை என அழைத்தனர். மலையில் இயற்கை அன்னை விருஷங்களாக விளையாடிக் கொண்டிருந்த காலத்தில் மான் களின் நீர்த் துறையாக இது இருந்தது. வீரர்களின் கோட்டை யாக மாறியபோது கோட்டைக்கு நீர் வழங்கும் துறையாகியது. தற்போது இந்தக் கோட்டையைக் காணவருவோரின் தாகத் தைத் தணிக்கும் பாழியாக விளங்குகிறது.

மான் சுனைக்கு வடகிழக்கே சூரிய ஒளி விழ முடியாத வாறு பாறைகளுக்கு இடையில் அமைந்த பாழி ஒன்று இருக் கிறது. இதனைச் சூரியன் காணாத பாழி என அழைக்கின்றனர். சூரிய ஒளி படாமல் தேங்கி நிற்கும் இப்பாழியின் நீர் கெடாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னகேசவப் பெருமாள் கோயில்

மலை உச்சியின் வடக்குப் பகுதியில் ஒரு சிறிய பெருமாள் கோயிலும் .அநுமன் சந்நதியும் இருக்கின்றன, பெருமாள் கோயில் சென்னகேசவப் பெருமாள்கோயில் என அழைக்கப்படு கிறது. கோயில் முன்பு முக மண்டபத்தில் கொடிக்கம்பம் போன்று அழகிய வேலைப்பாடமைந்த கல்தூண் ஒன்று இருக்கி றது. இத்தூணின் மேல்பகுதியில் நான்கு பட்டைகளிலும் கன்னட எழுத்துக்கள் காணப்படுகின்றன. கோயிலை ஒட்டி இருக்கும் பாறையில் 1678 ஆம் ஆண்டைச் சேர்ந்த தெலுங்கு கல்வெட்டு[6] இருப்பதாக ரிச்சர்ட் குறிப்பிடுகிறார்.

## காமாட்சி அம்மன் கோயில்

காமாட்சி அம்மன் கோயில் முக மண்டபம், அர்த்த மண் டபம், கருவறை என கோயில்களுக்குண்டான முக்கிய அமைப்பு

களுடன் இருக்கிறது. ஆனால் கருவறையில் மூலவிக்ரகம் இல்லை. முகமண்டபத்தில் உள்ள தூண்களில் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்தவர்களின் உருவங்கள் வணங்கும் நிலையில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்த உருவங்களில் காட்டப்பட்டிருக்கும் தலைப்பாகைகளின் வடிவு ஒரு முக்கியமான வரலாற்றுச் செய்தியைத் தெரிவிக்கிறது.

தலைப்பாக்கள் மொகலாயப் பாணியைப் பின்பற்றியவைகளாகக் காட்டப்பட்டுள்ளன. மொகலாயப் பாணி தலைப்பாகை அணிந்துவந்த இந்த வம்சங்களில் இரண்டு குறிப்பிடத்தக்கவை. ஒன்று மொகலாயப் படையுடன்வந்த இராஜபுத்திரர்கள். மற்றவர் பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டா படைகளுடன் வந்தமராத்தியர்கள். மராத்தியர்கள் மைசூருக்கடுத்த பகுதியில் சிலகாலம் செல்வாக்கோடு விளங்கி இருக்கின்றனர். திருச்செங்கோடு அர்த்தநாரிசுவரர் கோயில் சன்னதி முன்னிருக்கும் மகாமண்டபத்தைச் சங்ககிரி ஆளுநர் சம்போஜி? பழுது பார்த்துக் கட்டினார் எனக் கூறப்படும் செய்தியும் கவனத்தில் எடுத்துக் கொள்வதற்கு உரியது. இவற்றின் அடிப்படையில் சிந்திக்கையில், இக்கோயிலுடன் சில மராத்தியத் தலைவர்கள் சம்மந்தப் பட்டிருக்கவேண்டுமென்பது புலப்படுகிறது.

## தஸ்தகீர் தர்கா

மலை உச்சியின் மேற்குப் பகுதியில் தஸ்தகீர் தர்கா என அழைக்கப்படும் ஒரு சிறிய மசூதி இருக்கிறது. தற்போதும் இதுமுகமதியர்கள் வழிபடும் இடமாக விளங்கி வருகிறது. 1883—இல் சேலம் மானுவல் எழுதிய லெப்பான் இந்த சிறிய தர்காவைப்பற்றி ஏதும் கூறவில்லை. ஆனால் 1918—இல் எழுதிய சேலம் கெஜட்டீரில் ரிச்சர்ட் இதைக் குறிப்பிட்டு, தையத் அப்துல் காதர் ஜைலாம் என்ற முகமதியத் துறவியே தஸ்தகீர் என்று அழைக்கப்படுகிறார் எனக் குறிப்பிடுகிறார். எனவே 1883-க்கும் பிறகு இந்த மசூதி ஏற்பட்டிருக்கவேண்டுமெனக் கருதலாம்.

## கட்டிடங்கள்

மலை உச்சியில் மூன்று கட்டிடங்கள் இருக்கின்றன. ஒன்று மான் சுனைக்கு மேலே வடகிழக்கு மேட்டில் இருக்கிறது. இதுதவிர வடக்குப் பகுதியில் மிகப் பெரிய கட்டிடம் ஒன்று பழுதடைந்த நிலையில் இருக்கிறது. மான் சுனைக்கு அருகே வடகிழக்கு மேட்டில் அமைந்திருக்கும் கட்டிடத்தில் இருந்து இந்தக் கட்டிடத்திற்கு வரும் வழியில் மூன்றாவது கட்டிடம் இருக்கிறது. இது அளவில் சிறியது.

வடக்கில் உள்ள பெரியக் கட்டிடம் நுழைவாயில்களுடன் காற்றோட்டத்திற்கும், வெளிச்சத்திற்கும் தேவையான சன்னல் அமைப்புகளையும் பெற்றிருக்கின்றன. கட்டிட அமைப்பு இது கோட்டைத் தலைவனின் வசிப்பிடமாகவோ, அல்லது கச்சேரி யாகவோ இருந்திருக்க வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறது.

## கொடி மேடை

மலையின் உச்சிப் பாறையில் கோட்டையின் கொடி மேடை அமைந்திருக்கிறது. இங்கே தற்போது, கொடிமரம் ஏதும் இல்லை. மேடை மட்டும் இருக்கிறது.

## எண்ணெய்க் கிணறுகள்

வடக்கில் உள்ள பெரியக் கட்டிடத்தில் வடக்கே மூடிய கிணற்றைப்போல் ஒரு கட்டிடம் இருக்கிறது. இதனை எண்ணைக் கிணறு என்கிறார்கள். இந்த எண்ணைக் கிணறு மூன்று தொட்டிகளாக தடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் நெய், நல்லெண்ணை, தேன் ஆகியவை சேமித்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது. ரிச்சர்ட் தனது கெஜட்டீரின் அடிக்குறிப்பில் தேனுக்குப் பதிலாக விளக்கெண்ணை சேமித்துவைத்திருந் தார்கள் என சிலர் கூறுவதாக குறிப்பிடுகிறார். இந்த கூற்றே பொருத்தமுள்ளதாகத் தோன்றுகிறது.

## மரணக் கிணறு

ஐதர் – திப்பு காலத்தில் மரணதண்டனைக்கு ஆளானவர்களைக் கொல்ல பயன்படுத்திய மரணக் கிணறு, கொடி மேடைக்குச் சற்று தொலைவில் இருக்கிறது. நாலடி உயரத்தில் சுமார் 4' × 5' என்ற அளவில் மேடை போட்டாற் போல், செவ்வக வடிவில் கற்பலகைகளைக் கொண்டு இந்த மரணக் கிணறு அமைக்கப் பட்டிருக்கிறது. மேடையின் மேல் பரப்பு கற்பலகைகளால் மூடப்பட்டிருக்கிறது. பரப்பின் நடுவில் உள்ள கற்பலகையில் ஒருவரை உள்ளே இறக்கும் அளவிற்குத் துளை அமைக்கப்பட்டிருக்கிறது. மரணதண்டனை விதிக்கப் பட்ட குற்றவாளியை இத்துளையின் வழியாக கிணற்றுக்குள் இறக்கிவிட்டு, துளையைக் கல்வைத்து மூடிவிடுவார்கள். குற்றவாளி சுவாசிக்கக் காற்றுஇன்றி, மூச்சுத்திணறி இறக்கநேரிடும்.

## கோட்டையின் தன்மை

சங்ககிரிக் கோட்டையின் பலம், அதனை பெற்றிருக்கும் அரசின் பலத்தைப் பொறுத்து கூடவோ, குறையவோ செய்யும் இயல்புடையது எனலாம். பரந்த மலைப்பகுதி முழுவதையும் கண்காணிப்பதற்கும், ஆண்டுக்கணக்கில் முற்றுகையைச் சமாளிக்கும் வகையில் உணவுப் பொருட்களையும், போர்த் தளவாடங்களையும் சேமித்து வைத்துக்கொள்வதற்கு ஏற்ற படை பலமும், பொருள் வசதியும் படைத்த ஒரு பேரரசிடம் இக்கோட்டை இருந்திருந்தால், தென்னிந்தியாவின் மிகச் சிறந்த கோட்டைகளில் ஒன்றாக வளர்ச்சியடைந் திருக்கும். ஆனால் சங்ககிரிப் பகுதியை கைப்பற்றியவர்களின் பொருளாதாரசக்தி, இதை ஒரு முழுமையான வலிமைமிக்கக் கோட்டையாக அமைத்துக் கொள்ளும் அளவிற்கு அவர்களை அனுமதிக்கவில்லை. அவர்கள் தங்கள் சக்திக்கு இயன்றவரை மலையின் இயற்கை அமைப்பைப் பயன் படுத்திக் கொண்டு, தேவையான சிலபகுதிகளில் மட்டும் பாதுகாப்பு அரண்களை அமைத்துக் கொண்டனர். ஆபத்துக் காலங்களில் பாதுகாப்பாக மறைந்துக் கொள்வதற்கு என்ற அளவிலும், வரியாக வசூலிக்கும் திறைப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு என்ற அளவிலும், இக்கோட்டை பயன் படுத்தப் பட்டிருக்கிறது. மலை மீது

ஏறி இவ்வாறு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் பொருள் களை கைப்பற்றுவதால் கிடைக்கக் கூடிய ஆதாயத்தைவிட, படைகளை மலைமீது நடத்திச் செல்வதில் ஏற்படும் இழப்பு அதிகம்என்பதால் மைசூர்-மதுரைப் போர்களிலும்,ஆங்கிலேயர் மைசூருடன் நடத்திய போர்களிலும் இக்கோட்டை தாக்குதல் களுக்கு உட்படவில்லை.

## தீரன் சின்னமலை வாடிய கோட்டை

1792-இல் திப்புவுடன் ஏற்பட்ட உடன் படிக்கையின் விளைவாக சங்ககிரிக் கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று. ஆங்கிலப் படைகளின் பா டி வீ டு இக்கோட்டையில் இருந்த காலத்தில் சுதந்திரம் கோரிப் போராடிய இம்மண்ணின் மைந் தர்களைக் கொடுஞ்சிறையில் வைக்கவும் அழிக்கவும் இக்கோட் டை பயன் படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறு இக்கோட்டை விடுதலை வீரர்களில் குறிப்பிடத்தக்கவர் தீரன் சின்னமலை என்று கொங்கு மக்களால் போற்றப்படும் தீர்த்தகிரி.[8] ஐந்து ஆண்டுகள் ஆங்கிலேயரை எதிர்த்து, கோவைப்பகுதியில் ஆட்சி புரிந்த தீர்த்தகிரியை,

''கட்டுத்தடிக்காரர் முன் நடக்க உடன்
கருப்பச் சேர்வையும் பின்நடக்க
வட்டப் பொட்டுக்கார சின்னமலை, அதோ
வார சவுரியம் பாருங்கடி
பட்டத்துக்கத்தி பளபளவென்னச் செல்லும்
பாளையக் காரர்கள் முன்நடக்க
வெட்டுந் துரைமகன் சின்னமலை வரும்
வேடிக்கை தன்னையும் பாருங்கடி
பூனைக் குலமென வெள்ளைப்படை ஓடப்
பூரித்து வீரப்புலி போலச்
சேனைக் கதிபதி சின்னமலை வரும்
தீரத்தை வந்துமே பாருங்கடி.''

என சின்னமலைக் கும்மி அறிமுகப்படுத்தும். துரோகத்தால் வெள்ளையரிடம் சிக்கிய இந்த விடுதலை வீரன் 1805—ஆம்

ஆண்டில் இக்கோட்டையில் சிறை வைக்கப்பட்டு பின்பு தூக்கில் இடப்பட்டு கொல்லப்பட்டான்.[9] இந்த விடுதலை வீரனுக்கு வெள்ளைக் கூடாரத்தின் இராணுவ இரகசியங்களை அவ்வப்போது தெரிவித்துவந்த மா பெரும் குற்றத்திற்காக வெள்ளையர்களால் கொல்லப்பட்ட சுபேதார் வேலப்பன் இக்கோட்டைப் படிகளில் நாட்டுப் பற்றுடன் இராணுவ நடை பயின்றிருக்கிறான்.[10]

## கோட்டை காப்பாளர்கள்

1792-இல் 22-வது மெட்ராஸ் பெட்டாலியன் படைப் பிரிவிற்குத் தலைமையகமாக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 51 ஆண்டுகள் சிறப்புடன் விளங்கியது. 1823-வாக்கில் சேலத்திற்குத் தலைமையகம் மாற்றப்பட்டதின் விளைவாக சங்ககிரி தனது முக்கியத்துவத்தை இழந்தது. 1832-க்குப் பிறகு, இராணுவம் அகற்றப்பட்ட பின்னர், சில காலம் கோட்டை பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் இருந்தது. எனவே 1905 வாக்கில் பொதுப்பணித்துறை இக்கோட்டையைப் பழுதுபார்த்திருக்கிறது. இதற்குப் பிறகு பலகாலம் இக்கோட்டை கவனிப்பாரற்றுக் கிடந்தது. தற்போது இந்தியத் தொல்லியல் கழகத்தின் பராமரிப்பில் இருக்கிறது.

# சேலம் கோட்டை

பழைய தலைமுறையினர் விட்டுச் சென்ற வரலாற்றுச் சின்னங்களை எதிர்கால சந்ததிகளுக்குப் பாதுகாத்துத் தர வேண்டிய கடமையும் பொறுப்பும் நிகழ்காலத்தவருக்கு உண்டு. இந்தப் பொறுப்பைப் புறக்கணித்து, செயல்படுத்தப்படும் நகரமைப்புப்பணிகள் எந்த அளவிற்கு வரலாற்றுச் சின்னங்களை அழித்து, நாட்டின் வரலாற்றுப் பாரம்பரியத்தை மறைத்து விடும் என்பதற்கு, சேலம்கோட்டையின் மறைவு ஒரு சான்றாக விளங்குகிறது.

தற்போது கோட்டைத் தெரு, கோட்டை மாரியம்மன் என்ற பெயர்களில் மட்டுமே சேலம் மக்கள் கோட்டையை அறிகிறார்கள். ஆனால் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் உண்மையிலேயே ஒரு கம்பீரமான கோட்டை மணிமுத்தாற்றின் மேற்குக் கரையை ஒட்டி அமைந்திருந்தது. கோட்டை இருந்த இடம், கோட்டை என்ற பெயரிலேயே மக்கள் குடியிருப்புப் பகுதியாக தற்போது விளங்குகிறது. காலப்போக்கில் ஏற்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பேரழிவிற்குத் தப்பி இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கும் பழங்காலத்து கட்டடப்பகுதிகளையும், வரலாற்று நூல்களில் காணப்படும் குறிப்புகளையும் வைத்து சேலம் கோட்டை இருந்த இடத்தையும், அமைப்பையும் ஒருவாறு நாம் நிர்ணயிக்கலாம்.

## கோட்டையின் தோற்றம்

இருநூறு ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியின் முக்கியமான நிலக்கோட்டைகளில் ஒன்றாக விளங்கிய சேலம் கோட்டையின்

வரலாறு இன்றைக்கு முன்னூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் துவங்கியிருப்பதாகத்தோன்றுகிறது. மதுரை நாயக்க அரசிற்குப் பொறுப்பாளர்களாக, நாட்டின் அமைதிக்கும், அரசின் பாது காப்பிற்கும் உதவ நியமிக்கப்பட்ட 72 பாளையக்காரர்களில் ஒருவராக சேலம் பாளையக்காரர் இருந்திருக்கவேண்டும் என்று ரிச்சர்ட் கூறுகிறார். மதுரை திருமலை நாயக்கர் காலத்தில் இன்றைய சேலம் மாவட்டப் பகுதி, மதுரை நாயக்க அரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட மூன்று குடும்பங்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மேற்கே, மேச்சேரி, நங்கவல்லி, ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி. திருச்செங்கோடு பகுதிகளில் கெட்டி முதலிகளும், சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, பராமகால் பகுதிகளில் சேலம் பாளையக்காரர்களும் வலிமையோடு வாழ்ந் திருக்கிறார்கள். சேலம் பாளையக்காரர்களுக்கு அடங்கிய வகை யில் நாமக்கல் பகுதியில் சேந்தமங்கல பாளையக்காரர்கள் இருந் தனர். கெட்டி முதலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு மைசூர் அரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு சேலம் பாளையக்காரர்கள் இப்பகுதியில் பெருஞ் சக்தியாக விளங்கினர். சேலம் பாளையக் காரர்கள் வலுப்பெறத் துவங்கிய கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சேலம் கோட்டை தோன்றியது.

## கோட்டை அமைப்பு

சேலம் கோட்டை, வளைந்து செல்லும் மணிமுத்தாற் றின் மேற்கு மற்றும் வடக்குக்கரைகளை ஒட்டி அமைக்கப்பட்ட நிலக் கோட்டையாகும். பெரும் பாறைக் கற்களை அடுக்கி சேற்று மண் இட்டு இதன் வரைப்புகள் கட்டப்பட்டிருந்தன. கோட்டையின் கிழக்கு வரைப்பு, தற்போது வள்ளுவர் சிலைக்கு எதிரே இருக்கும் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தென்கிழக்கு வளைவுப்பகுதியில் இருந்து குண்டு போடும் சாலையின் கிழக்கு முனைவரை அமைந்திருந்தது. குண்டு போடும் சாலையின் மேற்கு முனையில் இருந்து வடக்கு நோக்கி,பால்பிள்ளை தெருவரைகோட்டையின் மேற்குவரைப்பு இருந்தது. பால்பிள்ளை தெருவின் தெற்கே கோட்டையின் வடக்கு வரைப்பு இருந்தது. வடக்கு வரைப்பில் கோட்டையின் பிரதான நுழைவாயில் இருந்தது. கோட்டை வரைப்புகளை ஒட்டி மேற்கிலும் வடக்கிலும் அகழி அமைக்கப்பட்டிருந்தது.

தற்போது பால் பிள்ளைத் தெருவாகவும், குண்டு போட்டான் தெருவாகவும் இருக்கும் இடங்களில் அகழி இருந்தது.

குண்டு போடும் தெருவின் கிழக்கு முனையில் வடக்கிலிருந்து தெற்காக வரும் மணிமுத்தாறு மேற்கு நோக்கி வளைகிறது. இந்த இடத்தில் உள்ள ஒரு விறகுக்கடையின் பின்புறம், புலிக்குத்தி தெருவிற்குச் செல்ல போடப்பட்டிருக்கும் பாலத்தின் கிழக்கு மூனைக்கு அருகே தற்போது ஒரு திட்டு காணப்படுகிறது. முன்பு இத்திட்டின் மீது பீரங்கிவைக்கப்பட்டிருந்தது. 1941–42 வரை இத்திட்டில் குண்டு போட்டு நேரம் தெரிவித்துவந்தார்கள். இத்திட்டு இருக்கும் பகுதியில் சேலம் கோட்டையின் கொத்தளம் ஒன்று பண்டையில் இருந்தது. இந்தப் பகுதிக்கு அருகே ஆற்றின் குறுக்கே ஒரு அணைகட்டப்பட்டிருந்ததாகவும், அவ்வணை மூலை அணைக்கட்டு என்று அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கும் ரிச்சர்ட். அந்த அணையில் தேக்கப்பட்ட நீர் அகழிக்குச் செலுத்தப் பயன்படுத்தப்பட்டதென அறிவிக்கிறார்.

கோட்டை இரண்டு வரைப்புகளைக் கொண்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. குறைந்தபட்சம் ஆறு செல்லும் கிழக்கு மற்றும் தெற்குப் பக்கங்களில் மட்டுமாவது இரண்டு வரைப்புகள் அமைந்திருக்கவேண்டும். கிழக்குப் பகுதியில் இதற்கான சில தடயங்கள் தற்போதும் உள்ளன. கிழக்குப் பகுதி வெளிவரைப்பு ஆற்றை ஒட்டியும், உள்வரைப்பு குடிசை மாற்று வாரியக் கட்டிடத் தொகுதிக்கு மேற்கில் உள்ள மேட்டிலும் அமைந்திருக்க வேண்டுமென்பதை இவ்விடங்களில் காணப்படும் பழங்காலத்து கற்களடுக்கி அமைக்கப்பட்டிருக்கும் வரைப்பின் எச்சங்கள் வெளிப்படுத்துகின்றன.

## மாளிகையும் மகாலும்

திப்புசுல்தான் காலத்தில், கோட்டைக்குள் அமில்தாரின் மாளிகையும் மகாலும் இருந்தன, இவ்விரு கட்டிடங்களையும் நாம் தற்போது காணமுடியாது அவை அழிந்துபோய்விட்டன.

இவை இருந்த இடங்களைப் பற்றிய குறிப்புகள் மட்டும் உள்ளன. கோட்டைப் பெருமாள் கோவில் சொர்க்கவாசல் தெருவை ஒட்டி இருக்கும் சேலம் நகராட்சிக்கிடங்கு இருக்கின்ற பகுதியில்தான் முன்பு சேலம் அமில்தார் இஸ்மாயில்கான் ஆட்சிப் பணிகளைக் கவனித்த மகால் இருந்தது. தற்போதும் அதன் நினைவாக அப்பகுதி மகால் என்றே அழைக்கப்படுவதுண்டு.

நகராட்சிக் கிடங்கிற்கு மேற்கே, ஒரு மேட்டுப் பகுதியில் தென்னை மரங்களுக்கு இடையே, அமில்தார் வாழ்ந்த மாளிகை இருந்தது. அந்த மாளிகை அழிந்து, அது இருந்த இடத்தில் புதிதாக வீடுகள் கட்டப்பட்டு விட்டதால், அம்மாளிகை இருந்த இடத்தை துல்லியமாக தற்போது அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை.

## கோட்டைக் கோவில்கள்

கோட்டைக்குள் இருந்த கட்டிடங்களில் தற்போதும் நல்ல நிலையில், சுட்டிக்காட்டிக் கூறத்தக்கவிதத்தில் இரண்டு கட்டிடங்கள் உள்ளன. அவை இரண்டும் வழிபாடு நடக்கும் இடங்கள். ஒன்று வைணவர்கள் போற்றும் பெருமாள் கோவில் மற்றொன்று முகமதியர் மதிக்கும் மசூதி.

## அழகரி நாதப் பெருமாள் கோவில்

கோட்டைப் பகுதியின் நடுவில் அமைந்திருக்கும் அழகரி நாதப்பெருமாள் கோவில் சௌந்திரராசப் பெருமாள் கோவில் என்றும் அழைக்கப்படுகிறது. கோவிலில் தற்போது காணப்படும் கட்டிட அமைப்புகளையும், சிற்பங்களையும் காண்கையில் கோவில் 16-17 நூற்றாண்டுகளில் சேலம் பாளையக்காரர்களின் திருப்பணிகளைப் பெற்றிருப்பது புலனாகிறது. கோவில் மகா மண்டபத்தின் தூண்களில் காணப்படும் சுந்தர பாண்டியனின் 24-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள்.[1] கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே திருமால் கோவில் சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமென்பதைத் தெரிவிக்கின்றன. கோவிலுக்கு வெளியே, வடக்கு மதில் சுவரை ஒட்டி, சொர்க்கவாசல்

சுதவிற்குக் கிழக்கே வீதியில் இருக்கும் துர்க்கை சிலையும், அண்மையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மணிமுத்தாறு மீது, பேருந்து நிலையம் அருகே பாலம் கட்டத் தோண்டிய போது கிடைத்த திருமால்சிலையும் மேற்படிக்கருத்தை உறுதிப் படுத்துகின்றன. கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த துர்க்கை சிலை பாண்டியர் பாணியில் அமைக்கப்பட்டது. ஆற்றருகே கிடைத்த திருமால் சிலை கி. பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது; விசயநகர பாணியில் செய்தது.

## சேலம் பாளையக்காரர் பாணி

கோவில் மண்டபங்களில் காணப்படும் சிற்ப வேலைப்பாடு கள், மதுரை நாயக்கர் பாணியின் பொது அம்சங்களுடன் சில தனித்தன்மைகளையும் பெற்றுவிளங்குகின்றன. அயோத்தியாப் பட்டணம், தாரமங்கலம், பவானி ஆகிய கோவில்களில் காணப்படும் வேலைப்பாட்டிலிருந்து சிறிது வேறுபடுகின்றன. கெட்டிமுதலிகளின் வண்ணத்தடுக்கு, வாடாமலை, இணைக யல், வில், புலி சின்னங்கள் இக்கோவிலில் காணப்படவில்லை. மாறாக குறுவாளும் வட்டமும் இணையாக பல இடங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதை சேலம் பாளையக்காரர்களின் சின்னமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

## நவாப் மசூதி

பெருமாள் கோவிலுக்கு மிக அருகில் அமைந்திருக்கும் இந்த மசூதிஎன ரிச்சர்ட் குறிப்பிடுகிறார். இதைச் சின்ன மசூதி என்றும் நவாப் மசூதி என்றும் அழைத்து வந்திருக்கிறார்கள். எதனால் இதை நவாப் மசூதி என அழைத்தார்கள் என்பது வரலாற்று ஆய்விற்கு உரியது.

## கோட்டை கண்ட முற்றுகைகள்

ஐதருக்குச் சொந்தமாயிருந்த சேலம் கோட்டையை, 1768-ஆம் ஆண்டின் முற்பகுதியில், கர்னல் உட் என்னும்

ஆங்கிலக் கிழக்கித்திய கும்பனி தளபதி ஒருவன் கோட்டையைக் கைப்பற்றினான்.[1] இதனைத் தொடர்ந்து சிலமாதங்கள் சேலம் கோட்டை ஆங்கிலேயர் வசம் இருந்தது. ஆற்காடு நவாப் முகமது அலி அனுப்பிய சிப்பாய்களையும் டோபாசிகளையும் கொண்ட மூன்றுகம்பனி அளவு வீரர்களுடன் கேப்டன் எய்னி என்னும் ஆங்கில படைத்தலைவன் கோட்டையைக் காத்து வந்தான்.[3]

ஐதர்அலி, இந்தக் கோட்டையைக் கைப்பற்றும் நோக்கத்தில் 1768-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ஆம் தேதி கோட்டையை முற்றுகையிட்டான். உடனடியாக பணிந்து கோட்டையை ஒப்படைத்து விடுமாறு எய்னிக்கு செய்தி விடுத்தான். முதலில் பணிய மறுத்த எய்னிபின்னர் எழுத்து மூலமாக உயிருக்கும் உடமைக்கும் உறுதியளித்தால் பணிவதாக தெரிவித்தான். இதனை நிராகரித்து, ஐதர் முற்றுகையை நீட்டித்ததால், வேறுவழியின்றி, தன்னையும் தனது படையையும் பாதுகாப்பாக திருச்சி செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் கோட்டையைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். ஐதர் எய்னியின் இந்தக் கோரிக்கையையும் ஏற்க மறுத்து, எய்னியையும், அவனது வீரர்களையும் கைது செய்தான். சேலம் கோட்டை மீண்டும் மைசூரின் மேலாண்மைக்கு உட்பட்டது

## கோட்டையின் அழிவு

1792-இல் ஏற்பட்ட உடன்படிக்கையால், ஆங்கிலேயர் சேலம் பகுதிகளைத் திப்பு சுல்தானிடமிருந்து பெற்றனர். சேலம் ஆங்கிலேயர் வசமானபிறகு அதன் இராணுவ முக்கியத்துவம் நாளுக்கு நாள் குறையலாயிற்று. நிர்வாக கேந்திரம் என்ற வகையில் முக்கியத்துவம் வளரத்துவங்கியது. இதனால் கோட்டையைப் பராமரிக்கும் சிரத்தையும் குறைந்தது. இது கோட்டை விரைவில் அழிந்து போக வழி வகுத்தது.

## சேலம் பாளையக்காரர்கள்

சேலம் பாளையம் ஏற்பட்ட பின்னர் பல பாளையக்காரர்கள், சேலத்தை மதுரை நாயக்கர் அரசிற்கு உட்பட்டு

ஆண்டுவந்திருக்கின்றனர். மதுரை வீழ்ந்து, மைசூரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு சேலத்தைப் பிற்கால பாளையக்காரர்கள் ஆண்டனர். இவர்களில் சிலரைப் பற்றிமட்டுமே நாம் தற்போது அறிகிறோம்.

## உத்தண்டப்ப நாயக்கர்

இராசிபுரம் வட்டம் வெண்ணந்தூரை அடுத்த மின்னக்கல் கிராமத்தில் உள்ள பெருமாள்கோவிலில் 1915-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சாசனம் ஒன்று சமீபத்தில் நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.[4] இந்த சாசனத்தின் வாயிலாக 1563-வாக்கில் உத்தண்டப்ப நாயக்கரும், 1563-இல் அவரது பெயரர் சின்னப்ப நாயக்கரும் செய்த தானங்களைப் பற்றி அறிகிறோம். 1663-இல் பாளையக்காரராக இருந்ததாக அறியும் இந்த உத்தண்டப்ப நாயக்கரே இதுவரை கிடைத்துள்ள தகவல்களிலிருந்து நாம் அறியும் முதல் சேலம் பாளையக்காரராக இருக்கிறார்.

## சலபதி நாயக்கர்

மதுரை கிருத்துவ சபையின் பழைய குறிப்புகள் இராபர்ட்-டி-நொபிளி 1624-இல் சேலத்திற்கு வந்ததை குறிப்பிடுகின்றன. அவரது வருகையின்போது சேலத்தைச் சலபதி நாயக்கர் என்ற பாளைக்காரர் ஆண்டு வந்தார் என்றும் அவை தெரிவிக்கின்றன.[5] வெங்கடாசலபதி என்பதை குறுக்கி சலபதி என குறித்திருக்க வேண்டுமெனத்தோன்றுகிறது சேந்தமங்கலத்திலிருந்து பாதுகாப்புக் கோரிவந்த திருமங்கல் நாயக்கரையும், அவரது புதல்வர்களையும் சலபதி நாயக்கர் பராமரித்தார் என்பதையும் கிருத்துவசபையின் குறிப்புகளால் அறிகிறோம்.

## சென்னம நாயக்கர்

சலபதி நாயக்கருக்கு அடுத்து நாம் அறியும் சேலம் பாளையக்காரர் சென்னம நாயக்கர். சில குறிப்புகளில் இவர் சின்னப்ப நாயக்கர் என்றும் பேசப்படுகிறார். ஆத்தூர் வட்டம்

கிராமபதிவேட்டுக் குறிப்பு ஒன்று 1663-இல் சென்னம நாயக்கர், பிராமணர் ஒருவருக்குச் சென்ன மங்கலம் கிராமத்தின் ஒரு பகுதியைத் தானம் வழங்கியிருக்கிறார். இதேஆண்டு மின்னக்கல் அக்ராகரத்தில் இருபத்தியாறு குடும்பங்களுக்குத் தானமளித்ததை மின்னக்கல் பெருமாள் கோவில் சாசனத்தால் அறிகிறோம்.7 இந்த சாசனத்தில் சென்னம நாயக்கர் உத்தண்டப்ப நாயக்கரின் பௌத்திரர் எனக் குறிக்கப்பட்டுள்ளனர். பௌத்திரர் என்ற சொல்லின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு சேலம் நாயக்கர் வம்சா வளியைத் தரலாம்.

உத்தண்டப்ப நாயக்கர் (1563)

சலபதி நாயக்கர் (1624)

சென்னம நாயக்கர் (1663)

ஆனால் இதில் ஒரு நெருடல் இருக்கிறது. உத்தண்ட நாயக்கரை 1563-இல் இருந்தாக அறிகின்ற நாம், அதற்கு 61 ஆண்டுகள் கழித்து சலபதி நாயக்கரையும், அதற்கும் 39 ஆண்டுகள் கழித்து சென்னம நாயக்கரையும் அறிகிறோம். இந்த கால இடைவெளி இயல்பாகத் தோன்றாமை குறிப்பிடத்தக்கது, உத்தண்டப்ப நாயக்கருக்கும் சலபதி நாயக்கருக்கும் இடையில் மற்றும் ஒருவர் இருந்திருக்கிறார் எனக் கொண்டால் கால இடைவெளி இயல்பாய்த் தோன்றும். அந்த அடிப்படையில் பார்க்கும் போது சாசனத்தில் பௌத்திரர் என்று குறிப்பிட்டுள்ளதை வழித்தோன்றல் என்றோ, கொள்ளுப் பேரன் என்றோ பொருள் கொள்ளுதல் பொருத்தமாக அமையும்.

தர்மபுரி மாவட்டத்தில் தென்கரைச் கோட்டையைக் கட்டிய சென்னமநாயக்கரும், இந்த சென்னம நாயக்கரும் ஓரே நபராக இருக்கக் கூடும் எனரிச்சர்ட் கருதுகிறார். இதனை ஏற்றுக்கொண்டால் சேலம் பாளையமும் ஏறக்குறைய கெட்டி முதலிகளின் நாட்டைப் போலவே பரந்திருக்க வேண்டுமென்பது புலனாகிறது.

மைசூர் அரசின் குறிப்புகளிலிருந்து சிக்கதேவராசன் 1694 வாக்கில் சேலம் சத்தியமங்கலம், நாமக்கல் ஆகியபகுதிகளைச் சின்னப்ப நாயக்கரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான்

என அறிகிறோம்.[8] இந்நிகழ்ச்சிக்குப்பிறகு சின்னப்ப நாயக்கர் மைசூரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது

1666-ஆம் ஆண்டு ஆத்தூர் இறாம் பதிவேட்டு குறிப்பு, மின்னக்கல் சாசனம் ஆகிய வற்றில் குறிப்பிடப்படும் சென்னம நாயக்கரும் சிக்கதேவராயனால் தோற்கடிக்கப்பட்ட சின்னப்ப நாயக்கரும் ஒருவரா அல்லது இருவேறு நபர்களா என்பது ஆய்விற்கு உரியது.

## இலட்சுமண நாயக்கன்

சமீபத்தில் வாழப்பாடி பேளூரை அடுத்த செக்கடிப்பட்டி கிராமத்தில் தனியார் தோட்டத்தில் இருக்கும் கல்வெட்டு ஒன்றை திரு. ந. காண்டீபன் கொடுத்தத் தகவலின் பேரில் தமிழாசிரியர் திரு. வே. ரா. துரைசாமி அவர்கள் படியெடுத்துள்ளார்.[9] இந்த கல்வெட்டின் வாயிலாக சின்னம நாயக்கரின் மூத்த புதல்வர் இலட்சுமண நாயக்கரைப் பற்றியும் அவரது ஆறு சகோதரர்களைப் பற்றியும் அறிகிறோம். இவர் ஆத்தூரில் கோட்டைகட்டி தமது தம்பி வேங்கடப்பநாயக்கரை கோட்டை காவலுக்கு வைத்ததாக இக்கல்வெட்டுக் கூறுவது குறிப்பிடத்தக்கது.[10]

ஆத்தூர் கோட்டையைக் கட்டியது கெட்டி முதலிகள் என்பதை ஏற்கனவே பார்த்தோம். 1675 - வாக்கில் ஆத்தூர் கோட்டை சிக்கதேவராயனால் முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டது.[11] இத்தாக்குதலில் ஏற்பட்ட சில இடிபாடுகளை இலட்சுமண நாயக்கர் சரி செய்திருக்கவேண்டும் அதுவும் மைசூர் அரசின் சம்மதத்தின் பேரிலேயே செய்திருக்கவேண்டும். இந்த செயலையே கல்வெட்டில் கோட்டைக் கட்டியதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## கிருஷ்ண இராசா

1774-வாக்கில் கிருஷ்ண ராசா என்பவர் மைசூருக்கு கட்டுப்பட்ட சேலம் பாளையக்காரராக இருந்திருக்கிறார்[12]

இவர் கன்னட மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் கன்னட மொழியில் செய்திருக்கும் விவேகாபரணம் என்னும் நூல் பதினெட்டாம் நூற்றாண்டு கன்னட இலக்கியத்தில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. சேலம் மையச் சிறைச் சாலைக்கு அருகில் இருந்ததாகக் கூறப்படும் இராசாகுளம் இந்த பாளையக்காரருக்குத் தொடர்புடையதாக இருந்திருக்க வேண்டும்.

# நாமக்கல் கோட்டை

நாமக்கல் வருவோர் பார்வையில் முதலில் தென்படுவது நகரின் மையத்தில் உயர்ந்து நிற்கும் கோட்டையே. மலைக்கு மகுடமிட்டாற் போல் விளங்கும் இந்தக் கோட்டை சேலம் மாவட்டத்தில் இன்று நாம் காணக்கூடிய அளவில் உருப்படியாக இருக்கும் மூன்று கோட்டைகளில் ஒன்றாகும். மிகக் குறைந்த கட்டிடங்களோடு சிறியதாகவும், கச்சிதமாகவும் விளங்கும் இக்கோட்டை கிரி துர்க்கம் என்ற வகையைச் சேர்ந்த மலைக் கோட்டையாகும். கோட்டையும், கோட்டை இருக்கும் குன்றும் நாமக்கல் வரலாற்றின் வடிவங்கள் என்று கூறுவது மிகையாகாது. இப்பகுதியின் கலைவளமும், வரலாற்றுப் போக்கும் இக்குன்றின் குடவரைக் கோயில்களாக, கோட்டையாக மணக்கின்றன.

## கோட்டை அமைப்பு

சுமார் 200 அடி உயரத்திற்கு ஓங்கிநிற்கும் பாறைக் குன்றின் மீது நாமக்கல் கோட்டை அமைந்திருக்கிறது. மலையின் தெற்கு அல்லது தென் மேற்குப் பகுதியின் வழியாகச் சென்றால் கோட்டைவாசலுக்குச் செல்லலாம். மலையில் ஏறிச்செல்வதற்கு வசதியாக பாறையில் சில இடங்களில் செதுக்கிவிடப் பட்டுள்ளன. தென் மேற்குப்பகுதி மலைச்சரிவில் பல பகுதிகளில் தற்போதுள்ள கோட்டை வரைப்பிற்கு வெளியே அதை உள்ளடக்கிய வகையில் வெளிவரைப்பு ஒன்று இருந்ததற்கான தடயங்களைக் காணப்பட்டதாக லெபான் தனது சேலம் மானுவலில் குறிப்பிடுகிறார். தற்போது தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கோட்டை நுழை வாயிலுக்குச் சுமார் ஐம்பதடிக்கு கீழே ஓரிடத்தில் மட்டும் வெளிவரைப்பு ஒன்று இருந்ததற்கான தடயம்

சாணப்படுகிறது. கோட்டையின் நுழை வாசலில் அமைக்கப் பட்டிருந்த இரு பெரும் மரக்கதவுகளில் தற்போது ஒன்று மட்டுமே இருக்கிறது. வாயில் நிலையின் நிலைக்கால்கள் நல்ல சிற்பவேலைப்பாடு கொண்ட கருங்கல்லால் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றில் கொடிப் பெண்ணும் கொடிச்சுருள்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதுவும் கோட்டைச் சுவரின் வெளிப் பக்கத்தில் நுழை வாயிலுக்கு வடக்குப்புறத்தில் சிங்கவடிவம் வடித்துப் பொருத்தப்பட்டிருக்கும் கல்லும் நல்ல கலையம் சத்தோடு விளங்குகின்றன.

## இரகசிய பாதை

கோட்டைக்குள் செல்வதற்குத் தென்கிழக்குப் பகுதியில் உள்ள நுழைவாயிலைத் தவிர வேறு ஒரு இரகசிய வழியும் இருக்கிறது. மலையின் வடக்குப் பகுதியில் அமைந்திருக்கும் இந்த இரகசிய வாயிலைத் திருட்டுவாசல் என அழைக்கின்றனர்.

## வரைப்பின் அமைப்பு

கோட்டை வரைப்பு, செதுக்கிய மலைக்கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருக்கிறது. வரைப்பின் கடைக்கால்பகுதியி லிருந்து சிறிது உயரத்திற்குச் சாந்து கலவையைப் பயன்படுத்தி தளத்தோடு உறுதியாக இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்குமேலே, சாந்து கலவையைப் பயன்படுத்தாமல் மதில் சுவர் கட்டப்பட்டு இருக்கிறது. சீராக வெட்டப்பட்ட கற்கள் ஒன்றின் மீது ஒன்று நன்றாக படிந்து அமர்ந்த வலிமையான கோட்டை வரைப்பாக விளங்கும் வகையில், அடுக்கி அமைக்கப் பட்டுள்ளது. வரைப்பின் முடிப்பகுதியில் செங்கற்களையும் காறைக் சலவையையும் பயன் படுத்தி அலங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன. கோட்டையின் உட்புறத்தில் வரைப்பை ஒட்டி னாற் போல் காவல் வீரர்கள் நின்று கண்காணிக்கவும், பீரங்கி களை நிறுத்தவும் இரண்டரை முதல் மூன்று அடிவரை அகல முள்ள மேடை; மேலே கூறியப் பொருள்களை பயன் படுத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. கோட்டையைத் தாக்க வரும் எதிரி களை எல்லாக் கோணங்களிலும் கண்காணித்து துப்பாக்கியால் சுட்டுத்தள்ளத் தோதாக, குறிபார்க்கும் புழைகள் பல மேடை களையும், அலங்கங்களையும் ஒட்டி அமைக்கப்பட்டுள்ளன.

கோட்டை வரைப்பு மலையின் அமைப்பிற்கேற்ப வளைந்தும் நெளிந்தும் ஏற்ற இறக்கங்களுடன் அமைந்திருக்கிறது. கொத்தளங்களும் வரைப்பின் போக்கில் அதற்கேற்ப அமைக்கப் பட்டிருக்கின்றன.

## நீர் வளம்

மலையின் உச்சியில் கோட்டை வரைப்பிற்குள் அமைந்திருக்கும் நிலப்பரப்பு மிகக் குறைவே. சுமார் $1\frac{1}{2}$ ஏக்கர் நிலப் பரப்பை உள்ளடக்கிக் கோட்டை கட்டப்பட்டிருக்கிறது.[1] சங்ககிரியில் தற்போதும் காணப்படுவதுபோல் இயற்கையாய் அமைந்த சுனைகளை, இப்போது நாமக்கல் கோட்டையில் காணமுடியாவிட்டாலும், அக்காலத்தில் பலசுனைகள் இருந்தற்கான தடயங்களைக் காணலாம். சில இடங்களில் பாறையை வெட்டி ஏற்படுத்திய குழிகள் காணப்படுகின்றன. இவை கோட்டைக்குள் இருப்போருக்கு வேண்டிய நீரை சேமித்து வைத்துக் கொள்ள பயன்பட்டிருக்கவேண்டும். மலையடிவாரத்தில் அமைந்திருந்த கமலாலயமும் கோட்டைக்கு ஒரு சிறந்த நீர்த்துறையாக பயன்பட்டிருக்கிறது,

## கோட்டையில் உள்ள கட்டிடங்கள்

தற்போது கோட்டைக்குள் இடிந்த நிலையில் மூன்று கட்டிடங்கள் உள்ளன. நடுப்பகுதியில் தெற்கே ஒரு பெரிய கட்டிடம் இருக்கிறது. கூரைப்பகுதி இன்றி இடிந்து காணப்படும் இக்கட்டிடம் உணவுதானியங்களைச் சேமித்து வைக்கும் தானியக் கிடங்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. 1866 - ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தின்போது, பட்டினியில்வாடிய மக்கள், இக்கிடங்கில் இருந்து கூளங்களைப் புடைத்தெடுத்து சேகரித்த தானியகளைப் பயன்படுத்திப் பசியாறினர், என லெபான் குறிப்பிட்டுள்ளது இதனை உறுதி செய்வதாக உள்ளது.

## திருமால் கோவில்

தானியக் கிடங்கிற்குப்பக்கத்தில் வடக்கே, விமானம், கோபுரம் ஏதுமின்றி, சிதைந்த நிலையில் ஒரு கோவில் இருக்கிறது.

முதல் தளத்திற்கு மேலே அமைந்திருந்த பகுதிகள் எதுவும் தற்போது காண இயலாத வகையில் காலவெள்ளத்தில் கரைந்துவிட்டன. இக் கோவில் திருமால் கோவில் என்றும், இதில் ஒரு கல் வெட்டு இருக்கிறது என்றும் லெபான் குறிப்பிடு கிறார். அவர் குறிப்பிடும் கல்வெட்டு கோவிலின் அதிஸ்டானப் பகுதியில் உள்ளது. கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் வெட்டிய இக் கல் வெட்டால் மலைக்கோட்டை அமைக்கப்படுவதற்கு முன்னரே கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வாக்கிலே இந்த பெருமாள் கோவில் வழங்கியி ருந்ததை அறிகிறோம்.[2] இதற்கும் முன்னே ஆறுநூற்றாண்டு களுக்கு முன்னர் இப்பகுதியை ஆண்ட அதியகுல மன்னன் ஒருவன் காலத்தில் இரு வைணவ குடவரைக் கோயில்கள் இங்கே எடுக்கப்பட்டன.[3] கருத்திலும் கலைத் திறனிலும், பல்லவர் படைப்பிற்கு இணையாக விளங்கும் இக் குடவரைச் சிற்பங்கள் கொங்கு நாட்டின் கலைக்கருவூலமாக விளங்குபவை.

## வெடிமருந்துக் கிடங்கு

திருமால் கோவிலுக்கு எதிரே வடகிழக்கு மூலையில் நெடுக்கு வாட்டாய் பிளந்த பீப்பாயை வைத்தாற் போல வளைவாகக் கூரைப் பகுதியுடன் ஒரு கட்டிடம் இருக்கிறது; பீரங்கிக் குண்டுகளுக்குத் தாக்குப்பிடிக்கும் வகையில் இக்கட்டி டம் செங்கல்லும் காரையும் பயன் படுத்தி கட்டப்பட்டிருக்கிறது. வெடிமருந்து வைத்திருக்க இதைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இந்தக் கட்டிடத்திற்கு வெளியே இருக்கும் ஒற்றை மரத்தின் கிளையில் ஒரு புச்சைக் கொடி பறக்கிறது. தஸ்தகீர் பெயரில் இக் கொடி பறப்பதாக லெபான் கூறியுள்ளார்.

## எவர் கட்டியக் கோட்டை?

கோட்டை யாரால் கட்டப்பட்டது; எப்போது கட்டப் பட்டது என்ற கேள்விகளுக்குத் துல்லியமாக இன்னாரால்; இந்த தேதியில் கட்டப்பட்டது எனக் கூறமுடியாது! என்றாலும், கிடைத்துள்ள சான்றுகளை வைத்து, கோட்டை எழுப்பியக் காலத்தைக் குத்துமதிப்பாக வரையறுக்கலாம்.

கோட்டையைக் கட்டியவர் யார் என்பது பற்றி இருவித கருத்துகள் நிலவி வருகின்றன. பதினேழாம் நூற்றாண்டில் சேந்தமங்கலம் பகுதியை நிர்வாகித்துவந்த இராமச்சந்திரநாயக்கர் கட்டினார் என்பது ஒரு கருத்து. 1882 - வாக்கில் பரந்த சென்னை மாநிலத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களைத் தொகுத்தளித்த இராபர்ட் சீவல் அக்கோட்டையை ஒரு பாளையக்காரர் கட்டினார் என்றக் கருத்தை ஏற்றுள்ளார்.[3] மைசூர் இராஜாவின் அரிகாரரராய் இருந்த இலட்சுமி நரசிம்மையரால் கட்டப்பட்டது என்பது மற்றொரு கருத்து. இராமசந்திர நாயக்கரின் படைபல, பணபல அந்தஸ்தை வைத்துப் பார்க்கையில், இத்தகைய கோட்டையைக் கட்டுவது என்பது அவரது சக்திக்கு மீறியதாகவே தோன்றுகிறது. கோட்டையில் கி. பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து விளங்கிவரும் திருமால் கோயிலுக்கோ, கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் அதியமன்னன் குணசீலன் எடுப்பித்த குடவரை கோயில்களுக்கோ இராமசந்திர நாயக்கர் திருப்பணிகள் ஏதேனும் செய்திருக்கலாம். கோயில் திருப்பணிச் செயல் செவி வழிப் பயணத்தில் கோட்டைப் பணியாக மாறியும் இருக்கலாம். சேந்தமங்கலத்தில் இவர் செய்த கோயில் திருப்பணிகளும் இங்கே நினைவு கூறத்தக்கவை.

மைசூர் இராசாவின் அரிகரராய் இருந்த இலட்சுமி நரசிம்மய்யரால் கட்டப்பட்டது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதாகத் தோன்றுகிறது. அரிகாரர் என்பவர் அந்நாளில் சிற்றரசர்களும், தங்களுக்காக செய்திகளைச் சொல்லிவரவும் கேட்டு வரவும் நியமித்துக்கொண்ட தூதுவர் போன்ற ஒரு அதிகாரி ஆவார். 1880களில் நாமக்கல்கோட்டையைப் பார்த்துஎழுதிய லெபான் கோட்டையின் புது மெருகைக் கண்டு, கோட்டை சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். அதன்படி கோட்டை 1750 - வாக்கில் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

இந்த காலக்கட்டத்தில் மதுரை-மைசூர் போரட்டத்தின் விளைவாய் மதுரை அரசு நசிந்து, மைசூர் உயர்ந்து இருந்தது. நஞ்சராயன் என்னும் மைசூர் தளவாய் கீழ் மைசூரை எதிர்த்து தாராபுரம் பாளையத்தின் மீது படையெடுத்து ஒடுக்கியிருக்கிறான்.[5] இவைகளுக்கு மேலாக, கோட்டை நுழைவாசலின்

வடக்குப்பக்கத்தில் வரைப்புச் சுவரில் பதித்திருக்கும்—கம்பீர மான சிங்கத்தின் புடைச்சிற்பம், கோட்டைக்கும் மைசூர் அரசிற்கும் உள்ளத் தொடர்பிற்கு ஒரு சான்றாக விளங்குகிறது. இந்த சிங்க உருவம் மைசூர் உடையார் அரசு வெளியீடுகளில் சித்தரிக்கப்படும் சிங்க உருவத்தை ஒத்திருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

## கோட்டையின் பயன்

கோட்டையின் அளவையும் அமைப்பையும் பார்க்கையில், இதை நாட்டைக்காக்கும் கோட்டை என்றோ, நீண்ட முற்று கைக்குத் தாக்குப்பிடிக்கக் கட்டியக்கோட்டை என்றோ கூறமுடி யாது. மிகவலுவான தானியக்கிடங்கும், வெடி மருந்துக் கிடங் கும் மட்டுல் இருப்பதால், இவைகளுக்கே, முக்கியத்துவம் தந்து அமைக்கப்பட்டக் கோட்டை இது என புலனாகிறது. சுதேச மன்னர்களின் படைகளும் ஐரோப்பிய கும்பனி படைகளும் தென்னகத்தை இரணகளமாக்கிக் கொண்டிருந்த அக்காலத்தில் உணவுப் பொருள்களையும், போர்த் தளவாடங்களையும், சேமித்து, பாதுகாத்து பயன் படுத்துவதென்பது மிகப்பெரும் பணியாக இருந்தது. இந்தப் பெரும் பணிக்கும், வேற்றுப்படை களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் கோட்டை பயன் பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

## வரலாறு

18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மைசூர் அரசால் நன்கு செப்பனிட்டு அமைக்கப்பட்ட இக்கோட்டை, நஞ்சராய னைத் தொடர்ந்து எழுச்சியுற்ற ஐதர் அலி, திப்பு சுல்தான் காலங்களில் மைசூர் வசமும், ஆங்கிலேயர் வசமும் அடுத்தடுத்து கைமாறியது. 1768–இல் முதன் முறையாக ஆங்கிலேயர் இக் கோட்டையைப்பிடித்தனர், கர்னல்உட் என்ற ஆங்கிலத்தளபதி யால் கைப்பற்றிய இக்கோட்டையை அதே ஆண்டில் ஐதர் அலி மீட்டுக்கொண்டார்.[6] ஐதர்-திப்பு காலங்களில் இக்கோட்டை கில்லாதார் என்னும் கோட்டைக் காவல் அதிகாரியின் கீழ் இருந் தது. அவனது அதிகாரம் வளையப்பட்டிவரை பரவியிருந்தது.[7] நாமக்கல்லைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து மைசூர்

சேனைக்குத் தேவையான உணவுப் பொருட்களையும், போர்த் தளவாடங்களையும் சேகரிப்பது அவனது முக்கியப் பணிகளில் சிலவாக இருந்தன.

மூன்றாம் மைசூர் போரைத் தொடர்ந்து, திப்பு சுல்தானுக்கும், ஆங்கில கும்பனியாருக்கும் இடையே ஏற்பட்ட 1792 சமாதான உடன்படிக்கையால் நாமக்கல்லும் அதன் கோட்டையும் ஆங்கிலேயர் வசமாயிற்று. அதுமுதல் ஆங்கிலப் படையின் ஒரு பிரிவு இங்கே வைக்கப்பட்டிருந்தது. 1832-இல் நாமக்கல் படையை எடுக்கும்வரை, கோட்டை ஆங்கிலப்படையால் பராமரிக்கப்பட்டிருந்தது.

# காலக்கடலில் கரைந்த கோட்டைகள்

அடையாளம் கண்டு கொள்ளத்தக்க வகையில் தடயங்க ளோடு காட்சியளித்த கோட்டைகளைப் பற்றி இது வரை பார்த்தோம். இவைதவிர வேறு பல கோட்டைகள் சேலம் மாவட்டத்தில் இருந்தன. ஆனால் அவை காலவெள்ளத்தில் காணாமல் போய்விட்டன. எனினும் வரலாற்று ஏடுகளிலும். ஆவணக்காடுகளிலும் தேடுகின்ற போது தென்படுகின்ற குறிப்பு களிலும், அவற்றைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள லாம். அவ்வாறு அறிந்து கொள்ளும் செய்திகள் மேலும் பல புதிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள உதவும்.

மண் மூடிப்போன மாளிகைகளையும் மறைந்து போன கோட்டைகளையும் தெரிவிக்கும் வரலாற்று மூலங்கள், நாளும் நடந்த நடப்புகளை எழுதிவைத்த தனி நபர்களின் நாட்குறிப்பு களாக, நிர்வாகத்தினரின் அறிக்கைகளாக, ஆணைகளாக, செய்தி பரிமாற்றக் கடிதங்களாக, கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அதிக அளவில் தோன்றின. ஐரோப்பியரின் இந்திய வருகையால் விளைந்த விளைவுகளில் இதுவும் ஒன்றாகும். வணிகச் சந்தை தேடி இந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய விணிகர்களும், அவருடன் சமயம் பரப்பவந்த கிருத்துவகுருமரர்களும், இங்குள்ள மக்களைப் பற்றியும், மன்னர்களைப் பற்றிம், தங்கள் நண்பர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும், எழுதிய கடிதங்களில் நிறையக் குறிப்பிட் டிருக்கின்றனர். இத்தகைய குறிப்புகள், செவிவழிச் செய்திகள், விசாரித்து உணர்ந்த தகவல்கள் ஆகியவற்றைஒப்பிட்டு, தெளிவு படுத்திக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் இந்திய வர லாற்றை எழுதும் முயற்சியில் ஐரோப்பிய அறிஞர்கள் 19-ஆம நூற்றாண்டின் துவக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட னர். அவர்கள் எழுதிய வரலாற்று நூல்களை மேலேக்குறிப்

பிட்ட நாட்குறிப்புகள் மற்றும் ஆவணக் குறிப்புகள் ஆகியவற்றோடு ஒப்பிட்டு படித்தால் கி. பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து மூன்றூறு ஆண்டு காலத்தில் வழங்கி, வடிவிழந்தக் கோட்டைகளில் பலவற்றைப்பற்றி அறிந்து கொள்ளலாம். அந்தவகையில் தெரிந்துகொள்ள முடிந்த கோட்டைகள் சிலவற்றை இந்த அத்தியாயத்தில் காண்போம்.

கி.பி. 1600க்குப்பின் சேலம், தர்மபுரி பகுதிகளில், கோட்டைகளைச் செப்பனிட்டுக் கட்டப்படும்பணி மூன்று கால கட்டங்களில் மிகத்தீவிரமாகவும், பரவலாகவும் மேற் கொள்ளப் பட்டன. மைசூர் - மதுரை பூசல்கள் துவங்கியதையடுத்து 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மைசூர் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தத்தக்கவகையில், மதுரை நகயக்க அரசிற்கு உட்பட்ட இப்பகுதியின் பாளையக்காரர்கள் பலரும் தங்கள் தங்கள் பகுதிகளில் புதிய கோட்டைகளைக் கட்டிக் கொண்டனர். ஏற்கனவே இருந்த கோட்டைகளைப் பலப்படுத்தினர். பின்னர் மதுரை நாயக்கரைத் தோற்கடித்து சேலம் பகுதிகளை மைசூர் நாட்டின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்ட பிறகு, 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மைசூர் உடையார் மன்னர்கள் சார்பில் கோட்டைகளேச் செப்பனிட்டுக் கட்டும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. சில புதிய மாவட்ட ஆட்சி மையங்களும் தக்க கோட்டைகளுடன் உருவாக் கப்பட்டன. இறுதியாக ஐதரும், திப்புவும் ஆங்கிலேயருடன் போராடிக்கொண்டிருந்த 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சில கோட்டைகள் கட்டப்பட்டன. சில கோட்டைகள் பலப் படுத்தப்பட்டன.

## திப்பு காலத்தில் இருந்த கோட்டைகள்

1792-இல் மூன்றாம் மைசூர் போரின் முடிவையடுத்து திப்பு சுல்தான் ஆங்கிலேயருடன் சமாதான அமைதி உடன் படிக்கைச் செய்துகொள்ளவேண்டியதாயிற்று. இந்த உடன்படிக் கையின்படி, சேலம் தர்மபுரி பகுதிகளை ஆங்கிலேயருக்கு ஒப் படைப்பதற்கு முன்பு; அதாவது 1792-க்கு முன்னர், சேலம் பகுதி திப்புவின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு மாநிலமாக சங்ககிரி சுபாதாரியாக இருந்திருக்கிறது அப்போது அந்த மாநிலத்தில் பதினான்கு மாவட்டங்கள், மாநில அளவிற்கு அடுத்த ஆட்சி

மையங்களாக இருந்ததாக பிரான்சிஸ் ஜே. மர்டன் குறிப்பிடு கிறார்.[1] அவரது செய்தியின்படி,

1. சங்ககிரி துர்க்கம் 2. நங்கவள்ளி 3. இடப்பாடி 4. ஓமலூர் 5. திருச்செங்கோடு 6. பரமத்தி 7. சென்னகிரி 8. நாமக்கல் 9. சேந்தமங்கலம் 10. இராசிபுரம் 11. சேலம் 12. ஆத்தூர் 13. பேளூர் 14. வீரகனூர் ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சி மையங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் திப்பு வின் ஆட்சியின் இறுதிக்காலத்தில் சங்ககிரி சுபாதாரியில் சேலம் மாவட்டங்களாக ஒன்பதுதான் இருந்தன. மேலே குறிப்பிட்ட பகுதி மாவட்டங்களில் சென்னகிரி இடப்பாடி. இராசிபுரம். பேளூர், வீரகனூர் ஆகிய ஐந்துமாவட்டங்களும் 1800-இல் கேப் டன் ரீட் ஏற்படுத்தியவை,[2] எனவே இவைபோக, எஞ்சியுள்ள ஒன்பது மாவட்டங்களில் திப்புவின் அமில்தார்கள் 1792-க்கு முன்பு ஆட்சி செய்திருக்கின்றனர் என்பது புலனாகிறது. அமில் தார்கள் ஆட்சி நடந்த இந்த ஒன்பது மாவட்டக் கஸ்பாக்களி லும், அவர்களது மாளிகைகளும், கோட்டைகளும் இருந்தன. அப்படி இருந்த கோட்டைகளில் ஐந்தை ஏற்கனவே சென்ற அத்தியாயங்களில் பார்த்தோம். மீதமிருக்கும் மூன்று கஸ்பாக் களில் திருச்செங்கோடு சமயக் குரவர்கள் காலத்திலிருந்தே சிறப்புடன் விளங்கிவரும் பதியாகும். இந்நகரில் பல்வேறு காலங் களில், பல்வேறுபகுதிகளில் தோன்றிய கோட்டைகளை அறிவது ஒரு தனிப்பெரும் ஆய்விற்கு உரியது.

## நங்கவள்ளிக் கோட்டை

1801-இல் ஓமலூருடன் ஒருங்கிணைக்கப்படுவதற்குமுன், மாவட்ட கஸ்பாவாக இருந்தது. 1792-க்கு முன்னர், திப்புவின் அமில்தாரர் அங்கிருந்தபோது அவரது அரண்மனையும், கோட் டையும் அங்கே இருந்தன. அந்தக் காலத்தில் ஊர் தற்போது இருக்கும் இடத்தில் இல்லை, ஊர் குளத்திற்கு மேற்கே, பெரிய பறைச்சேரிக்கு அப்பால் பேட்டை இருந்தது. பேட்டைக்கு அடுத்து கோட்டை இருந்தது. இது மண் கோட்டையானதால், பராமரிப்பு விட்டுப்போனதும் வெகுவிரைவில் அழிந்துவிட்டது, 1918-இல் வெளியான சேலம் கெஜட்டீரில், வெகு காலத்திற்கு முன்பே, எஞ்சியிருந்த நங்கவள்ளிக் கோட்டைப் பகுதிகளை

சிதைத்து அழித்துவிட்டதாக ரிச்சர்ட் குறிப்பிடுகிறார். இங்குள்ள நரசிம்ம சுவாமி கோவில் தொட்டியர் வகுப்பினரால் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. அக்காலத்தில் கோட்டை இருந்த பகுதியில் நரசிம்ம சுவாமி, அநுமன், முனியப்பன் தெய்வங்களை அமைக்கும் மரபிற்கு ஏற்ப இங்கே நரசிம்ம சுவாமி கோயில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சேந்தமங்கலம் கோட்டை

17-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே சேந்தமங்கலம் சிறப்புடன் விளங்கிவந்திருக்கிறது. நாமக்கல்லைவிட அதிக வருவாய் தந்த மாவட்டமாக இது திப்புவின் ஆட்சியில் சிறந்திருந்தது.[3] 1623 வாக்கில் சேந்தமங்கலம் மதுரைக்கு உட்பட்ட ஒரு பாளையமாக விளங்கியது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். முதலாம் முத்து வீரப்ப நாயக்கரின் ஆட்சிநடைபெற்றுக் கொண்டிருந்த அந்த காலத்தில் சேந்தமங்கலத்தை இராமச்சந்திரநாயக்கர் பாளையக்காரராய்இருந்து ஆட்சி செய்தார். இராமச்சந்திரநாயக்கர் தனதுதமையனாரான திருமங்கல நாயக்கரைப் பதவியிலிருந்து நீக்கி தாமே ஆட்சிப் பொறுப்பை எடுத்துக் கொண்டார். திருமங்கல நாயக்கரும் அவரது பிள்ளைகள் ஐவரும். சேந்தமங்கலத்திலிருந்து தப்பி சேலம் பாளையக்காரர் சலபதி நாயக்கரின் ஆதரவில் சில காலம் இருந்தனர். அவர்கள் சலபதி நாயக்கர் அரண்மனையில் தங்கி இருந்த போதுதான் 1624-இல் இராபர்ட்டி நொபிளி சேலம் வந்திருக்கிறார்.

இராமசந்திர நாயக்கர் காலத்தில் கட்டுமானப் பணிகள் நிறைய மேற்கொள்ளப்பட்டன. பாளையத்தின் தலைநகரான சேந்தமங்கலத்தில் கோட்டையும், கோவில்களும் கட்டப்பட்டன. இலட்சுமி நரசிம்ம சுவாமி கோவிலும், சோமேசுவரர் கோவிலும் இவரது காலத்தில் உருவான கோவில்கள் இன்றும் இருக்கின்றன. ஆனால் கோட்டை மட்டும் அழிந்து போய் விட்டது.

புலியுடன் போரிடும் வீரரின் அழகிய கற்சிலைகள் இரண்டு சேந்தமங்கலத்திலிருந்து கிடைத்திருக்கின்றன. தற்போது அவை

சேலம் அரசு அருங்காட்சியகத்தில் இருக்கின்றன. இச்சிலை களைச் செய்திருக்கும் விதத்தைப் பார்க்கையில் நுழைவாயிலின் இருபக்கங்களிலும்பொருத்துவதற்குச்செய்யப்பட்டவைபோலத் தோன்றுகின்றன. அவற்றின் கலையழகும், வேலைப்பாடும் அவை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கர் பாணி யில் செய்யப்பட்டவை என்பதைத் தெரிவிக்கின்றன. இச்சிலை களில் ஒன்றில் ''காளப்பா'' என்ற பெயர் கன்னடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், சிக்கதேவரா யனின் மேலாண்மை, இப்பகுதியில் நிலைப் பெற்றபிறகு வீரருக்கு எடுத்த வீரக்கற்கள் இவையெனத் துணியலாம். காளப்பா என்று ஒரு வீரக்கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் கல் வெட்டு அது அமைந்திருக்கும் இடத்தை நோக்கி, கல்லில் சித்த ரிக்கப்பட்டிருக்கும் வீரனின் பெயரைச் சுட்டிக்காட்டுவதாகத் துணியலாம். காளப்ப நாயக்கன்பட்டிக்கும், இந்த வீரன் ''காளப்பா'' விற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்பது ஆய்வில் தெளிய வேண்டிய ஒன்றாகும்.

17, 18 நூற்றாண்டுகளில் சிறப்புடன் இருந்த சேந்தமங் கலம் 19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே, அதன் அடை யாளங்கூட காண இயலாதவாறு அழிந்துவிட்டது

## பரமத்திக் கோட்டை

நங்கவள்ளி, சேந்தமங்கலம் கோட்டைகளைப் போல், முற்றிலும் அழிந்துபோய் அவை இருந்த இடத்தைக் கூட அறிய முடியாத அவலநிலை பரமத்திக் கோட்டைக்கு இன்னும் ஏற்பட வில்லை. கோட்டையின் பெரும் பகுதி அழிந்து போய்விட்டது என்றாலும்,மேற்கே நுழைவாசல் பகுதியில் சிலபகுதிகள் கோட் டைச்சுவரின் எச்சங்களாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவற் றையும், இவற்றை ஒட்டி சற்று உள்ளே இருக்கும் ஒருசிறிய கோவிலையும் தற்போது கோட்டை இருந்த இடத்தில் காண முடியாது. நுழைவாயிலை ஒட்டி கவிழ்த்துப் போடப்பட்ட நிலையில் சுமார் $5\frac{1}{2}$ அடி உயரமுள்ள அநுமார் கருங்கற் சிலை ஒன்று இருக்கிறது. கோட்டை நல்ல நிலையில் இருந்த போது. கோட்டையின் காவல் தெய்வங்களில் ஒன்றாக இதுவணங்கப் பட்டிருக்கவேண்டும். இச்சிலையின் உருவமைதியின் அடிப்படை யில் இதை 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கூறலாம்.

இக் கோட்டை 1792 வரை இருந்திருக்கலாம் எனக் கூற முடிவதுபோல, எப்போது கட்டப் பட்டிருக்கக் கூடும் என்பதை அறுதியிட்டுக்கூற இயலவில்லை. சேலம் மேனுவலில் லெபான் 17-ஆம் நூற்றாண்டின் அறுபதுகளில் மதுரை நாயக்க மன்னர்கள் தங்கள் நாட்டின் வடக்கு எல்லைப் பகுதிகளைப் பலப்படுத்திக்கொள்ள கட்டிய இடங்களில் ஒன்றாக பரமத்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்.[5] இதன் அடிப்படையில் இக்கோட்டை 17-ஆம் நூற்றாண்டின் அறுபதுகளில் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம் எனக் கூறலாம். தற்போதைய நிலையில் ஓமலூர்க் கோட்டையைப் போன்று கருங்கல்லும் சேற்று மணலும் கலந்து கட்டப்பட்ட கோட்டையாக இருக்கக் கூடும் என்பதற்கு மேலாக, இதைப் பற்றிவேறு எதையும் கூற இயலவில்லை.

## மைசூர் உடையார் காலத்துக் கோட்டைகள்

மைசூர் உடையார்கள் சேலம் பகுதியை தமது நாட்டின் ஒரு பகுதியாக அமைத்துக் கொண்டபோது ஏற்கனவே சிறப்புற்றிருந்த சில ஆட்சி மையங்களை மேலும் செம்மைப்படுத்தி, தங்கள் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்ப வலிமைப்படுத்திக் கொண்டனர். இவ்வாறு வலிமைப்படுத்தப்பட்ட ஆட்சி மையங்களில் சில இவர் காலத்தில் சிறப்புடன் விளங்கி, பின்னர் புகழ் மங்கிப் போயின,

தொட்டகிருஷ்ண ராசன் ஆட்சிக் காலத்தில் 1714, 1717 ஆகிய ஆண்டுகளில் வழங்கிய இரு செப்புப் பட்டயங்களின் வாயிலாக 18-ஆல் நூற்றாண்டிற்கு முன்பு வழக்கில் இருந்த இப்பகுதி நாட்டுப் பிரிவுகள் எப்படி மாறின என்பதை அறியலாம். 1714,ஆம் ஆண்டு ஏத்தாப்பூர் சுத்தக் கிரையப் பட்டயம், சென்ன இராசய்யன் என்பான், ஏத்தாப்பூர் பிராமணர்களிடமிருந்து கிரையம் செலுத்தி நிலம் வாங்கியதைப் பற்றியது. 1717-இல் கிருஷ்ண ராசன் அரச சாசனமாக வழங்கிய பட்டயம், அவன் எட்டுப் பெண்களை மணந்து கொண்டதைத் தொடர்ந்து சங்ககிரியில் ஒரு கன்னட குடியிருப்பை ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.[6] இப்பட்டயங்களின் வாயிலாக கீழ்க்காணும் செய்திகளை அறிகிறோம்.

கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் தற்போதைய ஆத்தூர் வட்டம் மகதை மண்டலத்தின் ஒரு உட்பிரிவாக மலைநாடு என வழங்கியது. ஆத்தூர்வட்டத்துடன் தென்னார்க்காடுமாவட்டத்தின் சில பகுதிகளும் சேர்ந்து மகதை மண்டலமாக விளங்கியது. சேலம் வட்டம் சேரமண்டலத்திற்கு உட்பட்ட பகுதியாய் இருந்தது. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தப் பிரிவுகள் மறைந்தன. மகதை மண்டலத்தின் மலைநாடும், சேர மண்டலத்தின் சேலமும் குன்னத்தூர் ஏழ்கரை நாட்டின் உட் பிரிவுகளாயின. இந்தஉட்பிரிவு மையங்களில் சில கோட்டைக் கொத்தளங்களுடன் சிறந்து விளங்கின.

## பேளூர்க் கோட்டை

ஆத்தூர் வாழப்பாடி கிராமத்திற்கு அடுத்த ஒரு சிறு கிராமமாக தற்போது [பேளூர் இருக்கிறது. ஆனால் தொட்ட கிருஷ்ண ராசன் காலத்தில் இது குன்னத்தூர் ஏழ்கரைநாட்டின் உட்பிரிவு மாவட்டம் ஒன்றின் தலைமை மையமாக விளங்கியது. இதற்கு முன்பிருந்தே பேளூர் சிறப்புற்று விளங்கிவந்திருக்கிறது. பேளூரின் பழையபெயர் வெளியூர் எனக் கல்வெட்டுக் குறிப்பால் அறிகிறோம், எருத்த தொண்டியான் பிரமகண்ணனும், சக்தி கமலாதேவியும்கனங்களுக்கும்பதியாகியகணபதியைப்போற்றும் சிறபத்தோடு, வெளியூர்தான்தோன்றி ஈசுவரர் கோவிலில் காணப்படும் கி. பி 11-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் ஊரின் பெயர் வெளியூர் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது.[7] மேற்படிக் கோவிலில் உள்ள சோமஸ்கந்தர் திருமேனியின் பீடத்தின் பின்புறத்திலும் திருவாசியின் பின்புறத்திலும் கி. பி. 1628-இல் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்க்குறிப்பால் திம்மப்ப நாயக்கர் அய்யன், அவன் குமாரன் இரமப்பய்ய நாயக்கர் என்ற இரு நபர்களை அறிகிறோம்.[8] பீடத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கும் குறுவாள், சேலம் அழகிரிநாதப் பெருமாள் கோவிலிலும், நாமக்கல் சிங்கப்பெருமாள் குடைவரைக் கோவில் [கோபுர வாசலிலும் காணப்படும் குறுவாள் சிற்பசித்தரிப்பைப் பெரிதும்ஒத்துள்ளது. இது இந்த இருபெரும் சேலம் பாளையக்காரரோடு சம்மந்தப் பட்டவர்கள் என்பதைச் சுட்டுவதாகத் தோன்றுகிறது.

பேளூரை அடுத்த செக்கடிப்பட்டி கிராமத்தில் கிடைத்திருக்கும் கல்வெட்டின் வாயிலாக சேலம் பாளையக்காரரின்

மகன் இலட்சுமண நாயக்கர் பன்றிவேட்டையாட வெளியூருக்கு வந்தது; வெளியூரில் தங்கி தந்தை சென்னம நாயக்கர் பெயரில் மடம் ஏற்படுத்தியது; வெளியூர் அரண்மனைவாசலில் நீர் வந்து நிறையும்படி ஆற்றில் அணைக் கட்டியது போன்ற செய்திகளை அறிகிறோம்.[9] இவற்றுள் நமக்கு முக்கியமானது இலட்சுமண நாயக்கர் காலத்தில் வெளியூரில் அரண்மனை இருந்தது என் பதே. தற்போது கிராமத்தின் வடமேற்குப் பகுதியில் கோட்டை மேடு என்று ஒரு பகுதி அழைக்கப்படுகிறது. மேடிட்டிருக்கும் இப்பகுதியில் அரண்மனையும் கோட்டையும் இருந்ததின் விளை வாக தற்போது கோட்டைமேடு என்ற பெயர் மட்டும் இங்கே தங்கி இருக்கிறது.

இலட்சுமண நாயக்கரின் முன்னோன் சென்னம நாயக்கர் 1663-வாக்கில் சேலம் பாளையக்காரராக இருந்ததை ஆத்தூர் இனாம் பதிவேட்டுக் குறிப்பால் அறிவதை முன்னமே குறிப்பிட் டுள்ளோம். 1689-இல் வெளியூர், மைசூர் மன்னன் சிக்கதேவ ராயன் வசமாயிற்று.[10] இதன்பிறகு கன்னடஉச்சரிப்பில் வெளி யூர், பெளியூராகி பேளூராயிற்று. மைசூர் ஆட்சியில் பேளூர் மாவட்டத்தின் கஸ்பாவாக விளங்கியது. பேளூரின் பெருமை குன்றியபோது ஆற்றை ஒட்டி அமைத்திருந்த மண் கோட்டை யும் கவனிப்பாரின்றி கால வெள்ளத்தில் கரைந்து போனது.

## பெத்தநாயக்கன்பாளையம் கோட்டை

ஆத்தூர் வட்டத்தில், சேலத்திற்குக் கிழக்கே, சுமார் 35 கி. மீ. தூரத்தில், வசிஷ்டா நதியின் தென்கரையில் பெத்த நாயக்கன்பாளையம் இருக்கிறது. பதினேழாம் நூற்றாண்டில் இருந்த ஒரு பாளையக்காரன் பெயரால் பெத்தநாயக்கன் பாளையம் உருவானதாக ரிச்சர்ட் குறிப்பிட்டுள்ளார்.[11] செக்க டிப்பட்டி கல்வெட்டில் கூறப்படும் சேலம் சென்னம நாயக்கரின் ஆறு பிள்ளைகளில் ஒருவரான பெத்தநாயக்கனும் ரிச்சர்ட் குறிப்பிடும் பெத்தநாயக்கனும் ஒருவரே எனக் கொள்ளலாம். இதன் அடிப்படையில் சென்னம நாயக்கரின் ஆறு பிள்ளைகளும் தங்களுக்கென்று தனித்தனியாக சிறு பாளையங்களை ஏற்படுத் திக் கொண்டிருக்கின்றனர் என்றும் துணியலாம்.

பெத்தநாயக்கன் புதிய பாளையம் ஏற்படுத்தி, அதற்குரிய தலைநகர், அரண்மனை, கோட்டை ஆகியவற்றைப் பதினேழாம் நூற்றாண்டில் எழுபது அல்லது எண்பதுகளில் கட்டியிருக்கவேண்டும். பெத்தநாயக்கன் கட்டிய கோட்டை மைசூர் ஆட்சியில் இருந்தது. பின்னர் அழிந்துவிட்டது.

## கெட்டி முதலிகள் காலத்துக் கோட்டைகள்

கி. பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் கெட்டிமுதலிகளின் ஆட்சி சேலம் பகுதிகளில் நிலவியபோது, ஆத்தூர், மேட்டூர், ஓமலூர், திருச்செங்கோடு, சங்ககிரி பகுதிகளில் பல கோவில்களும், கோட்டைகளும் எழுந்தன. ஆத்தூரிலும், ஓமலூரிலும் கெட்டி முதலிகள் கட்டிய கோட்டைகளை ஏற்கனவே பார்த்தோம். இவை தவிர மேச்சேரி, சம்பள்ளி, அமரகுந்தி, தாரமங்கலம், ஆறகளூர் ஆகிய இடங்களிலும் கெட்டி முதலி குடும்பத்தினர் கோட்டை கட்டி வாழ்ந்திருக்கின்றனர்.

## ஆறகளூர்க் கோட்டை

ஆத்தூர் வட்டத்தில், தலைவாசலுக்கு சுமார் 4 கி மீ. தென் கிழக்கே, வசிஷ்ட நதிக்கரையில் ஆறகளூர் இருக்கிறது. இங்கே 17-ஆம் நூற்றாண்டில் வேணுவராயன் என்ற சிற்றரசன் கோட்டை கட்டிக்கொண்டு அரசாண்டதாக லெபான் குறிப்பிடுகிறார்.[12] இந்தக் கோட்டையைச் சுற்றி ஆறு அகழிகள் இருந்ததால் ஆறுஅகழி ஊர் என்று நகருக்குப் பெயர் வாய்த்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார். வேணுவனராயன் திப்புசுல்தான் படை இங்கே வரும்போது கல்ராயன் மலைக்கு ஓடிவிட்டான் எனக் கூறப்படும் செய்தியால், இவனது காலம் திப்புசுல்தான் காலமாகிய பதினெட்டாம் நூற்றாண்டு என்பதை அறியலாம். வேணுவராயன் என்பதை வேணுவனராயன் என்பதின் குறுக்கமாக நாம் எடுத்துக்கொண்டால் மூங்கில் காடுகளுக்கு தலைவனான வேடர் குல வேந்தனாக இவன் இருந்திருக்கக்கூடும் எனக் கொள்ளலாம்.

வேணுவராயனுக்கு முன்பே ஆறகளூர் கோட்டையுடன் கூடிய கோநகராகி இருக்கிறது. ரிச்சர்ட், சேலம் புராணத்தில் ஆறகளூர் ஏகாம்பர முதலியார் என்ற சிற்றரசனின் கோநகராக இருந்தது எனக் கூறப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.[13] மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலிருந்தே இவ்வூர் சிறப்புற்று விளங்கி வந்தமைக்கு, இங்குள்ள திருக்காமேசுவரர், கரிவரதப் பெருமாள் கோவில்களும், அவற்றில் உள்ள கல்வெட்டுகளும் சான்றுகளாக இருக்கின்றன.

ஏகாம்பரமுதலியாரை, கெட்டிமுதலிகள் குடும்பத்தைச் சேர்ந்தவராக ஏற்றுக்கொண்டால், ஆத்தூரில் கெட்டி முதலிகள் வலிவோடு விளங்கிய காலத்தில். அவர்களுக்குத் துணையாக, ஒருபாதுகாப்பு அரணாக ஆறகளூர் கோட்டை இருந்திருக்கக் கூடும் எனக் கொள்ளலாம். இக்கோட்டையின் எச்சப் பகுதிகள் ஏதும் கிடைக்கப்பெறாத நிலையில், இதன் அமைப்பையும், தன்மையையும் தெளிவாகக் கூற முடியாது.

## மேச்சேரிக் கோட்டை

ஓமலூருக்கு வடமேற்கே, சுமார் 12. கி. மீ. தூரத்தில் மேச்சேரி இருக்கிறது. தற்போது ஊர் இருக்கும் இடத்தில் முன்பு ஏரிநீர்இருந்தது.செவிவழிச் செய்தி தாரமங்கலம்கோவில் கட்ட ஏனாதியில் வெட்டி எடுத்த கற்களைச் சுமந்துவந்த மாடுகள் இடையில், இங்கே இளைப்பாறி மேய்ந்தாகக் கூறும். கெட்டி முதலிகளின் மாடுகள் மேய்வதற்கு உரிய இடமாக விளங்கியதால்,மேய்ச்சல்ஏரி என இவ்விடம் அழைக்கப்பட்டது. காலப் போக்கில் மேய்சல் ஏரி மேச்சேரி ஆகியது.

மேச்சேரியில் கெட்டி முதலிகள் கட்டிய கோட்டை ஒன்று இருந்தது. சோழப்பாடிக் கோட்டைக்கு அடுத்த அரணாக இந்தக் கோட்டை கெட்டி முதலிகளுக்கு இருந்தது. கோட்டையின் பேட்டை தற்போது இருக்கும் ஊருக்கு வெளியே மேற்கில் இருந்தது, பேட்டைக்கு அடுத்து கோட்டை இருந்தது. கோட்டை இருந்ததற்கு அடையாளமாக அதன் இடிபாடுகளை 1918-இல் அங்கே கண்டதாக ரிச்சர்ட் குறிப்பிட்டுள்ளார்.

மைசூர் ஆதிக்கத்தின் கீழ் மேச்சேரி வந்தபிறகு, இதன் முக்கியத் துவம் குறையத் துவங்கியது. இந்நூற்றாண்டின் துவக்கத்தில், பாதுகாத்து பராமரிப்பார் இல்லாமையால் கோட்டை அழிந்தது.

## அமரகுந்திக் கோட்டை

அமரகுந்தி தாரமங்கலத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. தற்போது குக்கிராமமாக இருக்கும் அமரகுந்தி ஒருகாலத்தில் கெட்டி முதலிகளின் தலைநகராய் இருந்ததாகக் கூறப்படுகிறது.[13] ஊரின் மீது செல்லும் தார்ச்சாலையின் மேற்குப்பகுதியில் கிராமம் இருக்கிறது. சாலையின் கிழக்குப் பக்கத்தில் திறந்த வெட்ட வெளியும் பல சிறிய கோவில்களும் இருக்கின்றன. அவற்றுள் சொக்கநாதர் கோவிலும் வரதராச பெருமாள் கோவிலும் குறிப்பிடத்தக்கன. தாரமங்கலம் கோவிலுக்கு முன்னே கிடக்கும் பெரும் கல்தூண்களைச்செய்திருக்கும் ஏனாதி கற்களே, இங்குள்ள பழைய கோவில்கள் நான்கைக் கட்ட பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோவில்கள் இருக்கும்இடத்திற்குத் தெற்கே முன்பு பேட்டையும் கோட்டையும் இருந்தன. கெட்டி முதலிகளின் வீழ்ச்சியைத்தொடர்ந்து கோட்டை அழிந்தது. கோட்டையின் அகழியும் மதிலும், மிகவும் சிதைந்துபோய், கூர்ந்துகவனித்தால் புலப்படுகின்ற நிலையில் 1918 வாக்கில் இருந்ததை ரிச்சர்ட் சேலம் கெஜட்டீரில் குறிப்பிட்டிருக்கிறார். தற்போது இங்கிருக்கும் கோவில்களோடு, இப்பகுதி கெட்டி முதலிகளின் தலைநகராய் விளங்கியது என்ற செய்தியை இணைத்துப் பார்க்கையில், விசயநகரத்தின் சந்திரகிரியைப் போன்று, கெட்டி முதலிகள் நிலைதளர்ச்சியுற்று தாழ்வுற்ற காலத்தில் அமைத்துக் கொள்ளப்பட்ட தலைநகராக அமரகுந்தி இருந்திருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது. இங்குள்ள கோவில்களின் அளவும் வேலைப்பாடும் தாரமங்கலம், பவானி போன்ற இடங்களில் காணப்படுவதைவிட மிகவும் தாழ்ந்திருப்பது மேற்படி கருத்திற்கு வலிவூட்டுவதாக இருக்கிறது. இதன் அடிப்படையில் பார்க்கும் போது அமரகுந்தி கோட்டை 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

## தம்மம்பட்டிக் கோட்டை

ஆத்தூர் வட்டத்தில், சுவேதா நதிக்கரையில் தம்மம்பட்டிக் கிராமம் இருக்கிறது. பச்சைமலை கொல்லிமலைப் பகுதிகளில் விளையும் பொருள்களின் விற்பனைக்கு இது ஒரு சந்தை கூடும் இடமாக வெகுகாலமாக இருந்து வருகிறது. சந்தை வியாபாரிகளுக்கும் கிராம மக்களுக்கும் பாதுகாப்பாகத் தம்மம்பட்டியில் 17-ஆம் நூற்றாண்டில் ஒரு சிறிய கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. கோட்டை கட்டியவரைப் பற்றிய உறுதியான விவரம் ஏதும் இல்லை. தற்போது ஊருக்கருகே இருக்கும் நரசிம்ம சுவாமி கோவிலை மதுரநாயக்கர் என்ற பாளையக்காரர் கட்டியதாகக் கூறப்படுகிறது.[14] பெத்தநாயக்கன் பாளையத்துக் கோட்டையைக் கட்டிய பெத்தநாயக்கரைப்போல, மதுரை நாயக்கரும் ஒரு சிறிய பாளையக்காரராக இருந்திருக்க வேண்டும். கோவிலைக் கட்டிய மதுரநாயக்கரே கோட்டையையும் கட்டியிருக்கக் கூடும்.

கோட்டை 120 கெஜம் நீளமுள்ள பக்கங்களைக் கொண்ட சதுரமாக அமைக்கப் பட்டது.[15] இதன் அடிப்படையில் கணக்கிட்டுப்பார்த்தால், சுமார் 54 கிரவுண்ட் நிலத்தை உள்ளடக்கியதாகக் கோட்டை கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறியலாம். கோட்டையின் தென் மேற்கு மூலையில் காவல் தெய்வமான கோட்டை முனியப்பன் சன்னதி இருந்திருக்கிறது. கோட்டையின் இடிந்த பகுதிகளையும், முனியப்பனின் சிலையையும் 1918-இல் மக்கள் பார்த்துள்ளதாக ரிச்சர்ட் குறிப்பிட்டுள்ளார்.

# அடிக்குறிப்புகள்

## 1. தமிழகக் கோட்டைகள்

1. நக்கீரர், நெடுநல் வாடை, வரி 83 போதவிழ்குவளைப் புதுப்பிடி காலமைத்து, எனவரும் இவ்வரியில் திருமகளை குறிக்கும் நேரடிச்சொல் இல்லையெனினும், தமிழ் அறிஞர்கள் இது கஜலட்சுமி உருவத்தை குறிப்பதாகவே கருதுகின்றனர். கலித்தொகையில் ஒரு பாடலில் (44) எழில் வேழம் பூநீர்மேல் சொரிதர புல் நெகிழ் தாமரை மலர் அம்கண் வீறு எய்தி திரு நயந்து இருந்தென்ன. கஜலட்சுமி உருவம் தெளிவாக கூறியுள்ளது இங்கே ஒப்புநோக்கத் தக்கதாகும். கஜலட்சுமி உருவத்தை வாயில் நிலைகளில் சித்தரிக்கும் வழக்கு கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிந்து இந்தியா முழுமையும் வழங்கி வந்திருக்கிறது. மௌரியர் காலத்து பர்குத்தூபியின் வேதிகை வட்டங்களிலும், சாஞ்சி தூபியின் தோரணவாயில்களிலும் கஜலட்சுமி சிற்பங்களுக்கு விளக்கம் கூறுவது போல கலித்தொகை பாடல்வரி இருப்பது கலைப்படைங்களுக்கு அமைந்த ஒரு சான்றெனக் கொள்ளலாம்.

2. பரணர் புறம். 341, வரி 5.

3. மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சி, வரி 64

4. மேலதுவே, வரி 351.

5. இளங்கோவடிகள், சிலம்பு, ஊர்காண் காதை, வரி 62

6. கடியலூர் உருத்திரங் கண்ணனார், பெரும்பாணாற்றுப் படை வரி 405.

7. சுப்பிரமணியன், ந டாக்டர், சங்க கால வாழ்வியல், சென்னை, 1986. பக். 176.

8. மேலதுவே. பக். 197,

9. BALASUBRAMANYAN, S.R; Middle Chola Temples (A.D. 985-1070). Haryana, 1975. P, 21.

10. ஆனந்த விகடன் அகராதி, சென்னை, 1937., பக்.709

## 2. ஆத்தூர் கோட்டை


1. Maclean. C. D. Ed, glossary of the Madras Presidency Asian Educational Services, New Delhi, 1982. P-12

2. Le. Fanu. H., A. Manual of the Salem District in the Presidency of Madras Vol. II, Madras 1883, P-84.

3. மேலதுவே

4. மேலதுவே

5. Arokiaswami, M, Dr. The Konku Country. Madras, 1956.. P-374.

6. Rangacharyy, V., A Topographical List of the Inscriptions of the Madras Presidency Compiled till 1915. Vol. II. Asian Educational Service, New Delhi, 1985. P–1207-1208, ஐந்து கல்வெட்டுகளில் பழமைமிக்கது. சோழபரகேசரி வர்மனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும் இதுகாய நிர்மலே சுவார் கோவில் ஊழியர் மூவர் திருமேற்றளி நாயகர் கோவிலுக்கு அளித்த நெல் தானத்தை கூறுகிறது. இதன் மூலம் அக்காலத்தில் காய நிர்மலேசுவார் திருமேற்றளி நாயகர் என அழைக்கப்பட்டதை அறிகிறோம், சோழர் காலத்தில் ஆத்தூர் மலையமானாறு என்ற பெயரில் பிரம்மதேயமாக இருந்தது என்பதையும் இந்த சோழர் கால கல்வெட்டால் அறிகிறோம். இந்த செய்தி மலையமானாறு என்பது, மலையமான் ஆற்றூர் ஆகி ஆத்தூராக குறுகியிருக்குமோ என சிந்திக்கவைக்கிறது. மலைநாடென்னும் மகத மண்டலத்து ஜனநாதவள நாட்டை, கிருஷ்ணதேவராசரின் மேலாண்மைக்கு உட்பட்டு ஆண்டுவந்த அக்கி திம்மைய நாயக்கர், நீவாநதிக்கரையின் வடக்கு கரையில் உள்ள வில்லவராயன் நத்தத்தை அக்கி திம்மைய நாயக்க சதுர் வேதிமங்கலம் என்று தமது பெயரில், அருணகிரி நாதனின் மகன் ஸ்ரீ ரங்கராஜபட்டனுக்கு கி.பி. 1513-இல் அளித்த கிராம தானத்தை தெரிவிக்கிறது. அருணகிரி நாதனின் மற்றொரு மகனான பத்மநாப பட்டனுக்கு, மயிலை அகரம் என்ற பெயரில் துலுக்காண நாயக்கர்

கி.பி.1509-இல் தானமளித்ததை ஒரு கல் வெட்டு கூறு கிறது. துலுக்காண நாயக்கர் அக்கி திம்மையநாயக்கரின் மகன் என்பதை ஆறகளூர் திருக்காமேசுவரமுடையார் திருக்கோவிலில் இருக்கும், இவரது இதே ஆண்டுக் கல் வெட்டால் அறிகிறோம. இக்கல்வெட்டுச் செய்திகள் தந்தை அக்கி திம்மைய் நாயக்கரின் காலத்திலேயே. அவரது மகன் துலுக்காண நாயக்கரும் ஆட்சியதிகாரம் பெற்றிருந்தார் என்பதை தெரிவிக்கின்றன.

7. Administrativa Report of the Government Museum and Connemara Public Library Madras for the year 1947-48. Appendix III P-19.

8. Subba Rao, N., Chikkadevaraja Wodeyar of Mysore and his successors (1673-1761). Quarterly Journal of the Mythie Society Vol. XXIII. No. 1. Bangalore. 1932. P-35,

## 3. ஓமலூர்க் கோட்டை

1. சந்திரமூர்த்தி. மா. ஓமலூர்க் கோட்டை, ஆய்வுத்தேன், சென்னை. பக்-15.

2. Brian J. Murton, Towns and Markets in Salem in the Eighteenth Century, Srinidhih, Perspectives in Indian Archoeology, Art and Culture, Shri. K. R. Srinivasan Festschrift, Madras, 1983. P-400.

3. Ramaswami, A. Dr. Madras District Gezetteers, Salem, Madras. 1967. P-700.

4. மேலதுவே

5. 29 of 1900.

6. பூங்குன்றன். ஆர், தாரமங்கலம், தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு, சென்னை. 1972. பக்-15.

7. Epigraphica India, Vol VI. P-311.

8. Rangacharya V., A Topographical List of the Inscriptions of the Madras Presidency Vol. II A E S. New Delhi, 1985. P-1202.

9. Arokiaswami, M. Dr. The Kongu Country. Madras. 1956. P-366.

10. மேலதுவே

11. Sathyanatha Aiyer. R.. History of the Nayaks of Madura, Madras. 1980. P-74. எருமைகட்டிபாளையம் பற்றி வேறு சரியான சான்றுகள் பெற இயலாத நிலையில், கெட்டி முதலி மரபுடன் தொடர்புபடுத்தி இங்கே கூறப்பட்டுள்ளது. ஊகத்தின் அடிப்படையில் குறித்துள்ள இக்கருத்தை நிறுவ மேலும் வலிவான சான்றுகள் தேவைப்படுகின்றன.

12. மேலது. பக்-42.

13. மேலது. பக்-223.

14. மேலது. பக்-74.

15. மேலது. பக்-70.

16. 650 of 1905.

17. Le Fanu. Vol I. P-48.

18 Marx Wilks and Murray Hemmeriek, Historical Sketehes of the South Indian History From the Earliest time to the last Muhmmaden Dynasty. 1831. Vol. I, P-227,

## 4. சங்ககிரி கோட்டை

1. Rangacharya, V. A Topographical List of the Inscriptions of Madras Presidency Vol. II. Asian Educational Service, New Delhi, 1985. P-1225.

2. Ramaswami. A, Dr. Madras District Gazetteers Salem, 1967. P-718.

3. Hayavardana Rao, C. History of Mysore (1766-1799 A. D) Vol. III. Bangalore 1946. P-286.

4. மேலதுவே.

5. Ramaswami. A. Dr. Madras District Gazetteers Salem. P-718.

6. மேலதுவே.

7. மேலது. பக். 735. சம்பாஜி என்ற பெயர் சம்போஜி என கெஜட்டீரில் தரப்பட்டுள்ளது, சம்போஜி (கி. பி. 1623-1662) மராத்திய வீரன் சாகஜியின் பிள்ளைகளில் மூத்தவன். மராட்டிய ஆட்சியை ஏற்படுத்திய வீரசிவாஜியும், தஞ்சையில் மராட்டிய மரபை நிறுவிய ஏகோஜியும் இவனுக்கு இளையவர்கள். சாகஜி பீஜப்பூரின் துணைப் படைத்தளபதியாக இரண்டுல்லாகானின் தலைமையில் கர்னாடகத்திற்கு படைநடத்திவந்தவன், காலப்போக்கில் தனது திறமையாலும், முயற்சியாலும் கர்னாடகத்தில் நன்கு காலூன்றிக் கொண்டான். பெங்களூரை தலை நகராய் கொண்டு பிஜப்பூர் பால்க்காட் பகுதியை தனது நாடாகக் கொண்டு ஆண்டான். 1646 சனவரி வாக்கில் ஜெகதேவராயனை காவிரிப் பட்டனத்திலும், கிருஷ்ணகிரியிலும் தாக்கி தோற்கடித்து பாராமகாலின் பெரும் பகுதியை கைப்பற்றினான். இந்த வெற்றிக்குப்பிறகுதான் வேலூர் முற்றுகைக்கு சென்றான். இந்த சமயத்தில்தான் சம்பாஜி பாராமகால் பகுதியுடன் இணைந்திருந்த சங்ககிரி பகுதிக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் போர் ஒன்றில் பீரங்கிகுண்டு தாக்கி சம்போஜி இறந்தான். எனவே 1546-க்கும் 1663-க்கும் இடைப்பட்டக்காலப் பகுதியில் கோட்டையில் காமட்சி அம்மன் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக்காலக் கட்டதில் சேலம் பகுதியில் மராத்திய செல்வாக்கு இருந்தமைக்கு ஒரு நல்ல சான்றாக புதுசத்திரம், பாச்சல் கிராமத்தில் செல்லாண்டி அம்மன் கோவிலில்

இருக்கும் ஒன்பது அடி கருங்கல் குதிரைக்கு முன் நிறுத்திஇருக்கும் மராத்திய தலைவனின் சிலை விளங்குகிறது. இத்தலைவனது தலை அணி அமைப்பும், நீண்ட பைஜாமா போன்ற கால் சட்டையும் மொகலாயரைத் தழுவிய பீஜப்பூரின் பாணியை தெரிவிக்கின்றன.

8. புலவர். குழந்தை, தீரன் சின்னமலை, ஈரோடு, 1969 பக். 14.

9. மேலது. பக். 97.

10. மேலது. பக் 86.

## 5. சேலம் கோட்டை

1. South Indian Inscriptions. Vol. IV. No. 142.

2. Hayavardana Rao. History of Mysore. Vol. III. Bangalore, 1946. P-73.

3. மேலது. பக். 93.

4. சேலம் மாவட்ட வரலாற்று ஆவண ஆய்வுக்குழு செய்திமடல், ஏப்ரல் 1986. பக். 2.

5. Arokiaswami, M. Dr. The Kongu Country, Madras, 1956. P-355.

6. மேலதுவே.

7. சேலம் மாவட்டம் வ. ஆ. ஆ. கு. செய்தி மடல் ஏப்ரல் 1986. பக். 2.

8. Sgbba Rao, N., Chikkhadevaraya and his successors (1673-1761), Quarterly Journal of Mythic Society, Vol. XXIII., No. 1., P-36.

9. வெ. இரா. துரைசாமி, சேலம் மாவட்ட வ. ஆ. ஆ. கு. செய்திமடல் ஜூலை. 1985. பக். 3.

10. மேலதுவே.

11. Subba Rao. N., Chikkadevaraya and his successors (1673-1761), Q. J. M. S. Vol. XXIII, No. 1. P-35

## 6. நாமக்கல் கோட்டை

1. ROBERT Sewell, List of the Antiquarian Remains in the Presidency of Madras Vol I, Madras, 1882 P. 204.

2. ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் இரண்டாம் ஆட்சி யாண்டிற்கு உரிய (கி.பி. 1218) இக்கல் வெட்டு கோவிலின் தெற்கு, மேற்கு, வடக்குச் சுவர்களில் உள்ளது. இது ஏழூர்நாட்டு குடி மக்கள் செய்த நில தானம் பற்றியது. இதில் நாமக்கல் மலையை திரு ஆரைக்கல் என்றும், கோவிலை அருளாளன் விண்ணகர் என்றும், இறைவரை எதிரிலிப் பெருமாள் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. ஆரைக்கல் என்ற சொல்லாட்சி ஆய்விற்கு உரியது. மதில்களைக் கொண்டமலை என்று இதற்கு பொருள் கொள்ளலாம். அதன் படி நோக்குகையில் கி. பி. 13–ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே நாமக்கல் மலைக் கோட்டையாக விளங்கி இருக்கக் கூடும் என்பது புலனாகிறது. கோவிலின் கிழக்குச் சுவற்றில் கஜபதி விபால திப்பராச உடையார் மகன் இலட்சுமி காந்த அரச என்ற கன்னடவரியும் அதன் தமிழாக்கமும் உள்ளன. இலட்சுமி காந்த உர்சு ஐதர் அலி அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளில் ஒருவர்.

3. சிங்க பெருமாளுக்கும், பள்ளி கொண்ட பெருமாளுக்கும் முறையே மலையின் கிழக்கு, மேற்குப் பகுதிகளில், கி.பி. 8–ஆம் நூற்றாண்டின் முதற்பாதியில் அதியகுல மன்னன் குணசீலனால் எடுக்கப்பட்ட இக்குடவரைக் கோவில்கள் கொங்கு நாட்டு கலைக் கருவூலங்களாகும் சாளுக்கிய, பல்லவ, பாண்டிய பாணிகளின் கலையில் உருப்பெற்ற கொங்கு பாணியை இக்குடவரைக் கோவில் சிற்பங்கள் பிரதிபலிக்கின்றன. பள்ளி கொண்ட பெருமாற் குடவரைக் கோவிலில் கோவில் எடுப்பித்த அதியநாத குணசீலனின் பெயரும் விருதுகளும் கல் வெட்டுக்களாக பொறிக்கப்பட்டுள்ளன. அரவணையில் அறிதுயில் கொள்ளும் அரங்களை சூழ்ந்திருக்கும் தேவர்களையும் முனிவர்களையும் பெயரிட்டு குறித்துள்ள கல் வெட்டுக்கள் அக்கால வைணவக்

கடவுள் தொகுதியை அறிவிக்கும் பெருஞ்சான்றுகளாகும். சிங்க பெருமாள் குடவரைக்கோவிலுக்குச் செல்வதற்கு விதியை ஒட்டி அமைந்திருக்கும் முதல் கோபுர நுழைவாயிலின் நிலைப்படியில் வைணவச் சின்னங்களான சங்கு சக்கரங்களுடன் குறுவாளையும் சேர்த்து புடைப்புச் சிற்பம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இது கி.பி. 16–17 நூற்றாண்டுகளில் இப்பகுதியில் ஆட்சி செய்த பாளையக்காரர்களின் அரச சின்னமாகத்தோன்றுகிறது. குடவரைக் கோவில்களைப் பற்றி விரிவாக அறிய கீழ்க்காணும் நூல்களை பார்க்கலாம்.

1. The Namakkal Caves, by Dr. Vidya Dehljia, Tamilnadu State Dept of Archaeology Publication. 2. Atiya Inscriptions from Namakkal by K. R. Srinivasan and P. R. Srinivasan in Epigraphica India. Vol. XXXVI. 3. Sculptures in the Two Rock cut Vaisnava Cave Temples of Nammakkal by P. R. Srinivasan in Artibus Asiae. XXIV. 1961.

4 Robert Sewell. List of the Antiquarian Remains in the Presidency of Madras, Vol. I, Madras. 1882. P-204.

5. Wilks Col. Mark. Historical Sketches of the South India in an attempt to trace the History of Mysore Vol. I. London. 1869. P-147 – 148.

6. Hayavardana Rao, History of Mysote. Vol. III. Bangalore. 1946 P.93.

7. Le Fanu, H,. A Manual of the Salem District in the Presidency of Madras Vol. II, Madras. 1883. P-115.

## 7. காலக்கடலில் கரைந்த கோட்டைகள்

1. Brain J. Murton, Towns and Markets in Salem in the Eighteenth Century, Srinidhih. Madras. 1983, P-400

2. La Fanu Vol. I. P-240.

3. திப்பு ஆங்கிலேயருடன் 1792-இல் செய்து கொண்ட உடன் படிக்கையில், தான் அவர்களிடம் ஒப்படைக்க இருக்கும் ஊர்களின் வருவாய் விவரங்களையும் தெரிவித்துள்ளான். அதன்படி அவனிடமிருந்து அந்த ஊர்களை ஆங்கிலேயர் பெற்றுக் கொண்ட 16–3–1792 இல் பின்வரும் ஊர்களின் வருவாய் வருமாறு (கண்டிராய பகோடாக்களில்) : சேலம் 24,000; நாமக்கல் 16,000; சங்ககிரி 40,000; ஆத்தூர் 18,000; பரமத்தி 14 000; சேந்தமங்கலம் 20,000 ஓமலூர் 16,000. மேல் விவரங்களுக்கு, A Collection of Treatias, Engagements and Sumuds relating to India and Neighbouring Countries, (Compiled by C. V. Aitcheson) Vol. V. Calcutta, 1864, என்ற நூல் தொகுப்பை பார்க்கலாம்.

4. Archaeological Survey Annual Report on Indian Epigraphy for 1968-69. No. 237, P-48

5. Le Fanu, vol. I. P. 48.

6. மணம் முடித்தமைக்கு, குடியிருப்பு அமைப்பதாககூறப்பட்டிருப்பினும் அரசியல் காரணங்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்க வேண்டுமென்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

7. Archaeological Survey Annual Report on Indian Epigraphy for 1968-69. No. 241. P-48 இலிங்க உருவை கணபதியாக குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கது.

8. மேலது. எண். 245. பக்.48. இவ்வறிக்கையில் இராமப்பநாயக்கர் அய்யனைப் பற்றி மட்டும்கூறப்பட்டுள்ளது. சமீபத்தில் நண்பர்கள் தமிழ்நாடன், பேராசிரியர்மணி கொடுமுடி. சண்முகம், துரைசாமி, தினமலர் வசந்தா ஆகியோருடன் பேளூர் தான்தோன்றீசுவரர் கோவிலுக்குச் சென்றிருந்தபோது இந்தபடிமத்தைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. படிமத்தில் இராமப்பநாயக்கர் அய்யன் என்ற பெயரோடு திம்பப்ப நாயக்கரய்யன் என்ற பெயரும் பொறித்துள்ளது. தெரியவந்தது இந்த

திம்மப்ப நாயக்கரய்யனும் ஆத்தூர் காயநிர்மலே சுவார் கோவில் கல் வெட்டில் கூறப்படும் அக்கி திம் மப்ப நாயக்கரும் ஒருவரே எனக் கொள்ளலாம்.

9. துரைசாமி, வெ. இரா. சேலம் மாவட்ட வரலாற்று ஆவண ஆய்வுக்குழு செய்திமடல், சூலை 1985, பக்.3.

10. Le Fanu, vol, I, P. 53.

11. Riehard F. J. Madras District Gazetteers Salem Madras. 1918. Vol. I Part II P. 303.

12. Le Fanu, Val. I. P. 87. ஆத்தூர் காய நிர்மலே சுவரர் கோவில் கல் வெட்டில் குறிக்கப்படும் வில்லவராய நத்தத்திற்கும், வேணுவராயன் என்ற பெயருக்கும் இடையே காணப்படும் பெயரமைப்பு ஒற்றுமை கவனத் திற்குரியது.

13. மதுரை நாயக்கர் முதலாம் கிருஷ்ணப்பருக்குப் பிரதி நிதியாய் இருந்த ஒரு ஏகாம்பர முதலியாரை, சத்திய நாதைய்யர் தமது History of the Nayaks of Madura என்றும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அந்த ஏகம்பர முதலியும், சேலம் புராணத்தில் குறிக்கப்படும் ஆறக லூர் ஏகம்பர முதலியும் ஒருவரா என்பது ஆய்விற் குரியதாகும்.

14. பிளரன் ஜே. மர்டன் அமரகுந்தி கோட்டை நகராக விளங்கியது என்பார்.

15. Riehard, F.J. Vol, I Part II P. 304

16. மேலதுவே.

# கோட்டை குறித்த பழந்தமிழ்ச் சொற்கள்

| | | |
|---|---|---|
| அகப்பா | — | உள் கோட்டை |
| அரண் | — | கோட்டை |
| அரும்பம் | — | மலைமீதுள்ளகோட்டை, கிரிதுர்க்கம், |
| அலங்கம் | — | கொத்தளம் |
| ஆரை | — | கோட்டைமதில் |
| இஞ்சி | — | கோட்டைமதில் |
| இட்டிகை | — | செங்கல் |
| இளை | — | மதிலை ஒட்டி அமைந்த காவற்காடு |
| எயில் | — | கோட்டையாக அமைந்த ஊர் |
| ஏப்புழை | — | குறிபார்க்க கோட்டை மதிலில் அமைக்கப்பட்டதுளை |
| ஏவறை | — | எதிரிகள்மீது ஆயுதங்களை வீரர் இருந்து வீச கோட்டை மதிலில் அமைக்கப்பட்ட அறை. |
| கிடங்கு | — | அகழி |
| குண்டுநீர் | — | நீர் நிறைந்த அகழி |
| குறும்பு | — | சிறு கோட்டை |
| ஞாயில் | — | குருவித் தலைபோல் மதில் மீது அமைந்த ஏவறை |
| தண்டயம் | — | வாசல் படியின் மேல் கட்டை |
| தாடிப்படை | — | மதிலின் மேல் பகுதி |
| திட்டிவாசல் | — | இரகசிய வாசல், நுழைவாயிலுக்கு அடுத்த சிறுவாயில் |

| | | |
|---|---|---|
| நிலைவாயில் | — | கோட்டை வாசல் |
| பசுமிளை | — | பசுமையான காவற் காடு |
| பதணம் | — | மதிலின் உட்பக்கம் அமைந்த மேடை |
| பதப்பர் | — | வெள்ளத்தை தடுக்க இடும் மணற் கோட்டை |
| பரிகம் | — | கோட்டை சுவரில் முனைப்பான பகுதி |
| புதலம் | — | கோட்டை வாயில் |
| புதவு | — | கோட்டைக் கதவு |
| புரிசை | — | வீரர் தங்கி காவல் புரிய மதில்மீது அமைந்த மாடம் |
| மிறை | — | வளைவு |
| மிளை | — | அகழிக்கு முன் அமைந்த காவற்காடு |
| வரைப்பு | — | கோட்டை வாகை மதில் |

—□—

உயர்வு அகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுஉரைக்கும் நூல். — குறள்

# சொல்விளக்கம் - GLOSSARY

| | | |
|---|---|---|
| அகமதி | — | திப்பு சுல்தான் வெளியிட்ட நான்கு பகோடா தங்க நாணயம் |
| அஞ்சகார | — | காடியின் அஞ்சல் அலுவலர் |
| அட்டவனே | — | காடியின் வருவாய்க் கணக்கர் |
| அமில்தார் | — | தற்போதைய வட்டாட்சியருக்கு இணையான பதவியை வகித்தவர் |
| அம்மன் காசு | — | புதுக்கோட்டை சமஸ்தானத்தில் வெளியிட்ட செப்புக் காசு |
| அணா | — | உருபாயில் பதினாறில் ஒரு பங்கு மதிப்புள்ள நாணயம் |
| அரிகார் | — | கி.பி. 17.18 நூற்றாண்டுகளில் குறுநில மன்னர்களுக்கும், பாளையக்காரர்களுக்கும் செய்தி கொண்டு சென்றவர்கள். பிராமண வகுப்பினரையே இந்த பணிக்கு நியமிப்பது வழக்காய் இருந்தது. |
| அவிக்கிணறு | — | கோவில் சுவரில் காற்றோட்டத்திற்காக அமைக்கும் துவாரம் |
| அயன் நிலம் | — | அரசு பட்டா பெற்ற நிலம் |
| அஷ்டபோகம் | — | பெண். ஆடை, அணிகலன், உணவு, தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூஅமளி ஆகிய எட்டு அநுபவிப்புகள் |
| ஆமீதி | — | திப்பு வெளியிட்ட வெள்ளி அரை உருபாய் நாணயம் |
| ஆனந்தராமன் பணம் | — | திருவாங்கூர் இராமராசர் வெளியிட்ட தங்கநாணயம் 5.7 கிரய்ன் எடை உள்ளது. |

| | | |
|---|---|---|
| இராகுத்தராயன் | — | குதிரை வீரர்கள் தலைவன் |
| இட்கா | — | இருமுக்கிய பண்டிகைகளில் முகமதியர்கள் வழிபட பயன்படுத்தும் இடம் |
| இமாமி | — | திப்பு வெளியிட்ட வெள்ளி ஒரு உருபாய் நாணயம் |
| இனாம் மான்யம் | — | கோவில் பூசை, சத்திரம் பராமரிப்பு வேதபாராயணம் செய்தல் போன்ற காரியங்களுக்கு வரி விலக்கு செய்து மன்னர்கள் தந்த நிலதானம் |
| எக்கொட | — | தலைவன், கிராம தலைவன் |
| ஐதரி | — | திப்பு வெளியிட்ட இரண்டு உருபாய் நாணயம் |
| ஓபாலி | — | இன்றைய ஒன்றியத்திற்கு இணையான,சில கிராமங்கள் சேர்ந்தபகுதி |
| ஓபாலிதார் | — | ஓபாலியின் ஆட்சித்தலைவர் |
| கச்சேரி | — | ஆட்சி அலுவலகம் |
| கந்தாயம் | — | வரி |
| கண்டசார் | — | சுதேசி |
| கண்டிராய்சக்கரம் | — | கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், மைசூர், சேலம் பகுதிகளில் வழங்கியிருந்த பணம், பத்து கண்டிராய் பணத்துக்குச்சமமான மதிப்புடையது |
| கண்டிராய் பணம் | — | இரண்டு கோபாலி பணமும், இரண்டு கோபாலி அணாவும், ஒருகண்டிராய் பணத்துக்கு ஈடாக இருந்தன. |
| கண்டிராய் பகோடா | — | 18-ஆம் நூற்றாண்டில் சேலம் மைசூர் பகுதிகளில் வழங்கிய நாணயம். 1792-இல் ஆங்கில கும்பனி உருபாய் மூன்றிற்கு ஈடான மதிப்பு இதற்கு இருந்தது |

கருஞ்சை — கழனி புஞ்சைக்கு வேறுபட்ட காட்டுப் புஞ்சை

கரைநிலம் — அப்போதைக்கப்போது ஊராரிடம் மாற்றி மாற்றி அநுபவத்திற்கு, கூறு போட்டு ஒப்படைக்கப்படும் நிலம்

கர்த்தாக்கள் — மதுரை நாயக்க மன்னர்களைக் குறித்த பட்டப் பெயர்

கம்பனி — சுமார் நூறுபேர் கொண்ட படைப் பிரிவு

கஸ்பா — தலைமை மையம்

காசிமி — திப்புசுல்தான் வெளியிட்ட 1/16 உருபாய் நாணயம்

காடி — அரியணை, சிம்மாசனம்

காபுலியாத் — ஆங்கில கிழக்கிந்திய கும்பனி அரசு ஜமீன்தார்களிக்கு வழங்கிய ஜமீன் உரிமைப் பத்திரம்

கிலாதார் — கோட்டை அதிகாரி

கிலாத் — மரியாதைக் குரிய குடிமக்களை கௌரவிக்கும் வகையில் மன்னர் வழங்கும் சிறப்பு ஆடை - தலைப் பாகை, அங்கி, இடைப்பட்டை ஆகியவை கொண்ட உடை

கிஜ்ரி — திப்புசுல்தான் வெளியிட்ட 1/32 உருபாய் நாணயம்

குண்டா — 141 சதுர கஜம் கொண்ட ஒருநில அளவு ஏக்கரில் 1/4 பகுதி

கோபாலி சக்கரம் — பத்து கோபாலி பணம் மதிப்பு உடைய நாணயம்

கோபாலி பணம் — 18-ஆம் நூற்றாண்டில் சேலம் பகுதியில் வழங்கிவந்த நாணயம்

சர்க்கார் — முகலாய ஆட்சியமைப்பில் தற்போதைய மாவட்டத்திற்குச் சமமாக இருந்த வருவாய் அமைப்பு

சலாமாபாத் — சத்தியமங்கலத்திற்குத் திப்புவைத்த பெயர்

சன்னத் — பதவி நியமனங்களுக்கு உரியஎழுத்து வடிவான அரசாணை

சாதிக் — திப்புசுல்தான் வெளியிட்ட இரண்டு பகோடா தங்க நாணயம்

சில்லாதார் — சொந்தமாக போர்க் குதிரையும் ஆயுதமும் வைத்திருக்கும் வீரன்

சுரோத்திரியம் — சுருதி, ஸ்மிருதிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம்

சுபேதார் — மைசூர் ஆட்சியமைப்பில் காடியின் ஆட்சித் தலைவர்; முகலாய ஆட்சியமைப்பில் மாநிலத்தின் ஆட்சித் தலைவர்

சுவர்ணதாயம் — பணமாக பெறும் வரி

செவிடு — ஆழக்கில் ஐந்தில் ஒருபகுதி முகத்தல் அளவு

சௌகி — புறநகர் காவல் நிலையம்

சௌத் — மராத்தியர் வசூலித்த நிலவரி; விளைவில் நான்கில் ஒரு பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது

டோபாசி — கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இந்திய போர்த்துகீசிய கலப்பின போர் வீரர்களைக் குறித்து எழுந்த இச்சொல் பிற்காலத்தில் ஆங்கிலோ-இந்திய போர் வீரர்களையும் குறித்தது

| | | |
|---|---|---|
| தக்காவி | — | விதை நெல் வாங்க, கிணறு கட்ட விவசாயிகளுக்கு அரசு தரும் முன் பணம் |
| தரா | — | எட்டுபாகம் செம்பும் ஐந்து பாகம் காரீயமும் கலந்துசெய்யும்உலோகம் பித்தளை |
| தரிசாபள்ளி | — | கிருத்துவ மாதாக் கோவில் |
| தர்கா | — | முகமதிய சான்றோர்களை நல்லடக்கம் செய்திருக்கும் இடம் |
| தம்பிடி | — | ஒரு அணாவில் 12-இல் ஒரு பங்கு மதிப்புள்ள சிறிய செப்பு நாணயம் |
| தஸ்தக் | — | அநுமதி |
| தால்காட் | — | சேலம், ஆத்தூர், நாமக்கல் திருச்செங்கோடு வட்டங்கள் அடங்கிய பகுதி 18-ஆம் நூற்றாண்டில் இவ்வாறு குறிக்கப்பட்டது |
| திருமேற் கோவில் | — | ஊருக்கு மேற்கே அமைந்திருக்கும் பெருமாள் கோவில் |
| திருவடி தேசம் | — | திருவனந்தபுரம் |
| திருவாழிக்கல் | — | பெருமாள் கோவில் நிலங்களின் எல்லையைக் குறிக்க நடும் சக்கர முத்திரை கொண்டகல் |
| துட்டு | — | நான்கு தம்பிடிகளுக்குச் சமமான நாணயம் |
| துர்ரா | — | தலைப்பாகையில் சொருகிவைக்கும் இறகு கொத்து |
| தேவதாயம் | — | கோவில் பராமரிப்பிற்கு என விடப்பட்ட நிலம் அல்லது சொத்து |

| | | |
|---|---|---|
| தேஸ்குல்கர்னி | — | மாவட்டக் கணக்கர் |
| தேஸ்முக் | — | தேசத் தலைவர் |
| நத்தம் | — | கிராம மக்கள் குடியிருப்புக்கான இடம் |
| நத்தம் பாழ் | — | மக்கள் குடியிருப்பு இல்லாத பாழடைந்த கிராமம் |
| நரவாகன சக்ரவர்த்தி | — | விசய நயர மன்னர்களின் விருது பெயர்களில் ஒன்று |
| நவபத் | — | அரண்மனை வாசலுக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் பெரியமுரசு; குறிப்பிட்ட நேரங்களில் இதை ஒலிப்பார்கள். |
| நீர்க்கண்டி | — | கிராமத்தில் விவசாயத்திற்கு விடப்படும் பாசனநீர் வீணாக்கப்படாமல் பார்த்துக் கொள்ள நியமிக்கப்பட்ட அலுவலர் |
| நீர்முருக்கி | — | ஏரிகுளங்களில் நீர் நிரம்பி இருக்கையில், மதகுகளில் ஏற்படும், அடைப்புகளை, நீரில் மூழ்கிச் சென்று அகற்றும் பணியாள் |
| பகதூரி பகோடா | — | ஐதர் அலி வெளியிட்ட முதல் நாணயம் |
| பகோடா | — | 16.17-ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் வழங்கி வந்த தங்க நாணயம், இவற்றில் பொறித்திருந்த தெய்வ உருவங்களைக்கண்டு கோவில் நாணயம் 'என்ற பொருளில் போர்த்துகீசியர்கள் இவற்றைப் பகோடா என அழைத்தனர். பல விதங்களில் பலரால் வெளியிடப்பட்ட இந்த நாணயங்கள் 19—ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை புழக்கத்தில் இருந்தன |

பசலி — அறுவடைகாலத்தைத் துவக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஆண்டு முறை, சேலம் பகுதியில் இவ்வகையான ஆண்டு சூலை முதல் தேதியில் துவங்கும் வழக்கு நிலவியது

பஞ்சமா சத்தம் — சிற்றரசர்களுக்கு உரிய ஐவகைப் பறை செண்டை, திமிளை, தத்தளி, கைத்தாளம் என்பது ஒருவகை; தத்தளி, மத்தளி, காடிகை, தாளம், காகாளம் என்பது மறுவகை

பண்டாரம், பண்டாரி — கருவூல அலுவலர்

படேல் — தலைவன்

பட்டண செட்டி — நகரவணிகக் குழுவின் தலைவன்

பட்டிண சுவாமி — நகரத்தந்தை. மேயர்

பவுஸ்தார் — கி.பி. 14–ஆம் நூற்றாண்டில், இது சேனாதிபதிக்கு அடுத்த அதிகாரியைக் குறித்தது. 16-18 நூற்றாண்டுகளில் மாநிலத்தின் ஒரு பகுதியினை தற்கால மாவட்டங்களை ஒத்த பகுதியை–நிர்வாகித்த ஆட்சித் தலைவரைக் குறித்தது

பருகி — திப்பு வெளியிட்ட ஒரு பகோடா தங்க நாணயம்

பர்கானா — முகலாய அட்சியமைப்பில் தற்கால வட்டத்திற்குச்சமமாய் இருந்த வருவாய்த்துறை பிரிவு

பாகிரி — திப்பு வெளியிட்ட வெள்ளி கால் உருபாய் நாணயம்

பாக் பாட் — தோட்ட நிலம்

பாரா பலூடி — பன்னிரு கிராம தொழில்கள் கிராமத் தலைவன், கணக்கன், சோதிடன், கண்காணி, காவலன், நீர்க்கண்டி, வண்ணான். நாவிதன், குயவன், கொல்லன், தச்சன், தட்டான் ஆகியோர் செய்யும் தொழில்களைக் குறித்தது. இவர்கள் அறுவடைக் காலங்களில் கிராம மக்களிடமிருந்து ஒருபகுதி தானியங்களைப் பெறுவர்

பாராமகால் — 12 வட்டங்கள் அடங்கிய பகுதி 18 - ஆம் நூற்றாண்டில் திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஊத்தங்கரை வட்டங்களை உள்ளடக்கிய பகுதி, இப்பெயரால் அழைக்கப் பட்டது

பாலகாட் — தற்கால ஒசூர் வட்டப்பகுதி 18-ஆம் நூற்றாண்டு வாக்கில் இப் பெயரால் குறிக்கப்பட்டது

பாஜிபந்து — முழங்கைக்கு மேல் அணியும் வங்கியைப் போன்ற ஒரு அணிகலன்

புத்தன் — புதுக்காசு. கொச்சி சமஸ்தானம் வெளியிட்ட வெள்ளி நாணயம் 5-8 கிரெய்ன் எடைக் கொண்டது

பெட்டாலியன் — பத்து கம்பனிகள் கொண்ட படை அமைப்பு சுமார் 1000 போர் வீரர்கள் இதில் இருப்பார்கள்

பெயிஸ் கேஸ் — ஜமிந்தார்கள், மிட்டாதார்கள் அரசிற்குச் செலுத்திய வரிப்பணம்

போயி, போவா — பல்லக்கு தூக்கி

| | | |
|---|---|---|
| மகால் | — | அலுவலகம் ஆட்சி அலுவலகம் மூகலாய ஆட்சி அமைப்பில் பர்கானாவிற்கு மறு பெயராகவும் இதுவழங்கியது |
| மஞ்சநீர் பிள்ளை | — | தத்துப்பிள்ளை |
| முக்கால் துட்டு | — | காலணா, மூன்று தம்பிடிகள் ஒரு உருபாயின் 1/192 பகுதி |
| முட்டாதர் | — | மிட்டாதார், பலகிராமங்களுக்கு உரிமையாளரான நிலக்கிழார் |
| ரிசால்தார் | — | குதிரைப்படையில் நியமிக்கப்பட்ட சுதேசி அதிகாரி |
| லஸ்கர் | — | காலாட் படையின் கடைநிலைப் பணியாள், துப்பாக்கிச் சுமந்துவருதல் கூடாரம்அடித்தல் போன்றபணிகள் செய்வதற்கு நியமிக்கப்பட்டவர் |
| வடக்கு வாசல் செல்வி | — | ஊரின் வடக்கெல்லை தெய்வமாகிய காளி |
| வரகிராமம் | — | கோவில்,மடம், பிராமணர் ஆகியோருக்குத் தானமளித்த கிராமம் |
| வாளால் வழி திறந்தான் குளிகை | — | வாளால் வழி திறந்தான் என்ற சிறப்புப் பெயர் கொண்டிருந்த முதலாம் ஜடாவர்ம சுந்தரபாண்டியன் வழங்கிய நாணயம் |
| ஜபாரி | — | திப்பு வெளியிட்ட வெள்ளி 1/8 உருபாய் நாணயம் |
| ஜிகா | — | தலைப்பாகையில் பொருத்திக் கொள்ளும் பதக்கம் போன்ற அணி 6'' × 2'' அளவுள்ள எம்ராய்டரி செய்த வெல் வெட் துணியில், கற்கள் பதித்த தங்கத் தகட்டை பொருத்தி செய்யப்படுவது, 17-ஆம் நூற்றாண்டு சுதேசி மன்னர்களிடையே பிரசித்தமாய் இருந்தது |




**சேலம் மாவட்டம்**

# ஆத்தூர் கோட்டை வரைபடம்




1. கச்சேரி மண்டபம் 2. கெட்டி முதலி வசித்த மாளிகை ( கல்யாண மகால் ) 3, 4, 5 களஞ்சியக் கொட்டாரம் 6. வெடிமருந்துக் கிடங்கு 7. வசந்த மண்டபம்.



கோட்டைத் தலைவர் வசித்திருந்த மாளிகை ஆத்தூர் கோட்டை



கெட்டி முதலிகள் வசித்திருந்த மாளிகையின் பின்பகுதி
ஆத்தூர் கோட்டை



உலகளந்த பெருமாள், நாமக்கல் பள்ளிகொண்ட பெருமாள்
குடவரைக் கோயில் கி. பி. 8–ஆம் நூற்றாண்டு.



பள்ளிகொண்ட பெருமாள், நாமக்கல் பள்ளிகொண்ட பெருமாள்
குடவரைக் கோயில் கி. பி. 8–ஆம் நூற்றாண்டு



நாமக்கல் சிங்கபெருமாள் கோயில் முன் கோபுர வாசலில் சித்தரிக்கப்பட்டிருக்கும் வைணவச் சின்னங்களுடன் கூடிய குறுவாள் மற்றும் வளைய சின்னங்கள்.



சேலம் வட்டம் பேளூர் தான்தோன்றீசுவரர் கோயிலில் காணப்படும் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு சிற்பக் கல்வெட்டு



கோட்டைப் படிகள், சங்ககிரிக் கோட்டை



ஆங்கிலேயர் கட்டிய ஒன்பதாவது வாயில், சங்ககிரிக் கோட்டை

# இணைப்பு-1.

## சேலம் பகுதி பாளையக்காரர்கள்

பழைய வரலாற்று நூல்களில் காணவரும் சேலம் பகுதி பாளையக்காரர்களின் பெயர்கள் இங்கே தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. இவையும் அடுத்துவரும் கெட்டிமுதலிகள் பெயர்ப் பட்டியலும் ஆய்வு வளர்ச்சியில் மேலும் செப்பம் பெற வேண்டி யவை ஆகும்.

1) உத்தண்டப்ப நாயக்கர் (கி. பி. 1563)
2) சலபதி நாயக்கர் (கி. பி. 1624)
3) திருமங்கல நாயக்கர் (கி. பி. 1624)
4) இராமச்சந்திர நாயக்கர் (கி. பி. 1624)
5) சென்னம நாயக்கர் (கி பி. 1663)
6) இலட்சுமண நாயக்கர்
7) பெத்த நாயக்கர்
8) திருமலை நாயக்கர்
9) இராம நாயக்கர்
10) வெங்கடப்ப நாயக்கர்
11) சின்னப்ப நாயக்கர்
12) சீலி நாயக்கர்
13) கிருஷ்ண இராசா (கி. பி. 1774)
14) இசுமாயில்கான்

மூன்றாதாகவும், நான்காவதாகவும் குறித்துள்ள திருமங் கல நாயக்கரும், இராமச்சந்திர நாயக்கரும் சேந்தமங்கலத்து பாளையக்காரர்கள். இறுதியில் குறிப்பிட்டுள்ள கிருஷ்ணராசா வும், இஸ்மாயில்கானும் சமகாலத்தில் சேலத்தின் இருவேறு பகுதிகளை மைசூர் அரசிற்கு உட்பட்டு ஆண்டு வந்திருக்கின்ற னர். லெபான் இசுமாயில் கான் சேலம் கோட்டையின் கில்லா தாராக இருந்ததைக் குறிப்பிடுகிறார். அயவதனராவ் கிருஷ்ண ராசா சேலம் பாளையக்காரராய் இருந்ததைத் தெரிவிக்கிறார்.

## கெட்டி முதலிகள்

1) இளையான் நல்ல உடையப்ப முதலி

2) ஏகாம்பர முதலி

3) வணங்காமுடி கெட்டி முதலி

4) எருமை கட்டி

5) மங்கை வரோதையன்

6) இம்மடி கெட்டி முதலி

## மதுரை நாயக்கர்கள்

| | | |
|---|---|---|
| 1) | விசுவநாத நாய்க்கர் | கி.பி.சு. 1529–1564 |
| 2) | முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் | 1564–1572 |
| 3) | வீரப்ப நாயக்கர் | 1572–1595 |
| 4) | இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் | 1595–1601 |
| 5) | முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் | 1601–1609 |
| 6) | முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் | 1609–சு.1626 |
| 7) | திருமலை நாயக்கர் | சு,1626–1659 |
| 8) | இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் | 1659 |
| 9) | சொக்க நாத நாயக்கர் | 1659–1682 |
| 10) | மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர் | 1682–1689 |
| 11) | இராணிமங்கம்மாள் | 1689–1706 |
| 12) | விஜய ரங்க சொக்கநாத நாயக்கர் | 1706–1732 |
| 13) | இராணி மீனாட்சி | 1732–1736 |

• திரு. ஆர். சத்திய நாதய்யரின் காலவரையை பின் பற்றியது.

# மைசூர் உடையார்கள்

(கி. பி. 1796 வரை)

| | | |
|---|---|---|
| 1) | யதுராய (விஜயா) | கி.பி. 1399–1423 |
| 2) | முதலாம் இரிய பெட்டட சாமராச உடையார் | 1423–1459 |
| 3) | முதலாம் திம்மாராச உடையார் | 1459–1478 |
| 4) | இரண்டாம் இரிய சாமராச உடையார் | 1478–1513 |
| 5) | மூன்றாம் இரிய பெட்டட சாமராச உடையார் | 1513–1553 |
| 6) | இரண்டாம் திம்மராச உடையார் | 1553–1572 |
| 7) | நான்காம் போல சாமராச உடையார் | 1572–1576 |
| 8) | பெட்டட தேவராச உடையார் | 1576–1578 |
| 9) | முதலாம் ராச உடையார் | 1578–1617 |
| 10) | ஐந்தாம் சாமராச உடையார் | 1617–1637 |
| 11) | இம்மடி இரண்டாம் ராச உடையார் | 1637–1638 |
| 12) | முதலாம் கண்டிரவ நாசராச உடையார் | 1638–1659 |
| 13) | தேவராச உடையார் | 1659–1673 |
| 14) | சிக்கதேவராச உடையார் | 1673–1704 |
| 15) | இரண்டாம் கண்டிரவ நரசராச உடையார் | 1704–1714 |
| 16) | முதலாம் கிருஷ்ணராச உடையார் | 1714–1732 |
| 17) | ஆறாம் சாமராச உடையார் | 1732–1734 |
| 18) | இராண்டாம் கிருஷ்ணராச உடையார் | 1734–1766 |
| 19) | நஞ்சராச உடையார் | 1766–1770 |
| 20) | ஏழாம் பெட்டட சாமராச உடையார் | 1770–1776 |
| 21) | எட்டாம் சாமராச உடையார் | 1776–1796 |

திரு. சி. அயவதன ராவின் காலவரையைப் பின்பற்றியது

# இணைப்பு-2:

## இராபர்ட்சீவல் குறிப்பிலிருந்து...

1882-இல் இந்தியத் தொல்லியல் கழகம் பரந்துபட்ட சென்னை மாநிலத்தில் உள்ள வரலாற்றுச்சின்னங்களின் பட்டியலைத் தொகுத்து வெளியிட்டது. List of the Antiquarian Remains in the Presidency of Madras. என்ற தலைப்பில் இத் தொகுப்பினை இராபர்ட்சீவல் தொகுத்தார். அதில் அவர் சேலம் மாவட்டத்தில் இருந்த கோட்டைகள் பற்றி குறித்துள்ளவை இங்கே தரப்பட்டுள்ளன.

Ātur ( Ā ttūr, written Āṛṛūr ) : The taluk

Head-quarters (Ahtoor) In the taluk kacheri are three large stones bearing inscriptions. brought about ten years ago from Sokkanur and Aningapathi Villages. One mile south of the village there is a cairn, partly opened. The town was formerly called Anantagiri. North of the river is a large fort, the builder of which is said to have found an immense treasure of gold buried in seven iron pots. One of the pots is still preserved in the vishnu temple in the fort. The fort walls are well built of stone. The fort dates from, about the middle of the fifteenth century It contains a palace building and two temples. (J. A. S. B., XIV. 764) (Vol. I. Page-201)

OMALUR ; 10 miles north-west of Salem (Womaloor) A very old Siva temple with many inscriptions, There is a fort here, said to date from a time anterior to the establishment of the Mysore dynasty about A. D. 1399. Some old silver coins are found here. (colonel congreve, in the Madras Journal for 1878) (Vol. I P-156)

NAMAKAL (Namakkal) : The taluk head - quarters ( Nameul Droog ). There are two old vishnu temples in Namakkal with inscriptions. One of the two temples - that

dedicated to Narasimhaswami-has a copper plate grant. The fort is built on the sumuit of a dazzling mass of gneiss about 300 feet high. There are a number of temples and sacred buildings and bathing-pools on and about the hill. The fort is very difficult of access. Steps cut in the rock facilitating the ascent. The upper fort which contains several buildings is extremly constructed and very strong though its area in only about an acre and a half. Amongst these buildings is a temple of vishnu with an inscription round it. The fort is said to have been constructed by a polegar chief (District Manual). (Vol. I P-204)

SALEM (Selam). The head quarters of the district. A railway station. An old Siva temple. On one of the shrines of which are many inscriptions. In the portion of the town knpwn as "gugai", is a cave by tradition, the residence of a hermit (Manual, 30) There is a fort here and an old Mahal. In the collector office lies an old volume compiled by the first collector of the district containing copies of a number of Sanads and translations of copper plates. There is another by Mr H. J. Stokes ( C. S ) containing copies of several inscriptions. There is a Jain image lying close to the river bank in the town; and another between the church and the collector's house. (See J. A. S, R. XIV, 766). (Vol I. P-200)

SANKAGIRIDURGAM: 8 miles north by west of Tiruchengod Railway Station. (Sankagherry Droog). There is a fine hill-fort here of no great antiguity but strongly built, with long lines of fortification. Also an ancient Siva temple on the hill, well sculptured and containing many inscriptions. An inscription in Telugu behind the kesavaswami temple is said to be "illegible" and so is another, in canarese on the Mandapam of Isvara temple. Two inscriptions on stones planted in the fields of the town are similarly said to be illegible. colonel congreve's paper in the Madras Journal for 1878 (P-155) contains a notice of this place. He mentions

a mesjid. half way down the steps leading to the temple on the hill, standing at the entrance of a cavern. He is inclined to think that certain sculptured foot prints to be seen there are of Budhist origin. He states that "Many ancient coins and arms have been dug at different periods" ( Sea also J. A. S, B , XIV, 768-9) Vol. I. P-203)

SOLAPADI : 28 miles west of Salem, An old vishnu temple and a fort. A mile and a half north of the village is a stone bearing an inscription in Telugu Characters.
(Vol. I. P-200)

# இணைப்பு-3.

## புதுக் கல் வெட்டுகள்

நாமகிரிப்பேட்டை அரசினர் மேல் நிலைப்பள்ளி தமிழா சிரியர் திரு. துரைசாமி சேலம் மாவட்டத்தில் உள்ள சிறந்த கல் வெட்டாய் வளர்களில் ஒருவர். காடு மேடு திரிந்து பழைய கல் வெட்டுகளைக் கண்டுபடியெடுத்து வரும்பணியை இவர் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இடைவிடாது செய்து வருகி றார். இந்த இனிய நண்பர் அண்மையில் கண்டுபடியெடுத்த கல் வெட்டுகளில் மூன்றின் படிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

### கல்வெட்டு - 1.

இடம் : சேலம் வட்டம் பேளூர் தான் தோன்றீசுவரர் கோயிலுக்கு முன்னே உள்ள ஒரு கல் தூண்

அரசன் : ஆதித்த காரி காலன்

காலம் : 3-ஆம் ஆட்சியாண்டு

ஸ்வஸ்த ஸ்ரீ
வீரபாண்டிய
ன் றலை கொண்
டகோப் பர கேசரி
பன்மற்கு யாண்டு 3
ஆவது பாற்க வ கோ

த்திரத்து மிலாடுடை யா
ன் அகலங்கன் ம
லையநாதித்தனான செ
ம்பியன் மிலாடுடை
யானேன் துறவி நா
ட்டுராளிகளை ஊராளித்திறை
நாற் கழஞ்சே காலே கொ
ள்வதாக பூவிலை செய்
து குடுத்தேன் செம்பி
யன் மிலாருடைய
னேன்.
இதுமா
ற்றுவான்
ஏழா நரக
ம் புகுவான்,''

## கல்வெட்டு - 2.

இடம் : திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு மலை மேல் நாகர் குன்றுக்கும் அருகில் முதலியார் மண்டபத்தின் மேற்கில் உள்ளபாறை

அரசன் : கோ இராச கேசரி வர்மர்

காலம் : 5-ஆம் ஆட்சியாண்டு

'' ஸ்வஸ்த ஸ்ரீ கோவிராஜ கேஸரிவர்மற்குயாண்டு
5 அஞ்சாவது திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு
நா
ட்டுப் பெருமக்கள் கையில் சனிதோறு நாழி யெள்
............
மலையிலே கரணத்தால் சனியெண்......அட்டு
வதாக வெங்கால நாட்டு வெள்ளூர்பு——யங்
கடமனான
பஞ்சவன் வெள்ளூர் கிழவன் வைத்த செம்
பொ
ன் காசெட்டாங் கல்லாற் பதினங் கழஞ்சு

இப் பொன்
னின் பலிசை கொண்டு சந்திராதித்த வல்
சனியெ.........
.........அட்டுவதாக என்றோம் பெருமக்க
ளோம்.''

## கல்வெட்டு - 3

இடம் : ஆத்தூர் வட்டம் பேளுரை அடுத்துள்ள செக்கடிப் பட்டி - பெருமாள் ரெட்டியார் தோட்டத்தில் உள்ள கல்

அரசன் : திருமலை நாயக்கர் 1623 - 1659

காலம் : பிரவபவ - பங்குனி 11

நரலோகர் கண்
டன் சேலம்
லக்ஷ்மனாயக்
கர் த
ந்ம
ம்
சொக்கர் மீனா
க் க்ஷியம் மை
திருத் தேர் வடம் பண்
ணி வித்த கெங்கை
கயாடி திருவநந்தல் ப்
பண்டாரத்துக்கு லக்ஷும
சமுத்திரத்தில் நஞ்செய்
இருபத்து னாலடிக் கோ
லால் குழி நூறும் சறுவம
ா நியமாகத் தாவித்தவர் நர
லோகர் கண்டன் வங்
கிணாறாயணன் சேர சோ
ல பாண்டிய வல்லாள
ராய மனோ பயங்கரன் ம
தவா——ராணயத் தாபனாசா
ரியன் கங்குவாடன் அ——

தென்———டினானர் கண்ட

டன் செவுடுத் தவம் மி

சாதே சந்திறோதயன் சே

லம் சின்ன பூபாலர் குமா

ர்கள் பெத்தணனாயக்கர்

திரு மலைனாயக்கர் ராமரு

ம் லக்ஷமணரும் இரட்

டைப் பிள்ளை வேங்

கடப்பனாயக்கர் சின்னப்ப

னாயக்கர் ஆக ஆறுபேர்

அதிலே லக்ஷமனாயக்க

ர் வேங்கடப்பனாயக்கர்

சின்னப்ப னாயக்கர் இவர்கள்

மூணு பேரும் ராச்சியம்

பாரம் பண்ணிகிற ராச்சி

யம் சேலம் திருமணி

முத்தாறு சேரு மாமலை

புதுக் கே

காட்டை

முகனாடு

வடகரை

மேற் சேரித

வள்ளான

தென் கரை

க் கோட்டை

வயிர நத்தம்

வெளியூர் க

———லைதகு———

ன——சேலம் கச்

—ப் பெருமாள்

பாளயம் உ

லகிய நல்லூ

ர் குகையூர் வெ

வண்பார் கை

வாவி கண்ட

புரம் பச்சை ம

லை ஆத்திநாடு
கொல்லி மலை
———பி குறும்பூர்
ஊந்தம் கி
——புரம் பாதுகா
வலும் உத்தம
சோழபுரம் மு
டுதுறை முதல
ான ராச்சியம் பார
ம் பண்ணுகிற
போது சங்கிற
ம பூதானமும்
அட்டமி அன்ன
தாநமும் நடந்து
வரும் அப்போது
அநந்தகிரி கல் கே
காட்டையும் இ
ட்டு தம்பி யாரான
வேங்கடப்ப ந
ாயக்கனார்க் கே
காட்டைக் கு

வைச்சு லக்ஷமனாய
க்கர் வெளியூரிலே
பண்ணி வேட்டை
யாடுகையில் ஆற்
றுக்கால் தண்ணீர்
வரவு கண்டு இந்தனா
டு சாமை வளை யிற
காடெல்லாம் சம்பா
விளைய வேணு மென்
று கட்டினது சின்ன
ப்ப சமுத்திரம் ராமசமுத்திரம்
லக்ஷ்மண சமுத்திரம் குறிச்
சிக்கு மேற்கே அணை
கட்டி பகல் யிருபதும் இர
வு பத்தும் ஆக முப்பது
னாழிகையிலே வெளி

யூர் அரமனை வாசலி
லே தண்ணி யழைப்
பித்தார் ராமசமுத்திர மெ
ன்று பேரிட்டு பின்னையி
ம் அனேக அணையு
ம் தடாக கூபங்களும் உ
ண்டு பண்ணி பிரபவ ஷு
பங்குனி மீ 11 திதிகை
யும் அசுபதியும்—யே
கதிரமும் கவல வாகா
ணமும் பெற்ற னாள்
சின்னப்ப சமுத்திரமா
ன வித்துவக்கிறாமமு
ம் வைச்சு வெளியூர்
நிலையிட்டு பெருமாள்
கோயிலுக்கு எதிராக
சின்னம னாயக்கர்
மடமும் உண்டு பண்
ணி பண்டாரத்து
க்கு புத்திர புத்திர பாரம்
பரியமாக நடக்கக்கட்ட
ளையிட்ட படிக்கு ளம்மு
டைய குமாரர் ராம
ர் மாதம் ஒரு முடா நெ
ல்லும் நம் முடை

யாதாம் அறை
முடா நெ
ல் லும்
கட்டளை
பண்ணிற
—க்கிறக
ணமத்து
க்கு யாதெ
ாருவன் இ
டை
—ய
——வன்பிறா
——தை காசிக்

கரையிலும்
பஞ்ச மகா
பாதமும்
பண்ணி த
ங்க மாதா
பிதாவை
வயும் கொ
ன்ன பாப
த்திலே போ
வான் உபக
ாரம் பண்ணி
ன பேர்
கெங்க கர''

# சொல்லடைவு

( எண்கள் பக்கங்ளைக் குறிப்பன )


அகப்பா — 1

அருவா — 28

அனந்த கிரி — 8

ஆனந்தக் கோன் — 17

இராமசந்திர நாயக்கர் — 59, 65

இராபர்ட்-டி-நெர்பிலி — 24, 51

இலட்சுமண நாயக்கர் — 53

இலட்சுமி காந்தராஜா — 36

இலட்சுமி நரசிம்மையர் — 59

இராமப்பய்ய நாயக்கர் — 68

இம்மடி கெட்டி முதலி — 25

இளமன் — 22

இளையான் நல்ல உடையப்ப முதலி — 22

இஸ்மாயில்கான், — 48

உத்தண்டப்ப நாயக்கர் — 51

எண்ணுடைய நாயனார் — 22,23

எருமை கட்டி — 23,24

ஏகாம்பர முதலியார் — 71

ஐதர் அலி — 17, 20, 38, 42, 50

கல்லகழி — 4

கர்னல் உட் — 16, 20, 50, 60

காளப்பா — 66

கிருஷ்ணராசா — 53

குணசீலன், அதியமன்னன் — 59

குமரமுத்து திருமலை நாயக்கர் — 25

குறும்பு — 6

குன்னத்தூர் துர்க்கம் — 29

குன்னிவேட்டுவராசன் — 31

கெட்டி முதலிகள் — 11, 17, 18, 20 - 22
26 - 28, 70

கேப்டன் எய்னி — 50

கேப்டன் ரீட் — 30, 64

கேப்டன் ஜேம்ஸ் ஆரம் — 38

சலபதி நாயக்கர் — 51, 65

சம்போஜி — 40, 77

சார் ஜென்ட் ஒரே — 20

சிக்க தேவராசன் — 14, 16, 27, 28, 52, 53, 66

சின்னப்ப நாயக்கர் — 52, 53

சின்னமலை — 43, 44

சுபேதார் வேலப்பன் — 44

சென்னம நாயக்கர் — 51, 52

தப்லே ஆலம் பாஷா — 35

திருமங்கல நாயக்கர் — 65

திருமலை நாயக்கர் — 46

திப்பு சுல்தான் — 6, 17, 42, 47, 50, 60, 61, 63, 70

திம்மப்ப நாயக்கர் — 68

தீர்த்தகிரி — 43, 44

தொட்ட கிருஷ்ண ராஜா — 16, 67, 68

நெடுநகர் வரைப்பு — 3

பெத்த நாயக்கன் — 69

மகதை மண்டலம் — 68

மதுர நாயக்கர் — 73

முகமது அலி, ஆற்காடு நவாப் — 50

முதலாம் கண்டீரவ நரசராசன் — 27

முதலாம் பராந்தகன் — 15

முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் — 65

வணங்கா முடி கெட்டி முதலி — 25

வெங்கடப்ப நாயக்கர் — 53

வெளியூர் — 68, 69

வேணுவராயன் — 70

ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் — 58

# சேலம் மாவட்டம்

( பரப்பு : 8,634 ச. கி. மீ. )

தற்போதைய சேலம் மாவட்டம், முன்பு, இதே பெயரில் இருந்த மாவட்டத்தின் ஒரு பகுதியாகும். நிர்வாகத் திறனை வளர்க்கும் வழிவகைகளைக் கண்டறிய 1961-இல் அரசு அமைத்த நிர்வாக மேம்பாட்டுக்குழு பரப்பில் மிகுந்திருந்த சேலம் மாவட்டத்தை இரு மாவட்டங்களாக பிரித்தால், நிர்வாகத் திறன் மேலும் சிறப்புறும் என பரிந்துரைத்தது. இந்த பரித்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, ஒரு அரசாணை (எம். எஸ். எண். 1611, வருவாய்த்துறை, நாள் : 24–5–1965) மூலம் அப்போது இருந்த சேலம் மாவட்டத்தை, சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் என இரு மாவட்டங்களாக பிரித்தது. இந்த புதிய மாவட்டங்கள் 1965, அக்டோபர், இரண்டாம் நாள் முதல் செயல்படத் துவங்கின.

சேலம்; இரண்டு வளர்ச்சி மாவட்டங்களையும், நான்கு வருவாய்க் கோட்டங்களையும், ஒன்பது கோட்டங்களையும் கொண்டுள்ளது. இதில் 762 கிராம பஞ்சாயத்துகளும் 35 பஞ்சாயத்து ஒன்றியங்களும் உள்ளன.

| வளர்ச்சி மாவட்டம் | அவற்றின் கோட்டம் |
|---|---|
| 1. சேலம் வடக்கு | 1. சேலம் |
| | 2. மேட்டூர் |
| 2. சேலம் தெற்கு | 1. சங்ககிரி |
| | 2. நாமக்கல் |

| வருவாய்க் கோட்டம் | அவற்றின் வட்டம் |
|---|---|
| 1. சேலம் | 1. சேலம் |
| | 3. ஏற்காடு |
| | 3. ஆத்தூர் |

| | |
|---|---|
| 2, மேட்டூர் | 1. ஓமலூர்<br>2. மேட்டூர் |
| 3. சங்ககிரி | 1, திருச்செங்கோடு<br>2. சங்ககிரி |
| 4. நாமக்கல் | 1. இராசிபுரம்<br>2 நாமக்கல் |

பஞ்சாயத்து ஒன்றியங்கள் :

1. குளத்தூர்
2. நங்கவள்ளி
3. தாரமங்கலம்
4. மேச்சேரி
5. ஓமலூர்
6. காடையாம்பட்டி
7. சேலம்
8. பனமரத்துப்பட்டி
2. காரிப்பட்டி
10. வாழப்பாடி
11. கங்கவள்ளி
12. பெத்தநாயக்கன்பாளையம்
13. ஆத்தூர்
14. ஏற்காடு
15. தலைவாசல்
16. வீரபாண்டி
17. இராசிபுரம்
18. வெண்ணந்தூர்
19. நாமகிரிப்பேட்டை
20. நாமக்கல்
21. புதுச்சத்திரம்
22. சேந்தமங்கலம்
23 கொல்லிமலை
24. எருமைப்பட்டி
25. மோகனூர்
26. பரமத்தி
27. கபிலர்மலை
28, பள்ளிப்பாளையம்
29. திருச்செங்கோடு
30. எலச்சிபாளையம்
31. மல்லசமுத்திரம்
32. சங்ககிரி
33. இடைப்பாடி
34. கொங்கணாபுரம்
35. மகுடஞ்சாவடி



ஆலமர்செல்வன் காயநிர்மலேசுவரர் கோயில், ஆத்தூர்
சோழர் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு

பொன்முடி அச்சகம் அம்மாப்பேட்டை சேலம்-3. தொலைபேசி: 66221